சேலம் மாவட்டத்தில் கல்கி – II

KALKI
29.3.87
ரூ. 1.50


கல்கி



வறண்டு வரும் ஏற்காடு



ஊனம் இவருக்கல்ல; அரசுக்குத் தான்!



உங்கள் விழிகள் முன்னால் வண்ணங்கள் உயிர்பெற்று மலரும்

ENFIELD


வண்ணம். ஆம். இது இயற்கை நமக்கு அளித்த ஒப்பற்ற பரிசுகளில் ஒன்று. வண்ணம்தான் இப்பரந்த உலகிற்கு ஒரு ஒப்பற்ற கவர்ச்சியையும் வசீகரத்தையும் அளித்துள்ளது. வண்ணம் இல்லையெனில், கேளிக்கைகள் சோபை இழந்து போகும். வண்ணம் இதை முழுமையாக அறிந்துள்ளது என்ஃபீல்ட் (Enfield)

உதாரணமாக என்ஃபீல்ட் 203R டிவியை எடுத்துக் கொள்ளுங்கள். வியக்கத்தக்க சிறப்பு அம்சங்களுடன் ஜப்பானிலிருந்து உங்களுக்காக தருவிக்கப்பட்ட டி வி. அதை இயக்குங்கள். தனித்தன்மை வாய்ந்த ''பர்ஸ்ட் கிளீனிங் சர்க்யூட்'' (Burst Cleaning Circuit) அதி நேர்த்தியான வண்ணங்களுக்கு வழி வகுக்கிறது. ''யூனிகலர் சர்க்யூட்'' (Unicolour Circuit) அமைப்பு தானாகவே வண்ண வேறுபாடுகளை அவ்வப்போது சரிசெய்து, எப்போதும் சரியான கண்குளிர் வண்ணங்களைத் தருகிறது ''வோல்டேஜ் சிந்தசைசர்'' (Voltage Synthesizer) எல்லா சமயத்திலும் படங்கள் மிகத் துல்லியமாக வருவதற்குத் தொடர்ந்து செயல் படுகிறது. இவை மட்டுமல்ல இதன் சிறப்புகள். பலவிதப் பணிகளைச் செய்யும் ''ரிமோட் கண்ட்ரோல்'' (Remote Control), ஒலி அளவு, சானல், வண்ணம் ஆகியவற்றை பற்றிய தகவல் களைத் திரையில் பளிச்சிடும் அமைப்பு, என்ஃபீல்ட் 203R டிவியின் சீரிய அம்சங்களின் பட்டியலுக்கு முடிவே கிடையாது!

உயர்நுட்பத்தின் அடிப்படையில், வண்ணங்களைப் பற்றி முற்று மாக அறிந்திருப்பதால் மற்றொரு உன்னத டிவியையும் அளிக்கிறோம். என்ஃஃபீல்ட் 200E. எகானமி (Economy) டிவி ஆகிய இது எகானமி என்ன என்பதற்கு இது ஒரு புதிய விளக்கம் அளிக்கிறது.

நீங்கள் கலர் டிவி வாங்க தற்சமயம் தயாராக இல்லையென்றால் பரவாயில்லை. மனம் தளரவேண்டாம். என்ஃபீல்ட் டிவிகளுக்கு உரித்தான உயர்ந்த தரமும், படச் சிறப்பும் கொண்ட கறுப்பு-வெள்ளை டிவிகளையும் அளிக்கிறோம். மூன்று மாடல்களில் இவை உண்டு. 14" 'போர்ட்டபிள்'' (Portable), 20" 'ஹாரிஸாண்டல்' மாடல் (ஷட்டர்களுடனோ அல்லது இல்லாமலோ) மற்றும் இன்றைய நவீன போக்குகளுக்கு ஏற்ப 20" வெர்ட்டிகல் (Vertical) மாடல்

ஆகவே, எந்த டிவியை வாங்குவது என்று முடிவெடுப்பதற்கு முன்பு வண்ணங்கள் உயிர் பெற்று மலர்ந்து வருவதைக் கவனியுங்கள். உங்கள் மனது சரியாக முடிவு எடுக்க உங்கள் கண்கள் வழி காட்டட்டும்.



என்ஃபீல்ட் டிவி


கலர் &
கறுப்பு-வெள்ளை

ஒருமுறைப் பார்த்துவிட்டால், வேறு எதையும் விரும்பமாட்டீர்கள்

● சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, வேலூர், ஆற்காடு, மற்றும் ராணிப்பேட்டையில் மட்டுமே கிடைக்கிறது.

Mudra: M : EEL : 039 Tam

ஐந்தாவது டெஸ்ட்!



காவஸ்கர் — மறக்க முடியாத இன்னிங்ஸ்

ஐந்து நாள் டெஸ்ட் என்பது சாகும் தருவாயில் இருக்கிறது என்று சொல்கிறார்கள். "ஒருநாள் கிரிக்கெட்டின் 'உடனடி திமுர் பம்பர்' சூழ்நிலையில், ஐந்து நாள் டெஸ்ட் வழக்கொழிந்து கொண்டிருக்கிறது என்று நம்பத் தயாராகி இருக்கிறோம். பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்கும் இடையே இப்போது நடந்த தொடரில் முதல் நாலு டெஸ்ட்களில் நான்காவது ஐந்தாவது தினங்களில் மொத்த அடெண்டன்ஸ் ஐம்பது பேரும் ஓரிரு நாய்களும்தான்! பரிபூரணமாகச் செத்துப் போன பிட்ச் அமைத்து, ஒரு நாளைக்குச் சுமார் 150 ரன்களுக்கு மேல் இல்லாமல் பார்த்துக்கொண்டார்கள். ஐந்தாவது தினத்தில், 'அம்பயருக்குக் கூட பௌலிங் கொடுக்கலாம்' என்று மக்களைப் பேச வைத்தார்கள். ஆனால் ஐந்தாவது டெஸ்ட் இதற்கெல்லாம் நஷ்ட ஈடு செய்துவிட்டது. கஸ்தூரி ரங்கனின் 'புழுதிக் கூடை' என்று வர்ணிக்கப்பட்ட பெங்களூர் பிட்ச், ஒவ்வொரு பந்து போடப்பட்ட போதும் கிராமத்து ரஸ்தாவில் லாரி போனாற்போல் புழுதி கிளப்பியது. மனீந்தரும் தௌஸீஃப்பும் போடுவதெல்லாம் நெஞ்சுயர பம்பர்களாக எழும்பின! சிலது சாரைப் பாம்பு போல் உருண்டன! ஒரு நாளைக்கு 14, 15 விக்கெட் விழுவது சகஜமாகி, மொத்த டெஸ்ட்டும் மூன்று நாட்களுக்கு மேல் தாங்காது என்றே தோன்ற ஆரம்பித்தது.

நவீன கிரிக்கெட்டில் உணர்ச்சிவசப் படுவதும், கையைக் காலை ஆட்டி அழிச்சாட்டிய ரகளை பண்ணுவதும் சகஜமாகிவிட்டது. மியான்தாத் எப்போதும் போல் முறைத்தார். அவுட் கொடுக்கப்பட்ட பின்னரும் கோட்டை விட்டு நகராமல் முரண்டு பண்ணினார். ஆனாலும் என்ன, முதலில் ஆட ஆரம்பித்த பாகிஸ்தான் ஆட்டக்காரர்கள் பெவிலியனில் ஏதோ அவசர வேலை வைத்திருப்பது போலத் திரும்பி வந்தார்கள்! நமது ஆட்டக்காரர்களும் ஏறக்குறைய எல்லாப் பந்துகளுக்கும் அம்பயரை நோக்கி ஓர் எம்பு எம்பி, 'ஹௌஸ் தட்' என்று அலறுவது நன்றாயில்லைதான்.

அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த, பெங்களூரின் சமர்த்து ரசிகர்கள்கூட, சோடா பாட்டில் எறியத் தொடங்கியதற்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. தௌஸீஃப் அம்பயரிடம் வெங்சர்க்கார் பற்றிக் கையைக் காலைத் தேய்த்து முறையிட்டு, கல்லுளிமங்கத்தனம் பண்ணினார். போதாக்குறைக்கு வெங்சர்க்காரை நோக்கி தௌஸீஃப் அசிங்கமாகக் கையைக் காட்ட அவர் பதிலுக்குப் பாட்டை ஓங்க, கிரிக்கெட்டா அல்லது தாராசிங்—செந்தேள் சண்டையா என்று தெரியவில்லை!

சுஜாதா

''கிருஷ்ணமாச்சாரி ஸ்ரீகாந்த்'' என்று கமெண்டேட்டர் நீட்டி முழக்கிக் கூறி முடிப்பதற்குள் அவர் 24 ரன் அடித்தாலும் அடிப்பார்; அல்லது திரும்பி வந்து உட்கார்ந்து விட்டாலும்விடுவார்! அவர் ஆட ஆரம்பித்ததும் இந்தியா தேசமே வயிற்றில் புளியைக் கரைத்துக் கொண்டு பரபரப்பு ஜுரத்தில் தவிக்கும். இந்த யாக்கை நிலையாமைதான் ஸ்ரீகாந்த் ஆட்டத்தின் 'திரில்'. கிரீஸில் சற்று நிலைத்து பந்தைச் சரியாகப் பார்க்க ஆரம்பித்ததும், எந்த ஜாதி பவுலராக இருந்தாலும் கந்தலாகக் கிழித்துவிடுவார். ஆனால் அந்தக் கணங்கள் வரும்வரை.....?!

இம்மாதிரி தூள் பறக்கும் விக்கெட்டில், ஸ்பின் போலிங்கில் மார்புயரத்துக்கு எழும்பும் பந்தை விளையாட மிக மிக அனுபவம் வேண்டும். 'பாட் பிளே' என்று சொல்லி, கொஞ்சம் ஷார்ட் பிட்சாக இருந்தால் தரையில் படுமுன்னரே காலை நீட்டிப் பந்தைத் தடுத்துவிட வேண்டும். இதில் நவீன எல்.பி. டபிள்யூ விதியில் பாட்ஸ்மனுக்கே ஆதரவு அதிகம். எகிறி அடிப்பது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஸ்டம்ப் பிடுங்கிக்கும். கிரிக்கெட்டா, ஃபுட்பாலா என்று அலுப்பு ஏற்படும்படி ரொம்பப் பொறுமையாக இப்படி ஆடுவதில் தேர்ந்தவர் காவஸ்கர் ஒருவர் தான்.

நான் இந்த டெஸ்ட் மாட்ச் பார்த்தது சங்கர் ரமணி உபயத்தினால். பெவிலியனில் கபில்தேவின் மடியிலேயே ஒரு ஸீட் கிடைத்தது. எல்லாரையும் கிட்டத்தில் கவனிக்க முடிந்தது. விதிவிலக்கின்றி எல்லாரும் தாயத்து,கறுப்புக்கயிறுகட்டியிருக்கிறார்கள். பின்னியின் கன்னம் உப்பிய ஜூனியர் கையில் கூடக் காசிக் கயிறு. காவஸ்கரின் பையன், அப்பா ஆடும்போது பதற்றம் இன்றிப் பார்க்கிறான். (கையில் முதல் இன்னிங்ஸின் சொறிப் பந்து.) பெரும்பாலான ஆட்டக்காரர்கள் விக்கெட் விழும் வேகத்தில் டென்ஷன் தாங்காமல் மாட்ச் பார்ப்பதற்குப் பதில் டிரெஸ்ஸிங் ரூம் போய்ப் படுத்துக் கொண்டார்கள்.

சங்கீதா போன்ற சின்ன நடிகைகள், பொங்கப் பொங்கக் குதித்து வந்து இம்ரான் இருக்கும் அறைக்குள் நுழைய முயன்று, அதிகாரிகளால் துரத்தப்பட்டார்கள். இம்ரான் செக்கச் செவேல் என்று அழகாக இருக்கிறார். கண்கள்தான் இருக்குமிடம் தெரியவில்லை. அக்ரம் வசீகரமாக இருக்கிறார். மற்ற பாகிஸ்தானியர் நம் இந்தியர் போலத்தான்.

ரிஸப்ஷனில் வெஸ்ட்எண்ட்காரர்கள், மிட் ஆன் பஜ்ஜி, மிட் விக்கெட் ஸூப் என்றெல்லாம் பெயர் வைத்து வழங்கினார்கள். பாகிஸ்தானியர், வாங்கிபாத், மிளகாய் பஜ்ஜி எல்லாவற்றையும் பேர் பண்ணினார்கள். கிரிக்கெட் அதிகாரிகள் முன் குடிப்பதற்கோ சிரிப்பதற்கோ தயங்கிய நமது ஆட்டக்காரர்கள், சாகபட்சிணிகளாகச் சமர்த்தாக இருந்தார்கள். சைட் அடிக்கவும் அதிகம் பெண்கள் இல்லை. இருந்த சிலர், உயர் அதிகாரிகளின் மனைவியர்; அல்லது ஆட்டோகிராஃப் புத்தகத்துடன் குழந்தைகள்!

எல்லாரும் இந்தியா ஜெயிக்கும் என்ற உற்சாகத்துடன் இருக்க, ராஜன் பாலா, ''வி ஆர் கோயிங் டு லூஸ் திஸ் மாட்ச்'' என்றார். ''நாளைக்குப் பார்; முதலில் அஸாருத்தீன்; அப்புறம் பழையபடி ஊர்வலம்''. ஏறத்தாழ அப்படியே நடந்தது. ஆனால் இடையிடையே நம்பிக்கையும் தலைதூக்கியது. சரியும் விக்கெட்டுகளுக்கும் வெற்றிக்குத் தேவையான ரன்களுக்கும் இடையில் அப்படி ஒரு போட்டா போட்டி. காவஸ்கர் தன் வாழ்நாளிலேயே மறக்க முடியாத செஞ்சுரி நோக்கி தீர்மானமாகச் சென்று கொண்டிருக்கையில், விதி யாரை விட்டது! 96—ல் அவுட்டாகி டிரெஸ்ஸிங் ரூமுக்குள் நுழையும் போது கண்களில் நீர்!

இலக்குக்குப் பதினேழு ரன்களே பாக்கி. அவ்வளவு அருகில்வந்தபின் பார்வையாளர் மூச்சே நின்று போனது. மைதானம் முழுவதும் மரண அமைதி. வாங்கி வந்த பட்டாசெல்லாம், பூமாலையெல்லாம் வேஸ்ட் என்பது உறுதியாயிற்று. யாரைக் குறை கூறுவது? எதனால் தோற்றோம்? காரணம் பிட்ச் என்றால் அது பாகிஸ்தானுக்கும் பொது. இந்தியா முதல் இன்னிங்ஸில் 145 ரன்களுக்குப் பொறுப்பில்லாமல் அவுட் ஆனது தலையாய காரணம். வெங்சர்க்கார் ஐம்பது எடுத்தபின் துளிர்த்துப் போய்த் தம் விக்கெட்டைத் தூக்கி எறிந்தது தப்பு. மற்றொரு காரணம், பாகிஸ்தான் எட்டு விக்கெட் நஷ்டத்துக்கு 198 ரன்களில் இருந்தபோது, அவர்களை மேலும் 51 — ரன்கள் எடுக்க அனுமதித்தது அநியாயம்! இந்த மாதிரி பிட்சில் கடைசி இன்னிங்ஸ் ஆடுவது கொடுமை. இதை உணர்ந்து, ரெஸ்ட் தினத்தின்போது காப்டன், மற்றவர்களுடன் கலந்து பேசி, வித்தியாசமான பாட்டிங் ஆர்டர் என்ற போர்த் திட்டம் வகுத்திருக்க வேண்டும்.

பெவிலியன் நிழலில் இருந்து கொண்டு பேசுவது சுலபம்தான். வெயிலில் நின்று குவாஸிம், தௌஸீஃப் ஆகியோரின் நேர் கோணத்தில் திரும்பும் திறமையான பந்து வீச்சை ஒரு பைத்தியக்கார விக்கெட்டில் விளையாடிப் பார்த்தால் தெரியும். இவ்வளவு அருகில், ஆசை காட்டும் ஆப்பிள் போல் தொங்கிய வெற்றிக் கனியைப் பறிக்காமல் விட்டதில் யாவருக்கும் ஏமாற்றம்தான் என்றாலும், ஐந்து நாள் கிரிக்கெட்டைச் சுவாரஸ்யமாக்கியதற்கும், ஒவ்வொருபந்தும் ஒவ்வொரு இதயத் துடிப்பைத் தள்ளிப் போட்டதற்கும், கடைசிப் பந்து வரை — கடைசி நகக்கடி வரை — இருந்த பதற்றத்துடன் கூடிய ஜெயித்து விடுவோம் என்ற நம்பிக்கைக்கும் நன்றி.

புகைப்படம்: பாலாஜி

“சுட்டிக்காட்டுங்கள்; நடவடிக்கை எடுக்கிறோம்!”

* பொன்னையன்



நமது சேலம் மாவட்டச் சுற்றுப் பயணத்தின் போது, அமைச்சர் பொன்னையன் தொகுதியான திருச்செங்கோடு தொகுதியில், நம்மிடம் கூறப்பட்ட சில புகார்கள் பற்றிப் பொன்னையனிடமே கேட்டோம். அவற்றுக்கு அவரே இங்கு பதில் சொல்கிறார்......

“திருச்செங்கோடு அருகிலுள்ள காங்கயம்பாளையத்துக்கான ரோடு, கடந்த 82 இல் போடப்பட்டது. அதன் பிறகு அது பராமரிக்கப்படவேயில்லை. பொதுப்பணித்துறையினரைக் கேட்டால், ஊராட்சிதான் பராமரிக்க வேண்டும் என்றும் ஊராட்சியைக் கேட்டால் பொதுப்பணித்துறைதான் பராமரிக்க வேண்டும் என்றும் பதில் சொல்கிறார்களாம். இதுபற்றி உங்களிடம் கூட அந்த ஊர் மக்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள். நீங்களும் அதைக் கண்டு கொள்ளாமல் விட்டு விட்டீர்களாமே?''

''எப்படியோ, அந்த ரோடு பொதுப் பணித்துறையினரிடம் ஒப்படைக்கப்படாமல் விடப்பட்டு விட்டது. இப்போது ஒப்படைக்கப்பட்டு விட்டது. வரும் ஏப்ரலில் அந்த ரோடு செப்பனிடப்படும் வேலை துவங்கப்படவுள்ளது. இந்நிலையில் நான் அதைக் கண்டுகொள்ளாமல் விட்டு விட்டேன் என்பது தவறு. எதுவும் ஒரே நாளில் நடந்து விட முடியாது.''




* எங்கள் கோவில்களுக்குப் பட்டா வேண்டும்......

''ரோடுசரியில்லாததைக் காரணம்காட்டி, காங்கயம்பாளையம் வழியாகச் சென்று கொண்டிருந்த சில தனியார் பஸ்கள் அந்த வழியாகச் செல்வதை நிறுத்திவிட்டன என்றும், அதுபற்றியும் நீங்கள் ஏதும் கவனிக்காததால், ஊர் மக்களேதான் அந்தத் தனியார் பஸ் முதலாளிகள் மீது கேஸ் போட்டு நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றும் சொல்கிறார்களே?''

''முதலில் ஒரு வழித்தடத்தில் பர்மிட் வாங்குவது, பிறகு லஞ்சம் வாங்கும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளைக் கண்டு பிடித்து மெல்ல மெல்ல அந்த வழித்தடத்திலிருந்து டைவர்ட் ஆகி வேறு வழித்தடத்தில் பர்மிட் வாங்குவது என்பனவெல்லாம் ஆங்காங்கே கொஞ்சம் நடந்து கொண்டுதான் இருக்கிறது. நாங்களும் கண்டு பிடித்து நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம். காங்கயம்பாளையம் விஷயத்தில் ரோடு பராமரிக்கப்பட்டு விட்டால் பிரச்னை தீர்ந்துவிடும்.''

''திருச்செங்கோடு அருகிலுள்ள கூட்டப்பள்ளி வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் தவணை முறையில் வீடு வாங்கியிருப்பவர்களுக்கு ஒரு பெரும் பிரச்னை, கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்குள்ளாகவே அந்த வீடுகளில் பல விரிசலடைந்து, இடிந்து விழும் அபாய நிலையில் இருப்பதுதான். அவற்றைப் பழுது பார்க்கச் சொல்லி வீட்டு வசதி

• கூட்டப்பள்ளி: அபாய நிலையிலுள்ள வீடுகளில் ஒன்று......



வாரியத்திற்கு எழுதினால், அவற்றுக்கான செலவை அவர்கள்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வீட்டு வசதி வாரியம் சொல்கிறதாமே, இது என்ன நியாயம்?

"அந்த வீடுகளில் பல விரிசலடைந்திருப்பது உண்மைதான். காண்ட்ராக்ட்களில் நடக்கும் முறைகேடுகளால்தான் அப்படிக் கட்டப்பட்ட நான்கைந்து ஆண்டுகளுக்குள்ளாகவே விரிசலடைந்து விடுகின்றன. அதனால் அந்தக் காண்ட்ராக்டர்களின் மீது நடவடிக்கை எடுப்பதற்கான வழிமுறைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். விரைவில் அவை பழுது பார்த்துத் தரப்படும்."

"அந்தக் குடியிருப்புக்குள் கோயிலுக்கான இடம் என்று ஏதும் ஒதுக்கப்படவில்லை. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பதற்கிணங்க, அவர்கள் அங்குள்ள காலியான இடமொன்றில் பிள்ளையார் கோயில் ஒன்றையும் மாரியம்மன் கோயில் ஒன்றையும் வெறும் கீற்றுக் கொட்டகை அளவில் ஏற்படுத்தியுள்ளார்கள். ஆனால் இவற்றுக்கு வீட்டு வசதி வாரியம் பட்டா கொடுக்க மறுக்கிறதாம். அதனால் அங்குள்ள பெண்கள் வீட்டு வசதி வாரியத்தின் மேலும் உங்கள் மேலும் அதிருப்தியடைந்திருக்கிறார்கள்...."

"அங்கு கோயில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது எனக்குத் தெரியாது. உடனடியாக வீட்டு வசதி வாரியத்திற்கு எழுதிப் பட்டா கொடுக்க ஆவன செய்கிறேன்."

"அந்தக் குடியிருப்புக்குள் குடிநீர்ப் பிரச்னை தலைவிரித்தாடுகிறது!"

"உண்மைதான். கடந்த 69 இல் கொக்கராயன் பேட்டையிலிருந்து திருச்செங்கோட்டுக்குக் காவிரி நீர் கொண்டு வரப்பட்டது. அப்போது சில வழியோரக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்யப்பட்டது. இப்போது அது போதுமானதாக இல்லை. அதனால், எல். ஐ. சி. கடனுதவியுடன் குமாரபாளையத்திலிருந்து திருச்செங்கோட்டுக்குக் காவிரி நீர் கொண்டு வரும் திட்டம் ஏழு கோடி செலவில் போடப்பட்டு, வேலையும் துவங்கப்பட்டு விட்டது. இத்திட்டத்தின் மூலம் ஐம்பத்தாறு வழியோரக் கிராமங்களும் குடிநீர் வசதி பெறும். இது நிறைவேறும் வரை குடிநீர்ப் பிரச்னை இருக்கத்தான் செய்யும்.

"தொகுதிக்கே சம்பந்தமில்லாத அமைச்சர் வி. வி. சுவாமிநாதன் அண்மையில் திருச்செங்கோடு சென்றிருந்த போது, அங்குள்ள பெண்கள் அவரை வழிமறித்திருக்கிறார்கள். அப்படியானால் பிரச்னை எத்தனை பூதாகாரமாக இருக்க வேண்டும்?"

"பிரச்னை இருப்பதை ஒப்புக் கொள்கிறேன். அதற்காகத்தானே இரண்டாவது திட்ட வேலைகள் துவங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அமைச்சர் வி. வி. சுவாமிநாதனை வழிமறித்ததெல்லாம் அரசியல் நோக்கம் கொண்டதே தவிர, பிரச்னையை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல. அதுபற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை."

"திருச்செங்கோடு பஸ் ஸ்டாண்டுக்கு அருகிலுள்ள குளம், பராமரிக்கப் படாமல் கிடப்பதால், அதுதான் அங்கு கொசு உற்பத்தி ஸ்தானமாக இருக்கிறது. அதை மூடி விட்டால் கூடப் பரவாயில்லை என்கிறார்கள்."

"அதை மூடிவிட்டால் அங்குள்ள கிணறுகளின் கதி படுமோசமாகி விடும். அதனால், அதைப் பராமரிப்பதற்காக ஒரு லட்சம் ரூபாய்க்கும் மேலான திட்டம் ஒன்றைச் செயல்படுத்த உள்ளோம். அப்போது நிலைமை சீராகிவிடும்."



• மனோகரன், செங்கோடன்: கட்சியிலிருந்து நீக்கப் பட்டவர்கள்......?

"கூட்டப்பள்ளி குடியிருப்பிலுள்ள ஏழாவது வார்டின் அ. இ. அ. தி. மு. க. அவைத் தலைவர் மனோகரனும் செயலாளர் செங்கோடனும் எங்களைச் சந்தித்த போது, 'அமைச்சர் தொகுதி இதுன்னு சொல்லிக்கவே 'ஷேமா'த்தாங்க இருக்கு. தொகுதிப் பக்கமே அவர் வர்றதில்லே. நாங்களும் பல முறை சொல்லிப் பார்த்து அலுத்திட்டோம்...' என்றார்கள்!"

"அவர்கள் இரண்டு பேருமே கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள். கடந்த உள்ளாட்சித் தேர்தலில் கட்சிக்கு எதிராக வேலை பார்த்தவர்கள். அவர்கள் அப்படித்தான் சொல்வார்கள்."

"ஆனாலும் நீங்கள் தேர்தல் சமயத்தில் வோட்டுக் கேட்கச் செல்வதோடு சரி, மற்ற

அன்புடையீர்!
உங்கள் கவனத்திற்கு!!

க்ளாக்ஸோ®

ஸன்ஷைன்
குழந்தைப் பாலுணவின்

புதிய பெயர்

க்ளாக்டோ(T)

படி தொகுதிப் பக்கம் எட்டிப் பார்ப்பதே இல்லை என்பது உண்மைதானே?''

''உண்மைதான். காரணம், எனக்கு தைராய்டு சுரப்பிகளிலுள்ள சில பிரச்னைகளால் ஏற்பட்டிருக்கும் உடல்நலக் குறைவு தானே தவிர, வேறில்லை. அதனால் நான் போக முடியாது என்பதாலேயே, என்னுடைய தொகுதிப் பணிகளைக் கவனிக்கவென்றே, வாசுதேவன் என்பவரை நியமித்திருக்கிறேன். என் தொகுதியிலுள்ள இருநூற்றுத் தொண்ணூற்று மூன்று கிராமங்களுக்கும் நானே சென்று கொண்டிருக்க வேண்டுமானால், என்னால் வேறு வேலைகளையே பார்க்க முடியாது!

''அதோடு, நான் தொகுதிக்குச் செல்லவில்லை என்றால் என்ன? அதனால் வேலைகள் எதுவுமே பாதிக்கப்படவில்லை. 'இனிமேல் திருச்செங்கோடு தொகுதிக்கு ஆழ்குழாய்க் கிணறுகளை போடக் கூடாது' என்று அரசே தடை விதிக்கும் அளவுக்கு, ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டுள்ளன. ஏராளமான பஸ்கள் விடப்பட்டுள்ளன. என் தொகுதியில் ரோடு இல்லாத கிராமங்களே கிடையாது. ஏராளமான அளவில் கறவை மாடுகளுக்கான கடன்கள் கொடுக்கப்பட்டுள்ளதும் என் தொகுதியில்தான். இரண்டாயிரம் பேருக்குச் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளேன். மற்றவர்களைப் போல், வங்கிகளிலிருந்து நான் திரும்பி வராத கடன்களைப் பெற்றுத் தரவில்லை. அத்தனையும் திரும்பி வரும் கடன்களாக வாங்கிக் கொடுத்துள்ளேன். சொல்லப் போனால், இன்னும் இரண்டு தேர்தல்களுக்கு நான் தொகுதிப் பக்கம் போகாமலேயே வெற்றி பெற முடியும். அந்த அளவுக்கு நான் செய்திருக்கிறேன். ஆனால், துரதிர்ஷ்டவசமாக நீங்கள் சந்தித்தவர்களெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்களாகவே இருந்திருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்......''

''இருந்திருக்கலாம். அவர்கள் சில விஷயங்களைக் கொஞ்சம் மிகைப்படுத்தியும் சொல்லியிருக்கலாம். ஆயினும் பிரச்னைகள் இருப்பது உண்மைதானே?''

''பிரச்னைகளே இல்லாமல் எப்படி இருக்க முடியும்? உதாரணத்திற்கு, தமிழகத்திலுள்ள அத்தனை பள்ளிகளுக்கும் கட்டட வசதி செய்துதர வேண்டுமானால், ஐந்நூற்று இருபத்தைந்து கோடி ரூபாய் வேண்டும். ஆனால் மத்திய அரசோ இந்தியா முழுமைக்குமே நானூறு கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறது. இந்நிலையில் பள்ளிகளுக்கான கட்டடப் பிரச்னைகளை எப்படித் தீர்க்க முடியும்? ஆனாலும் மக்களும், உங்களைப் போன்ற பத்திரிகையாளர்களும் சுட்டிக் காட்டும்போது, முடிந்தவரை நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டுதான் வருகிறோம். அந்த வகையில் கட்சி சார்பில்லாத கல்கியின் சமுதாயப் பணிகளையும், விமர்சனங்களையும் நான் வரவேற்கிறேன். ஒரு பத்திரிகையின் பணியும் அப்படித்தான் இருக்க வேண்டும்....''

''கட்சி சார்பில்லாத பத்திரிகை கல்கி என்கிறீர்கள். உண்மை. ஆனாலும் நாங்கள் ஆளுங்கட்சியைப் பற்றிச் செய்யும் விமர்சனங்களைப் படிப்பவர்களில் சிலர், 'கல்கி கருணாநிதியின் ஆதரவுப் பத்திரிகை' என்று கூடச் சொல்கிறார்கள்...!''

''கல்கியில் வரும் விமர்சனங்களை நான் கூர்மையாகக் கவனித்துக் கொண்டுதான் வருகிறேன். நிச்சயமாக நீங்கள் 'எதையும் கட்சி சார்போடு அணுகி விமர்சிப்பதில்லை. ஒரு பத்திரிகை ஆளுங்கட்சியை ஆதரித்தே எழுத வேண்டும் என்று நினைப்பது எப்படிப் பத்திரிகைச் சுதந்திரமாகும்? ஆளுங்கட்சியின் நடவடிக்கைகளைக் கண்டிப்பாகப் பத்திரிகைகள் விமர்சனம் செய்ய வேண்டும். அப்போதுதான் நாங்கள் தவறிருந்தால் திருத்திக் கொள்ள முடியும். அந்த வகையில் தான் நீங்கள் எழுதுகிறீர்கள். அதைத்தான் நானும் வரவேற்கிறேன்.''

சந்திப்பு: இளங்கோவன்

அடுத்த இதழில்...



தமிழ்நாட்டின் கிராமத்தண்ணீர் பிரச்னையைப் பற்றி அமைச்சர் ராஜாராமுடன் விவாதிக்கிறார்கள் வாசகர்கள்.





* ஏற்காடு ஏரி



* வறண்டு போன கிளியூர் அருவி.

* வெட்டப்பட்ட .....

வறண்டு வரும் ஏற்காடு


"மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம்."

"மரங்கள் இயற்கை தந்த வரங்கள்."

"ஒரு மரம்; ஒரு வீடு."

— சபாஷ்; எத்தனை அருமையான வாசகங்கள். காடு, ரோடு, இப்படி எல்லா இடங்களிலும் இந்தக் கோஷங்கள் கொண்ட அறிவிப்புப் பலகைகளைக் காணலாம். இதெல்லாம் போதாதென்று ஆரம்பப் பள்ளியிலிருந்து, ஆஸ்பத்திரி வரை மரம் நடுவிழாக்கள் கையில் மண்வெட்டியோடு மந்திரிகள், போஸ்டர்கள், புகைப்படங்கள், ஐ. வி. இத்யாதி...

மரம் நட்டால் போதுமா? நடப்படுகிற மரங்களை விடப் பல மடங்கு வேகத்தில் மரங்கள் வெட்டப்படுகின்றனவே அதைத் தடுக்க வேண்டாமா? பின்னதைச் செய்யாமல் முன்னதைச் செய்து என்ன பயன்? மரங்கள் வெட்டப்படக்கூடாது என்பதற்குத் தான் சட்டம் இருக்கிறதே என்றால் சட்டத்தை மீறத்தான் மரம் வெட்டுமுன் பணம் வெட்டப்படுகிறது. மரம் வெட்டுவதில் அதிகாரி, ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்றெல்லாம் பாகுபாடே கிடையாது. பேசப்படுவதெல்லாம் பணம், பணம், பணம்தான்!



சேலத்தில் பார்த்தால் சாரி சாரியாக வெட்டப்பட்ட மரங்களைச் சுமந்து கொண்டு லாரிகள் செல்லுகின்றன.

"எல்லாம் ஏற்காட்டிலிருந்துதான் வருகின்றன" என்று சொன்னார் சேலத்து நண்பர்.

ஏற்காடு.—

மூவாயிரம் அடிவரை ஏற்றம் அவ்வளவாகத் தெரியவில்லை. பின்னர் உள்ள 2,500 அடியில் படுபயங்கரமான ஏற்றங்கள், வளைவுகள். வழக்கமான மலைவாசஸ்தலங்களைப் போலவே பெரிய ஏரி. ஆசியாவிலேயே மிகச் சிறந்த கான்வெண்ட் உண்டு. ஏமாற்றப்படும் மலைவாழ் மக்களும் இருக்கிறார்கள்.

நம்மை அழைத்துச் சென்ற சுந்தரராஜன் என்பவர் காப்பித் தோட்டம் வைத்துள்ள





* டிமெல்லோ * சுந்தரராஜன்



..... மரங்கள்

ஒரு சிறு விவசாயி. ஆளுங்கட்சியான அ.இ. அ. தி. மு. க. தொழிற்சங்கத் தலைவரும் கூட: தொடர்ந்து ஏற்காடு மலைப்பகுதியில் மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டிருப்பதால் அங்கு காப்பி பயிரிடுவது எந்த அளவுக்குக் குறைந்துள்ளதென்பது அவர் சுற்றிக் காட்டிய இடங்களைப் பார்த்தபோது புரிந்தது. முன்பு காப்பி இருந்த இடங்களிலெல்லாம் : இப்போது வெறும் நிலம்தான் காட்சியளிக்கிறது.

"காப்பி பயிர் குறைந்ததற்குக் காரணம்?"

"மழை அளவுதான் ஸார். காப்பிக்கு விட்டு விட்டு மழை பெய்து கொண்டே இருக்க வேண்டும். முன்பு எல்லாம் சரியாகப் பெய்து கொண்டுதான் இருந்தது. இப்போது அப்படிப் பெய்வதில்லை. இது இயற்கை செய்த தவறல்ல, நம் தவறு. இங்குள்ள மரங்களையெல்லாம் கன்னாபின்னாவென்று வெட்டிக் கொண்டு போனால் எப்படி மழை பெய்யும்? அதனால்தான் முன்பெல்லாம் ஆண்டுக்கு எழுபது அங்குலமாக இருந்த மழையளவு இப்போது நாற்பது முதல் ஐம்பது அங்குலமாகக் குறைந்து விட்டது.

பேசிக் கொண்டே சன்னியாசி மலை என்ற மலைப்பகுதிக்குச் சென்றோம். போகுமிடமெல்லாம் மரங்களை அடியோடு வெட்டிய அடையாளங்கள்......

"இதெல்லாம் வனப்பகுதியாயிற்றே! எப்படி வெட்டுகிறார்கள்? காவல் இருக்குமே?"

"எல்லாத் துறைகளிலும் மண்டிவிட்ட ஊழல் பேய் இந்தத் துறையை மட்டும் எப்படி விட்டு வைக்கும்?" —வருத்தத்தோடு வந்தன, சுந்தரராஜனிடமிருந்து வார்த்தைகள்.

நாங்கள் சுற்றிப் பார்த்த பல்வேறு இடங்களிலும்பெரியபெரியமரங்கள் வெட்டப்பட்டிருந்த அவலத்தைத்தான் காண முடிந்தது. இதனால் ஏற்காட்டுக்கே ஏற்காடு (ஏரி + காடு) என்று பெயர் வரக் காரணமாயிருந்த (அட்டைப் படம் பார்க்க) ஏரியிலும் நீரின் அளவு குறைந்துபோய் விட்டது. அதில் நிரம்பி வழியும் தண்ணீர்தான் சிறு ஓடையாக ஓடி, ஓரிடத்தில் உயரமான அருவியாக விழுகிறது. அதற்குக் கிளியூர் அருவி என்று பெயர். அந்த அருவி ஏற்காடு சென்றால் பார்க்க வேண்டிய ரம்மியமான இடங்களில் ஒன்று. ஏரியில் தண்ணீர் ஊற்றுக் குறைந்து போனதால் அந்த அருவியிலும் இப்போது தண்ணீர் இல்லை. காரணம், மரங்கள் வெட்டப்பட்டு மழை அளவு குறைந்து போனதுதான். அதனால் அங்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்தோடுதான் திரும்ப வேண்டியிருக்கிறது. இந்நிலையில் 'ஏழைகளின் ஊட்டி ஏற்காடு' என்று சுற்றுலாத் துறையினர் விளம்பரப் படுத்துவதில் என்ன அர்த்தம் இருக்க முடியும்?

இந்தக் கருத்தையே பிரதிபலிக்கிறார் மே. ஜெர்மனியைச் சேர்ந்த திருமதி டிமெல்லோ. இவர் 1966 லிருந்தே ஏற்காட்டில் வந்து வசித்துக் கொண்டிருப்பவர்.


"உலகத்திலேயே சிறந்த தட்பவெப்ப நிலை இங்குதான் இருக்கிறது' என்று மேல் நாடுகளிலிருந்துவரும்எனது நண்பர்களெல்லாம் அதிசயப்பட்ட காலம் ஒன்று உண்டு. ஆனால் இப்போது அப்படியில்லை. காரணம், மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டிருப்பதால் ஏற்படும் இயற்கையின் மாற்றம் தான்..." என்று வருத்தப்படுகிறார் திருமதி டிமெல்லோ.

ஆக, ஏற்காட்டின் மேல்,வெளிநாட்டினருக்கிருக்கும் அக்கறை கூட நம் மக்களுக்கும் அரசுக்கும் இல்லை என்பது உறுதியாகிறது. இந்நிலையில் காடு வளர்ப்புக்காக அந்நிய நாட்டின் உதவி கேட்பதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது, நமக்கு?

— கௌசல்யா

மேலட்டை வண்ணப்படங்கள், சேலம் மாவட்டம் தொடர்பான புகைப்படங்கள்:

கே. வி. ஆனந்த்


என்னப்பா, நீ நடந்துக்கறது சரியா இல்லையே!
எல்லாம் உங்களாலே வர்றது தான்!


ஜில்லா பரிஷத் வெற்றி
நகர சபைகளில் வெற்றி
ஜில்லா பரிஷத் ஊக்காளர்
நகரசபை ஊக்காளர்


அரியலூர் வெடிகுண்டு விபத்து பற்றி என்ன சொல்றீங்க?
அமைச்சரவைக் கூட்டம்



கல்கி

1987 மார்ச் 29
மலர் 45 இதழ் 35
அக்ஷய பங்குனி 15



தடம் புரண்ட ரயில்கள்!

மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் தடம் புரண்டு இருபத்தைந்து பேர் மரணமுற்றதும் ஏராளமானவர் காயமுற்றதும் சிலர் உயிருக்கு இன்னமும் மன்றாடிக் கொண்டிருப்பதும் மிகப் பெரிய சோகம். நெஞ்சை உருக்கும் கதைகள் நாளும் பத்திரிகைகளில் வெளியாகின்றன. ஆனால், தடம் புரண்டது மலைக்கோட்டை எக்ஸ்பிரஸ் மட்டுமல்ல, தமிழக அரசின் போலீஸ் துறையும் கூடத்தான்! கொஞ்ச நாட்களாகவே தமிழகத்தில் அமைதி நிலவவில்லை. இங்குமங்கும் குண்டுகள் வெடித்து வந்திருக்கின்றன. அவற்றைத் தி.மு.க.வினர்தான் வைத்தார்கள் என்று பழி சுமத்தப்பட்டதே தவிர, அவ்வாறு ஏதும் இன்று வரை நிரூபணமாகவில்லை. மேலும், மீனம்பாக்கம் விமான நிலையத்திலும், பாலசிங்கம் வீட்டிலும் குண்டு வெடித்த சம்பவங்கள்; சூளைமேடு, பாண்டி பஜார், மதுரை முதலிய இடங்களில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்துடன் கூடிய கலவரங்கள்; பணம் பறிப்பதற்காகக் குடும்பத் தலைவர் கடத்தப்படுவது. போன்ற பல நிகழ்ச்சிகள் நடந்தும் இவற்றுக்குக் காரணமானவர்கள் மீது, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இத்தகைய ஒரு சூழலில் தண்டவாளப் பாதுகாப்புப் பணியில் போலீஸார் அலட்சியம் காட்டியது மாபெரும் குற்றம். (ரோந்து வாபஸ் பெறப்பட்டதாகக் கூட ஒரு பத்திரிகைக் குறிப்பு தெரிவிக்கிறது.) காவல்துறையின் இந்தப் பொறுப்பற்ற போக்கு பற்றித் தட்டிக் கேட்போமானால் அத்துறைக்கு அமைச்சராக விளங்கும் எம்.ஜி. ஆர்.தான் பதில் கூற வேண்டியவராகிறார்.

இதைவிடப் பெரிய சோகம், ரயில் விபத்து நடந்து ஐந்து நாட்களாகியும் இதுவரை குற்றவாளிகளைப் போலீஸ் கண்டு பிடிக்காததுதான். இது நமது போலீஸ் தடம் புரண்டது மட்டுமல்ல, அதளபாதாளத்தில் விழுந்து விட்டிருப்பதையும் உணர்த்துகிறது. குற்றவாளிகளை விரைவில் கண்டுபிடித்துக் கைது செய்வது, தமிழக மக்களுக்குப் போலீஸ் ஆற்ற வேண்டிய கடமை என்பது ஒருபுறமிருக்க, நாட்டின் வடமேற்கில் ஒரு வகை பயங்கரவாதிகளை எதிர்த்துக் கொண்டு, தென்கிழக்கில் இன்னொரு வகை பயங்கரவாதிகளுக்கு அடைக்கலமும் தார்மீக ஆதரவும் தருவது என்ற மத்திய அரசின் கொள்கை சரியா, தவறா என்பதை நிர்ணயித்தாக வேண்டும். இதை முடிவு செய்வது என்பது ரயிலைக் கவிழ்த்த குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதில் போலீஸார் அடையும் வெற்றியையே சார்ந்திருக்கிறது.

பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையே உள்ள நல்லுறவு என்ற ரயிலும் தடம் புரண்டுவிட்டது. இந்த விபத்தில் ராஜீவ் காந்தி கண்ணியமாக நடந்து கொண்டிருந்தால் அற்ப சொற்பக் காயங்களுடன் தப்பியிருக்கலாம். 'ஜனாதிபதியின் ரகசியக் கடிதம் அம்பலமானது வருந்துதற்குரியது. அது எப்படி பத்திரிகையாளருக்குக் கிடைத்தது என்பது ஆராயப்படும். ஜனாதிபதி தமது கடிதத்தில் கூறியுள்ள கருத்துக்கள் அரசின் பரிசீலனையில் உள்ளன. அவருக்குக் குறைகள் இருக்குமாயின் உடனடியாக நிவர்த்திக்கப்படும்; தவறுகள் நேர்ந்திருந்தால் உடனே திருத்தப்படும்' என்று பிரதமர் கூறியிருந்தால் நாடாளுமன்றம் இதைப் பெரிது படுத்த முடியாது. ஏனெனில், ஜனாதிபதியே கடிதத்தின் முதல் வரியில், பிரதமரின் நல்லெண்ணத்தைச் சந்தேகிக்காததோடு பாராட்டியே இருக்கிறார். ஆனால், ராஜீவ் காந்தி இவ்வாறு நடந்து கொண்டு ஜனாதிபதியின் கௌரவம், பிரதமரின் கௌரவம் ஆகியவற்றைக் காப்பதற்குப் பதிலாக, இதை ஏதோ ஒரு பலப்பரீட்சை போலாக்கி, தடம் புரண்ட ரயிலைக் கடப்பாரை கொண்டு நெம்பிப் புரட்டி, ஆற்றில் விழச் செய்திருக்கிறார். கோயங்கா வீட்டில் சோதனை, குருமூர்த்தி கைது ஆகியவையெல்லாம் பழி வாங்கும் படலங்களாகிவிட்டன. ரிலையன்ஸ் ஊழலானாலும் சரி, ஜனாதிபதி கடிதமானாலும் சரி, உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்து ஜனநாயகப் பணியாற்றும் பத்திரிகைகள் மீது ஆத்திரப்படுவதில் அர்த்தமில்லை. மாறாக, நன்றி கூற வேண்டும். அரசு ரகசியங்கள் அம்பலமாகின்றனவே என்றால் அரசுத் தரப்பில் ஓட்டைகள் அடைக்கப்பட வேண்டுமே தவிர, பத்திரிகையாளர் மீது பாய்வது அபத்தம் என்பதோடு, பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்கும் ஜனநாயக விரோதச் செயலுமாகும்.

இதற்கிடையில், தமிழக அரசு என்ற லொடக்கு ரயில் கே.ஏ.கே., ஜெகதீசன் ஆகிய இரண்டு பெட்டிகளைக் கழற்றி விட்டு விட்டு ஓடிக் கொண்டிருக்கிறது! அமைச்சர் பதவி அளிக்கவும், பறிக்கவும் முதல்வருக்குப் பூரண உரிமை உண்டு என்றாலும் மாநில நலனைவிட, கட்சி நலனும் சொந்த விருப்பு வெறுப்புக்களும் இதில் புகுந்து விளையாடுமானால் அமைச்சரவை என்ற ரயில் கவிழ அதிக காலம் ஆகாது. சிவப்புக் கொடி காட்டுகிறோம்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

ஒரு நல்ல அலசல்

வட்டமேஜை

• ஸ்ரீரங்கம் கோவிலைப் பற்றிச் சிறிதுமே அறியாத எங்களுக்கு, அதன் பெருமையைச் சிறப்பாக எடுத்துக் கூறி, அவ்வாலயத்தைஎங்கள்மனக் கண்முன்கொண்டு வந்து நிறுத்திய கல்கிக்கு எங்களது மனமார்ந்த நன்றி.

ஆலங்குளம், எம்.டி. பழனி கதிர்.

• திருவரங்கச் சிறப்பிதழ் அட்டைப்படத்தில், மகா விஷ்ணுவுக்கு யக்ஞோபவீதம் இல்லாதது பெருங் குறை. மேலும் பிரும்மா வீற்றிருக்கும் தாமரைத் தண்டு பெருமாளின் நாபிக் கமலத்துடன் இணையாமல் கரத்திலிருந்து புறப்படுவது போலிருக்கிறதே? கவனம் வேண்டாமா?

ஸ்ரீபெரும்புதூர், ராகவாச்சாரி.

• பாற்கடலில் பையத் துயிலும் பரமனின் திரு வுருவத்தை அட்டையில் பிரசுரித்து, பரவசப்படுத்தும் பக்தி அனுபவத்தால் மெய்சிலிர்க்க வைத்த கல்கிக்கு 'அட்டைப் பட திலகம்' விருது வழங்குகிறேன். ம.செ. வின் தூரிகைக்குப் பாராட்டுக்கள்!

ஈரோடு—1, இரா. செல்வமணியன்.

• திருவரங்கச் சிறப்பிதழ் அட்டையைப் பார்த்ததும் திருவரங்கரையே சந்தித்தது போல் மனத்தில் ஒரு நிறைவு ஏற்பட்டது. படம் வரைந்த ம.செ. அவர் களுக்கு என் மனம் நிறைந்த பாராட்டுக்கள்.

கொப்பம்பட்டி, எஸ். வெங்கட்.

• ஸ்ரீமத் அழகிய சிங்கர் பற்றிக் கவிஞர் வாலி அவர்கள் வடித்த பாமாலை அவர் செய்த, செய்து வரும் சேவைக்குச் சூட்டப்பட்ட பிரும்மாண்டமான பூமாலை போல் கண்முன் காட்சியளித்தது.

கும்பகோணம், எஸ். சக்கரபாணிபட்டாச்சார்.

• எங்கள் மனங்கவரும் இதழ்கல்கி தன்பங்கில்
பொங்கும் எழிலிருகும் பூத்தலத்தைச் சேர்த்ததன்
பின்
தங்கக் குடமெடுத்துத் தந்ததிரு வரங்கத்தேன்
வங்கக் கடலெனவே வழிந்ததுகாண் எம்பாவாய்!

சென்னை—14, ஐயாறு எஸ். வாசுதேவன்.

• சுஜாதா கட்டுரை படித்தேன். இறைவன் உறை விடமாகிய ஆலயங்களின் நுழைவாயில் மொட்டைக் கோபுரமாக இருக்கலாமா? முதிர்ந்த — தள்ளாத வயதில் ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் செய்த தொண்டு பாராட்டுக்குரியது மட்டுமல்ல; வணக்கத்திற்கும் உரியது! இந்நிலையில் அவருடைய தொண்டைப் பாராட்டா விட்டாலும் 'அபத்தம்' என்று சொல்ல வேண்டாம்.

நெய்வேலி—3, கே.வி. நாதன்.

• மொட்டைக் கோபுரம் இன்று விண்ணை முட்டும் கோபுரமாகி, அங்கிருந்து ஸ்ரீரங்கத்தின் அழகை வித்தியாசமான கோணத்தில் பார்க்கிறபோது 'முற்றுப் பெறாததை முற்றுப் பெறாமலே வைத்திருப்பதில் இருக்கிற அழகையும் கவிதையையும் இழந்துவிட்டோம்' என்று சுஜாதா கூறுவதையும் எண்ணிப் பார்க்கத்தான் வேண்டும்; ஒதுக்கி விட முடியாது.

வடுவூர், எஸ். கண்ணன்.

• 'பஞ்சாப் — பாமர மக்களின் பலிபீடம்' என்ற கட்டுரை (8.3.87 கல்கி) சரியான உண்மை நிலைகளை எடுத்துக் கூறினாலும், 'பஞ்சாப் பிரச்னையில் எதிர்க் கட்சிகள் வெறும் 'பந்த்'கள்தான் நடத்துகிறார்களே தவிர எந்த ஓர் உருப்படியான யோசனைகளையும் தெரிவிப்பதில்லை' என்ற கருத்தில் நான் மாறுபடுகிறேன். பஞ்சாபில் மார்க்ஸிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், தொண்டர்களும் இடைவிடாத பிரசாரத்தால் மதவெறியை எதிர்த்துப் போராடி வருகிறார்கள். இதில் பல ஊழியர்களை இழந்தும் இருக்கிறார்கள். பயங்கரவாதத்திற்குப் பயப்படாமல் செயல்படும் இக்கட்சியை ரெபைரோவே பாராட்டியிருக்கிறார்.

மானாமதுரை, எஸ். அனந்தன்.

• கட்டுரை, இந்தப் பிரச்னையை விஸ்வரூபம் எடுக்க வைத்த இந்திரா-காங்கிரஸைக் கண்டு கொள்ளாமல் விட்டுவிட்டது. ஜனதா ஆட்சியை சகித்துக்கொள்ளாத இந்திரா அம்மையார், அகாலி தளத்தை எதிர்த்து பிந்தரன்வாலேயை வளர்த்தார். பிந்தரன்வாலே வன்முறையை வளர்த்தார். அதுதான் இன்று மத்திய இ. காங்கிரஸ் அரசுக்குத் தலைவலியாக மட்டுமின்றி இந்திய ஒருமைப்பாட்டுக்கே உலை வைக்கும் அளவுக்கு வளர்ந்துவிட்டது! இப்பிரச்னையைத் தீர்க்க, எதிர்க் கட்சிகள் பல ஆக்கபூர்வமான யோசனைகளைத் தந்தாலும் பிரதமர் ராஜீவ் அவற்றையெல்லாம் ஏற்கும் நிலையில் இல்லை. தவிர, பஞ்சாப் ஒப்பந்தத்தை உருவாக்குவதற்குப் பின்னணியில் உழைத்த எதிர்க் கட்சித் தலைவர்களை மறந்துவிடக் கூடாது.

சென்னை—16, டி. குமரய்யா.

• மண்டையைப் பிய்த்துக் கொள்ளும் அளவுக்கு, மூலைக்கு மூலை, பிரச்னைகளை-வைத்திருக்கும் இந்தியா, ஈழப் பிரச்னைக்கு ராணுவத்தால் தீர்வு காண உதவுவது உசிதமல்ல என்னும் தலையங்கம் ஒரு நல்ல அலசல்!

விருத்தாசலம், கி. நாகராஜன்.

• இலவச காலணித் திட்டம் பற்றி, வாசகர் ஒருவரின் கேள்விக்குத் தாராக அளித்த பதில், திட்டத்தைத் தீட்டியவர்களின் மனசாட்சியைத் தட்டியெழுப்பி, ஒப்புக் கொள்ள வைக்கும் நியாயமான பதில்!

பெங்களூர்—16, ஏவியார்.

கல்கி

ஏப்ரல் 12
புத்தாண்டு
சிறப்பிதழில்





பாலகுமாரன்

எழுதும்

நிழல் யுத்தம்

புதுமைத் தொடர்

★★★

முகுந்தன்

எழுதும்

ஆபத்தான வளைவுகள்

சிரிக்க வைக்கும்
மர்மத் தொடர்

அதிக பக்கங்கள்;
அதே விலை

நீங்கள் கேட்டவை — தராசு

* உமார்த்தி, கோவை—43

? தங்களுக்குத் தெரிந்த மொழிகள் எத்தனை?

! நான்கு. அவற்றுள் அன்பு என்ற ஒரு மொழி நன்கு தெரிந்திருக்கிறதா என்பது தான் முக்கியம். மற்ற மொழிகளை அறிந்திருப்பது வசதி: அவ்வளவே!

* எம். கல்யாணசுந்தரம், திருநரையூர் *

? சட்டமன்ற உறுப்பினர்களையும் சட்ட மன்றத்தில் இல்லாதவர்களையும் பேரவைத் தலைவரே தரக்குறைவாகப் பேசும்போது, அப்படிப்பட்ட சட்டமன்றம் நாட்டிற்குத் தேவைதானு?

! மற்றவர்கள் உணர்ச்சி வசப்பட்டுப் பேசுவதை அவைக் குறிப்பிலிருந்து சபாநாயகர் நீக்குவதுதான் சட்டசபை மரபு. ஆனல், இங்கோ சபாநாயகர் பேசுவதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று, மற்ற உறுப்பினர்கள் கைகூப்பிக் கேட்டுக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. ஆனல் அதற்காகச் சட்டமன்றத்தையே ஒழித்துவிடக் கூடாது. எம்.எல்.ஏ.க்கள் வருவார்கள், போவார்கள். சட்டமன்றம் நிரந்தரமானது.

* பழ. நாகப்பன், சென்னை—41

? பார்த்தசாரதி கோயிலுக்கு எம்.ஜி.ஆர். திடீர் வருகை புரிந்தாராமே?

! பார்த்தசாரதி கோயில் குளத்தைத் துப்புரவு செய்ய உத்தரவு விட்டது நல்ல செயல்தான், மறுக்கவில்லை. ஆனல், அங்கே காவல் போட்டதும் அக்கம்பக்கத்தில் வேறு ஓர் இடம் அசிங்கப்படப் போகிறது, அவ்வளவுதான். ஏழை மக்களுக்குத் தேவையான அளவு கழிப்பறைகளைக் கட்டித் தருவதும்; அதில் போதுமான அளவு தண்ணீர் வசதி இருப்பதும் அவற்றை நல்ல முறையில் பயன்படுத்தப் பள்ளிப் பருவத்திலேயே கற்றுத் தருவதும் அவசியம். இதை மட்டும் செய்தாலே எத்தனையோ நோய்கள் இருந்த இடம் தெரியாது மறைந்து போகும். செய்வாரா?

* பால். செந்தில்குமார், விருத்தாசலம்—1

? ரசத்தின் வாசனையை மிகுதிப்படுத்துவது கறிவேப்பிலையா? கொத்தமல்லி இலையா?

! இந்த இரண்டையும் விடச் சில சமயங்களில்பரிமாறுபவரைப்பொறுத்தும்வாசனை மிகுதிப்படும். தெரியாதா உங்களுக்கு?

* எம்.எம். ஷர்புதீன், தோப்புத்துறை

? ஜாதியை எப்படி ஒழிப்பது என மேலே பதில். அதற்குக் கீழேயே ஒவ்வொரு இந்துவுக்கும் இந்து மதத் தலைவர்களுக்கும் இயக்கம் நடத்த ஆலோசனை! முரண்பாட்டுக்கு மறுபெயர் தராசோ?

! ஜாதி வேற்றுமை ஒழிக்கப்பட வேண்டிய மூடப் பழக்கம். மத நம்பிக்கை — அது எந்த மதமானலும் சரி, மனிதனை உன்னத நிலைக்கு உயர்த்துகின்ற அத்தியாவசியத் தேவை. இரண்டையும் குழப்பிக் கொள்ளாதீர்கள். எனது பதில்களில் முரண்பாடு இல்லை.

தராசே முரண்படலாமா?

* துளசி சேகர், திருப்பூர்

? 'மனிதனகப் பிறந்த ஒவ்வொருவரும் ராமாயணம், பாரதம் போன்ற நூல்களை வைத்திருப்பது மட்டுமில்லாமல், படித்துத் தம் வாழ்க்கையில் ஓரளவாவது நடைமுறைப்படுத்த வேண்டும்' என்று எழுதியிருக்கலாமே நீங்கள்?

! கையில் வைத்திருப்பது வெறும் அலங்காரத்துக்காகவா அல்லது தலையணையாகப் பயன்படுத்தவா? படித்துப் பயன்பெறத்தான் நண்பரே! நானும் இதைத்தான் இடவாகு பெயரில் சொன்னேன்.

* ஐ. இராமச்சந்திரன், சென்னை—34

? 'கீதை, ராமாயணம், பாரதம் வைத்திருக்க வேண்டும்' என்று எழுதியிருப்பதைக் கண்டு வேதனையுற்றேன். தமிழில் இல்லாத மறை நூல்களா? அல்லது தத்துவ இலக்கியங்களா? ஏன் திருப்புகழையும் திருவாசகத்தையும் வைத்திருந்தால் இந்துவாக இருக்க முடியாதா?

! ஏன் முடியாது? தாராளமாக இருக்கலாம். தமிழில் ஏராளமான தத்துவ இலக்கியங்கள், மறை நூல்கள் இருக்கத்தான் செய்கின்றன. வில்லி பாரதமும் கம்பராமாயணமும் கூடத் தமிழ் நூல்களே. நோக்கம்

என்ன என்று பார்க்க வேண்டும். பாரதம் முழுவதிலுமுள்ள எளிய இந்து மக்களுக்குப் புரிகிற மாதிரி, சுருக்கமாக அவரவர் மொழியில் எழுதப்பட்ட சரியான அர்த்தம் தருகிற பக்தி நூல்களைப் பரவலாக — இலவசமாக விநியோகிப்பது பற்றியே பேசுகிறோம். அவை கதை வடிவில் இருந்தால் — கூடவே வாழ்க்கைக்கும் வழிகாட்டுமென்றால் அனைவரும் படிக்கவும் அதன்படி நடக்கவும் சுவாரஸ்யம்கூடும். இவற்றோடுகீதையின் சாரத்தையும் திருக்குறள் திரட்டையும் பல்வேறு



மொழிபெயர்ப்புக்களில் தரலாம். வேறு பல நல்ல நூல்களையும் விநியோகிக்க முடியுமானால் தாராளமாகச் செய்யலாம். வரவேற்கிறேன்.

* **ஆர். ஸ்ரீநிவாசன், ஸ்ரீரங்கம்**

? **புரிந்து கொள்ளாதவர்கள், தவறாகப் புரிந்து கொள்பவர்கள் — இரு பிரிவினரையும் எப்படிச் சமாளிப்பது?**

! முதல் பிரிவினரைப் புரிய வைப்பதன் மூலமும் இரண்டாம் பிரிவினரைத் தெளிய வைப்பதன் மூலமும். ஆனால் புரியாத மாதிரி நடிப்பவர்களைத்தான் சமாளிக்க முடியாது!

* **ஸ்ரீ மனோபாரதி, பாண்டிச்சேரி**

? **காதலிக்கும் முன், இன்று வரையில் யாராவது யோசித்திருக்கிறார்களா?**

! யோசித்து வருவதா காதல்? செம்புலப் பெயல் நீர் போல அன்புடை நெஞ்சங்கள் கலப்பதுதானய்யா காதல்.

* **கு. கண்ணப்பன், கோவை—1.**

? **அரசாங்க வேலைகளில் சேர, மக்களிடம் அரசு ஜாதியைப் பார்க்கிறதா அல்லது அறிவைப் பார்க்கிறதா?**

! முடிந்தவரை எவ்வளவு தருவான் என்றுதான் முதலில் பார்க்கிறது.

* **இதய கீதா, விருதுநகர்**

? **இந்தியாவை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கும் பயங்கரவாதத்தை ராஜீவ் எப்படிச் சமாளிக்கப் போகிறார்?**

! இந்தியாவைப் பயங்கரவாதம் மட்டுமா ஆட்டிப் படைக்கிறது? போலியான ஜனநாயகம் பயங்கரவாதத்தைவிட மோசமானதில்லையா நண்பரே! தேர்தல் நடக்கவிருக்கும் மாநிலங்களுக்குப் பிரதமர் விஜயம் செய்து, முந்நூறு கோடி ஒதுக்குகிறேன், நானூறு கோடி ஒதுக்குகிறேன் என்று அறிவிக்கிறார்; ஏதோ கட்சிப் பணத்தை மக்களுக்கு அள்ளிக் கொடுப்பது போல! ஆந்திராவில் அரசு விளம்பரங்கள் ஆளும் கட்சியின் தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படும் வகையில் அமைவதால், அவற்றுக்கு நீதிமன்றமே தடை விதித்துள்ளது. மேற்கு வங்கத்தில் அரசு யந்திரம் துஷ்பிரயோகமாவதாக இரு தரப்பினருமே ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுச் சுமத்தியுள்ளனர்.... இன்னும் எத்தனை உதாரணங்கள்தான் இல்லை!

* **கா. குமரேசன், திருவாரூர்**

? **படிக்கத் தகுந்த நூல்களென்று தாங்கள் கருதுவது எதை?**

! மனித மனங்கள்தான் உலகின் தலைசிறந்த புத்தகங்கள் — அவற்றைப் படிக்கத் தெரிந்தவர்களுக்கு!

* **ரூ. 10 பரிசு பெறுபவர்:**
எம். கல்யாணசுந்தரம்
திருநரையூர்
நாச்சியார் கோவில் (அஞ்சல்)
612 602.

ஸ்ரீ ராமதூத் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்

SRI RAMADHOOTH CHITS AND INVESTMENTS Madras-21.

குறுகிய கால சீட்டுகள்			
ரூ 200	மாதங்கள் 25	ரூ 5,000
ரூ 400	மாதங்கள் 25	ரூ 10,000
ரூ 1000	மாதங்கள் 25	ரூ 25,000
ரூ 2000	மாதங்கள் 25	ரூ 50,000
ரூ 4000	மாதங்கள் 25	ரூ 1,00,000

நீண்ட கால சீட்டுகளும் உள்ளன.

ராம் கேஷ் சர்டிபிகேட்:

இத்திட்டத்தின் மூலம் உங்களுடைய முதலீடு 42 மாதங்களில் இரு மடங்காகிறது.

உ-ம்: ரூ 10.000/- ரூ 20,000/-ஆகிறது.

(இலவச பரிசு வழங்கப்படும், முதலீட்டின் தொகையைப் பொறுத்தது)

சிறப்பம்சம்: இலவசப் பரிசு, தங்க மெடல்!

இப்போது ரூ 25,000/- முதலீடு செய்து ஏழு வருடத்திற்குப்பின் லட்சாதிபதி ஆகுங்கள்.

பிக்செட் டெபாசிட்

1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
17%	18%	19%	21%

குறைந்தபட்சம் ரூ. 10,000/- அதற்கு மேலும் ஏற்றுக் கொள்ளப்படும்.

குறைந்தது இரண்டு வருடத்திற்கு டெபாசிட் செய்பவர்களுக்கு வெள்ளி குத்து விளக்கு அன்பளிப்பாக வழங்கப்படும்.



2226 Ad

ஸ்ரீ ராமதூத் சிட்ஸ் & இன்வெஸ்ட்மெண்ட்ஸ்
423, T.H. ரோடு, முதல் மாடி, சென்னை-600 021.
போன்: 555992 & 554316 கேபிள்: "RAMDHOOTH"
Prop: பூபத்குமார் ரத்திலால்



"ஊனமுற்றோருக்கான ஆண்டு என்பது, அகில உலக அளவில் மிகவும் கோலாகலமாகக்கொண்டாடப்பட்டுவிட்டது. எங்களுக்கான சலுகைப்பட்டியல்களை அரசாங்கம் அறிவிப்பதைப் படிக்கும்போது, மிகவும் பிரமிப்பாக இருக்கிறது! ஆனால், நடைமுறை என்பது அப்படி இல்லீங்களே சார்..." — சேலத்தை ஒட்டியுள்ள காட்டூர் என்னும் கிராமத்திலிருக்கும் இருபத்தேழு வயதான செல்வி அருள்மொழியைச் சந்தித்தபோது தான், இப்படி அரசாங்கத்தின் சிவப்பு நாடா முறையால் அடிபட்டு அடிபட்டு நொந்து போன உள்ளத்தோடு பேச ஆரம்பித்தார்...

மூன்று ஆண் குழந்தைகளுக்குப் பிறகு, நான்காவதாகப் பிறந்த பெண் குழந்தை நான் என்பதால், ரொம்பவும் மகிழ்ந்து போனார்கள், என் பெற்றோர். பிறந்த போதே எனக்குக் கருகருவென்று அடர்த்தியான முடியாம். ஜடை பின்னி ஜடை பின்னி அழகு பார்ப்பாளாம், என் தாய்! என்னைப் பார்க்கும்கண்களில்ஏதேனும்ஒருகொள்ளிக் கண் இருந்துவிடுமோ என்று தினமும்திருஷ்டி சுற்றிப் போடுவாளாம்!

எனக்கு மூன்று வயதாகும் வரை

ஊனம் இவருக்கல்ல; அரசுக்குத்தான்!

எல்லாம் நல்லபடியாகத்தான் இருந்தது. மூன்றாவது வயதில் ஒருநாள் காய்ச்சல் வந்தது. அதுவே போலியோவாகத் தாக்க ஆரம்பித்து விட்டது. மருந்து போட்டார்கள்; மந்திரித்தும் பார்த்தார்கள். எதுவும் போலியோவிடமிருந்து என்னைக் காப்பாற்ற முடியவில்லை. கைகால்கள் செயலிழந்து போயின. அதுவரையில் தவழ்ந்து விளையாடி, எழுந்து நடை பழகி ஓடி விளையாடிக் கொண்டிருந்த நான் வதங்கிய கீரையாகிப் போனேன்.

"எங்கெங்கோ கொண்டு சென்று, என்னென்னவோ வைத்தியம் செய்து பார்த்தார்கள் என் பெற்றோர். ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியாக, என்னைத் தமது இரண்டு கைகளாலும் தூக்கிச் சென்ற, எனது தந்தையின் கைகள் கூடத் தேய்ந்து போயிருக்கும்! அந்த அளவுக்கு வைத்தியம் பார்த்தார்கள். பல்லாண்டு கால வைத்தியத்தின் பயனாகக் கைகள்தான் பாதிக்குமேல் கொஞ்சம் பலம் பெற்றனவே தவிர, கால்கள் போனவை போனவைதான்!

"இந்நிலையில் தந்தையும் இறந்து போய் விட்டார். தாயாரின் உதவியின்றி என்னால் எதுவுமே செய்ய முடியாத நிலை. அப்படியே ஆயுள் முழுவதும் இருந்துவிட முடியுமா? யோசித்துப் பார்த்தேன். முடிந்த வரை, தாயாரின் உதவியின்றியே, ஒவ்வொன்றையும் செய்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தேன். அதன் முதல் கட்டமாக, என்னை விட உயரமாக இருந்த என் தலை முடியின் நீளத்தைக் குறைத்தேன். இடைவிடாத பயிற்சியின் மூலம், என் கைகளால் நானே தண்ணீர் மொண்டு குளிக்கப் பழகினேன். வொயர் கூடை பின்னுதல் போன்ற கைவேலைகளைக் கற்றுக் கொண்டேன். 'அருள்மொழி அக்காவிடம் போனால் இதை முடிக்கக் கற்றுக் கொடுத்து விடுவாள்' என்று வொயர் கூடை பின்ன ஆரம்பித்து, முடிக்கத் தெரியாமல் தவிக்கும் மற்ற பெண்களெல்லாம் என்னிடம் வந்து கற்றுக் கொள்ளும் அளவுக்கு அதில் தேர்ச்சியும் பெற்றேன்.

"மற்ற பெண்களுக்கு வொயர் கூடை பின்னக் கற்றுக் கொடுத்ததுபோல், அவர்களிடமிருந்து நான் எழுதப் படிக்கக் கற்றுக்

கொண்டேன். இவையெல்லாம் என் தன்னம்பிக்கையை வளர்த்தன. என் தந்தை என்னை ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் சென்ற சமயங்களிலெல்லாம் சிலர், 'சே! இப்படிப்பட்ட நிலையிலும் ஒரு பெண்ணா? என் பெண்ணாக இருந்திருந்தால், நான் எப்போதோ கொன்றிருப்பேன். இதெல்லாம் உயிரோடு இருந்து என்ன பிரயோஜனம்...?' என்று என் காது படவே பேசியபோது, என் உள்ளத்தில் ஏற்பட்ட புண்களெல்லாம், இப்போது — என்னாலும் பிறருக்குப் பாரமில்லாமல் வாழ முடியும் என்ற தன்னம்பிக்கையில் அடிபட்டுப் போயின. உண்மையில், ஊனம் என்பது, உடலோடு மட்டுமே சம்பந்தப்பட்டதல்ல என்று உணர்ந்து, செயல்படத் துவங்கினேன்.

''என் உடன்பிறந்த மூன்று அண்ணன்களும் அவர்கள் குடும்பத்தாரும் ஒரு தம்பியும் என்னை ஒருபோதும் ஒரு சுமையாகக் கருதியதேயில்லை, என்றாலும் சும்மா இருப்பதே ஒரு சித்திரவதையல்லவா! அதன் விளைவுதான் இந்தச் சின்னஞ்சிறு மளிகைக் கடை. இது வெறும் மளிகைக் கடை மட்டுமில்லீங்க சார், எனது தன்னம்பிக்கையின் வெளிப்பாடு!

''இது மிகவும் சிறியது. இன்னும் கொஞ்சம் விரிவு படுத்தினால்தான் என் முழுத் தேவைகளுக்கும் ஈடுகொடுக்கும். அதற்குப் பணம் வேண்டுமே! அதனால்தான் ஊனமுற்றோருக்குக் கொடுக்கப்படும் சலுகைகளில் ஒன்றான மான்யத்துடன் கூடிய கடனுக்காகச் சமூக நலத்துறைக்கு மனுப் போட்டேன். அவர்கள் பி. டி. ஓ. தான் இதுபோன்ற கடன்களுக்குப் பொறுப்பு என்றார்கள். பி. டி. ஓ. வைப் பார்த்தேன். ஆவன செய்வதாகச் சொன்ன பி. டி. ஓ. துரதிர்ஷ்டவசமாகச் சில வாரங்களில் இறந்து போய் விட்டார். அதன் பிறகு வந்த பி. டி. ஓ. வோ தாம் எதுவும் செய்ய முடியாது,எல்லாம் கலெக்டர்தான் கவனிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார். கலெக்டரிடமும் இரண்டு முறை மனுக் கொடுத்துப் பார்த்து விட்டேன். பயனில்லை. அதனால் எனது தன்னம்பிக்கையே தளர்ந்து போய் விடும் போல் இருக்கிறது.

''இத்தனைக்கும் ஊனமுற்றோர் சிலருக்கு அரசு சக்கர நாற்காலிகளை இலவசமாக வழங்கிய போது, 'நான் எங்கும் வெளியில் போவதில்லை; அதனால் எனக்கு அது தேவையில்லை. என்னிடம் அது வீணாக இருப்பதை விடத் தேவையான வேறொருவர் உபயோகிப்பதுதான் நல்லது!' என்று சொல்லி அதை மறுத்துவிட்டவள் நான். எனக்குச் சக்கர நாற்காலி கொடுப்பதை விடக் கடனுதவி செய்வதன் மூலம், எனது தன்னம்பிக்கையை மேலும் வளர்த்து, என் உடல் ஊனத்தையே மறந்து போகச் செய்ய முடியும் என்பதை, ஏன் இவர்கள் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்? நீங்களே சொல்லுங்கள் சார்...'' என்று முடித்தார் அருள்மொழி.

அவருடைய தன்னம்பிக்கை நம்மைப் பிரமிக்க வைத்தது. அரசாங்கத்தின் சிவப்பு நாடா முறையால், அவரைப் போன்ற இன்னும் எத்தனையெத்தனை தன்னம்பிக்கை மிகுந்த உள்ளங்கள், நலிந்துக் கொண்டிருக்கின்றனவோ என்று எண்ணும் போது, உண்மையில் ஊனமுற்றிருப்பது அருள்மொழியும், அருள்மொழியைப் போன்றவர்களும் அல்லர்; பொறுப்பற்ற நமது அரசுதான் ஊனமுற்றுக் கிடக்கிறது என்பதுதான் உறுதியாகிறது.

— இளங்கோவன்

கடவுள் : பத்தாயிரம் வருடம் உயிருடன் வாழ வரம் கேட்கறியே... எதுக்கு?

பக்தன் : லஞ்சம், சிபாரிசு எதுவுமில்லாமல் ஒரு வேலை தேடிக்கணும்ங்கற என் ஆசை நிறைவேறுதான்னு பார்க்கத்தான்!

— உ. ராஜாஜி





கலெக்டர் : இப்போதெல்லாம் ஜனங்க புதுமையான முறையிலே மனு கொடுக்கறாங்க!

எம்.எல்.ஏ. : என்ன சார் புதுமை?

கலெக்டர் : எங்க தொகுதியில சீக்கிரமா ஓர் இடைத் தேர்தலுக்கு ஏற்பாடு செய்யுங்களேன்னு கொடுக்கறாங்க!

— குடந்தை சந்தானம்



ஸா:.ப்ட் அண்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன்.

ஸா:.ப்ட் அண்ட் ஸில்க்கி ஹேர் ரிமூவிங் லோஷன்.

இந்த ஹேர் ரிமூவிங் லோஷனை உபயோகப்படுத்துவதில் எந்த சிரமமு மில்லை, சங்கடமுமில்லை.

மிருதுவான மேனி மீது எளிதாகவும் சீராகவும் பரவுகிறது!

இரண்டு சைஸ்களில் கிடைக்கிறது: 80 மி.லி. மற்றும் 45 மி.லி.


ஆம்! எத்தனை சிக்கனம்.

ஸா:.ப்ட் அண்ட் ஸில்க்கி லோஷன் அங்கமெங்கும் மென்மை உணர்வு.

45 மி.லி. பாட்டில் விலை ரூ. 10.70 (தல வரிகள் தனி)



ஆத்தா



அரியமுத்து கவுண்டர் காட்டுக் கொட்டகையில் குந்திக் கொண்டு சோளத் தட்டைகளைச் சிறுசிறு நறுக்குகளாக அரிவாளால் வெட்டிப் போட்டுக் கொண்டிருந்தார். கருமாபுரம் சோமாரச் சந்தையில் வாங்கிய இரண்டு ஆத்தூர்க் காளைகள் அவற்றை நாக்கினால் இழுத்து இழுத்துத் தின்று கொண்டிருந்தன.

கவுண்டரின் மனைவி பாராத்தா அருகில் உள்ள சேந்து கிணற்றடியில் நின்று கொண்டிருந்தாள்.

அரியமுத்து பிற்பகல் போனவர் ரொம்ப நேரம் கழித்து வீட்டிற்கு வரும்போதே அவளுக்குத் தெரியும். ஊரில் ஏதேனும் விவகாரம் முளைத்திருக்கும். அதுதான் வந்தது முதலே அவர் சரியாகவேயில்லை.

"என்ன விசியம்? ஆரும் ஏதாச்சும் பேசினாங்களா?"

பாராத்தா எதிரே கிடந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்தாள்.

சோளத் தட்டுகளை நறுக்கிப் போட்டு விட்டு அதே இடத்தில், உட்கார்ந்திருந்தார் அரியமுத்து.

"ஒண்ணுமில்ல தாயி. நம்ம செல்லியம்மனுக்கு நோம்பி போட்டு' எத்தனை வருசமாச்சு. எத்தனை ஆசை ஆசையா அந்த அந்த ஆத்தாளுக்கு அளகாப் பல்லக்கு செஞ்சு வச்சேன். பல்லக்குச் சுமக்க, தண்டுக் கட்டை வேணும்னு எந்தெந்தக் கிராமத்துக்கெல்லாம் அலைஞ்சேன். கடசிலே நரசிங்கபுரம் நாமநாய்க்கன் காட்டிலேருந்து பாக்கு உருட்டு வாங்கியாரத்துக்குள்ளார நான் பட்டபாடு ஒனக்குத்தான் தெரியுமே!

"இத்தனை பாடுபட்டு எல்லாத்தியும் சேகரம் பண்ணினேன். ஆத்தாளுக்குப் பட்டுத் துணி வாங்கி, காரிப்பட்டி டைலர் நடராசன் கிட்டே பொளுதன்னிக்கும் ஒக்காந்து பாவாட தச்சு வாங்கியாந்தேன்.

"அந்தக் கோயிலாண்ட இருக்கிற காட்டைத் திருத்தி, வேலி வச்சுப் பந்தல் போட்டு, கொடிக்காலச் சுத்தி மேடை கட்டி...."

கவுண்டரின் குரல் பாதியில் தடைபட்டு நின்றது.

வெள்ளாள குண்டம் சாலையில் உள்ள அந்தச் செல்லியம்மனுக்கு நிறைய மான்யங்கள் இருந்தன.

ஐந்நூறு தென்னை மரங்களும், இரு நூறு பாக்கு மரங்களும் உண்டு. வானம் பார்த்த வறண்ட பூமியான அந்த இடத்துச் சூழ்நிலையைத் துல்லியமாகக் கணக்கிட்ட சேனையர், அந்தக் காலத்திலேயே அதற்குப் பயிர் விளையும் நிலமாக எழுதி வைத்து, செல்லியம்மனை ஏமாற்ற நினைக்கவில்லை.

காரணம், நிலத்தை நம்பினால் அம்மனுக்குப் பூஜை செய்ய வருமானம் இருக்காது என்று அவருக்குத் தெரிந்தது; தென்னை மரங்களையும், பாக்கு மரங்களையும் எழுதி வைத்து விட்டார்.

அதிலிருந்து வரும் வருமானத்தால்

செல்லியம்மனுக்குத் தாராளமாக மூன்று கால பூஜை நடந்தது. பரார்த்த பூஜைகளைச் செய்ய ஓர் அர்ச்சகர் குடும்பத்தைச் சேலம் செவ்வாய்ப்பேட்டை அக்கிரஹாரத்திலிருந்து குடி பெயர்த்து வாழப்பாடியில் குடியமர்த்தியிருந்தார்.

அம்பாளின் சொத்துக்களைப் பராமரிக்க, இரண்டு ஊர்க் கவுண்டர்களைத் தர்மகர்த்தாக்களாக நியமித்திருந்தார்.

''அரியமுத்து, உன்கூட முத்தம்பட்டி தம்மண்ணனையும் சேர்த்துக்க. செல்லியம்மனோட பூஜை நல்லா நடக்கணும். அவ இருக்கிற எடம் காசு கொழிக்கும்,...'' என்று பட்டா எழுதி வைத்துவிட்டு சேஷையர் மூத்த பிள்ளையுடன் வெளிநாட்டில் குடியேறி விட்டார்.

தன் பொறுப்பில் விடப்பட்ட மான்யங்களை முறைப்படி வசூல் செய்து, அந்தச் சின்ன ஆலயத்திற்குத் தேவையானவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்தார் அரியமுத்து.

''அரியமுத்து இந்த வயசிலே நீ ஏன் இம்புட்டுக் கஷ்டப்பட்டு இதையெல்லாம் செய்யணும்? நான் இல்லையா? என் மவன் இல்லையா? உன்னையும் என்னையும் நம்பித்தானே இந்தக் கோயில் சொத்துக்களுக்குத் தர்மகர்த்தாவா நம்மை நியமிச்சாரு. கவலையை வுடு. எல்லாச் சமாசாரத்தையும் நான் பார்த்துக்கறேன். ஆத்தா செல்லியம்மனோட மரியாதை மால, மெரமனையோட உன் ஊடு தேடி வரும்.நீ கம்முனு ஊட்டுலே குந்திக்க. கணக்கு வழக்குகளை என் பையன் பாத்துக்குவான்'' என்று தம்மண்ணன் சொன்னவுடன், அரியமுத்து ஒன்றுமே சொல்லாமல், பொறுப்புகள் அனைத்தையும் அவரிடமே ஒப்படைத்துவிட்டார். இதுவரை தேங்காய்கள் விற்றது, பாக்கு விற்றது என்று பத்தாயிரம் வரையில் அவரிடமிருந்தது. அதையும் அவரிடமே கொடுத்துவிட்டார்.

''ஆத்தாளுக்கு எல்லாம் நல்லா நடக்கோணும். அவ மனசு குளிர்ந்தா, நாம நல்லா இருப்போம். ஊரு நல்லாயிருக்கும். நீ இந்தப் பொறுப்புக்களை ஏத்துக்கறதிலே எனக்கு ரெட்டிப்புச் சந்தோஷம்...'' கோயில் தர்மகர்த்தா பொறுப்பு எவ்வித ஆர்ப்பாட்டமும் இல்லாமல் வெறும் மனித நம்பிக்கையில் கைமாறியது.

அடுத்தடுத்து தம்மண்ணனைப் பற்றி வந்த செய்திகள் ஏதும் பெருமைப்படும் விதத்தில் இல்லை.

தம்மண்ணனைப் பற்றிப் பரவலாகப் பேசப்படும் பேச்சுக்கள், தேங்கிவிட்ட ஆலயப் பணி ஆகியவை அவரைப் பெரிதும் சங்கடப்படுத்தின. இவற்றுக்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்ற முடிவுடன் தம்மண்ணனை அவர் வீட்டில் சந்தித்தார்.

''தம்மண்ணா, கோயிலு வேலை எதுவுமே நடக்கலை. நா எப்படி ஒப்படைச்சேனோ அதே மாதிரி அப்படியே இருக்குது. ஆத்தாளோட பணம் அம்புட்டு உருவாவும் ஒங்கிட்ட தந்திட்டேன்லே. அதைப் போட்டு அவ கோவில ரிப்பேர்ப் பண்ற வேலய ஆரம்பிச்சுட வேண்டியதுதானே. மாசி போகப் போவுது. பங்குனிலே நோம்பி போட்டாவணும். இத்தன வருசமா பண்டிகை நின்னதேயில்லே.''

அவர் பேசியதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த தம்மண்ணன், ''அரியமுத்து... கோயிலப் பத்தி இனிமே என்கிட்டே ஏதும் கேக்கக் கூடாது. கேட்டே, அப்பற மேல்ட்டு நா, கோவக்காரனாயிடுவேன். கோயிலுக்கு என்ன பண்ணணும்? எப்பப் பண்ணணும்ங்கறதெல்லாம் எனக்கும் என் மவனுக்கும் தெரியும். உன் சோலியப் பாத்துக்கிட்டு நீ போயிக்கிட்டே இரு...'' என்று ஏகமாகச் சப்தம் போட ஆரம்பித்து விட்டார்.

தந்தையின் பக்கத்தை நியாயப்படுத்த அவர் மகனும் சேர்ந்து கொண்டு விட்டான். போதாக் குறைக்கு உள்ளூர்க்காரர்கள் சிலரும் தம்மண்ணன் பக்கம் பேசவே, அவர் மனம் பதறினார். தம்மண்ணன் உள்ளத்தில் இருப்பது என்னவென்று தெரிந்துவிட்டது. இனி அவனிடமிருந்து நியாயம் எதிர்பார்ப்பது வீண். அவன் ஒரு முடிவு எடுத்து விட்டான். அதிலிருந்து அவனை இனி திருப்பவே முடியாது — என்று மனம் நோகத் திரும்பினார்.

செல்லியம்மன் ஆலயத்திற்கு முன்னால் வந்து நின்றார்.

உள்ளே இருளடைந்த கருவறைக்குள் அம்மன் விளக்கின்றி நின்று கொண்டிருந்தாள். அவர் கண்கள் கலங்கின.

''ஆயா, தம்மண்ணன் பய என்ன பேசறான் கேட்டியா? உனக்காக, உன் மேலே பிரியம் வச்சு எம்புட்டு மானியம் எழுதிக் குடுத்துட்டு, அந்தச் சேசைய்யர் போனார். இவன் உன்னை ஏமாத்தறான். பரவாயில்லே. ஆனா நா இருக்கிற வரையிலே உன்னை இப்படி வுடமாட்டேன். உனக்கு வேண்டியதெல்லாம் நான் செய்யறேன்'' என்று மனமுருகக் கூறியவர், யாருடைய தயவும் இல்லாமல் தம்மிடமிருந்த கொஞ்ச பணத்தையும், சிலரிடம் நன்கொடை வசூலித்தும் கோயிலை ஒழுங்குபடுத்தினார். யாளி வாகனம் செய்தார். பல்லக்குச் செய்தார். ஊர் ஊராக அலைந்து பல்லக்குத் தூக்க தண்டுக் கட்டை சேகரம் செய்தார். எல்லாம் செய்து செல்லியம்மனுக்குப் பண்டிகை போட ஏற்பாடு பண்ணிய போது, அந்தச் சண்டை விஸ்வரூபமெடுத்து விட்டது.

''கோவிலுக்குள் என்னைக் கேட்காமல் ஆரும் நோம்பி போடக் கூடாது' என்று ஊர்க்காரர்களை நூற்றுக்கணக்கில் கூட்டி வந்து பண்டிகை போட விடாமல் தடுத்து விட்டார் தம்மண்ணன்.

இதனால் இரண்டு கிராமத்திற்கும் விவகாரம் முற்றி, அடிதடியில் முடிந்து, போலீஸார் தலையிட்டு, இரண்டு பக்கமும் சமமாக

** காரியங்களைச் செய்து முடிப்பது ஓர் அற்புதக் கலைதான். காரியங்களைச் செய்யாமல் இருப்பதும் ஓர் அரிய கலையே! தேவையற்ற காரியங்களை ஒதுக்கி விடுவதே வாழ்க்கையின் மேதைத் தன்மை!

மகரிஷி



அமைச்சர்: ஏய்! நீ நாளையிலேர்ந்து வேலைக்கு வர வேண்டாம்.

வேலையாள்: நான் என்ன சார், உங்களை மாதிரி மந்திரியா என்ன, 'போ'ன்னு சொன்னவுடனே போறதுக்கு. மூணு மாசம் நோட்டீஸ் கொடுத்துத்தான் என்னைப் போகச் சொல்லணும் சார். தெரியுமா?

— குடந்தை சந்தானம்

இருபது இருபது பேரைக் கைது செய்தார்கள்.

'கோவிலுக்கு யாருமே பண்டிகை நடத்தக் கூடாது' என்று போலீஸார் தடையுத்தரவு போட்டு கோவிலைப் பூட்டிச் சாவியை எடுத்துப் போய் விட்டார்கள்.

விட்டத்தட்ட ஐந்து வருஷங்களுக்கு மேல் ஆகிவிட்டன. ஒவ்வோர் ஆண்டும் விழாக்கோலம் நெருங்கும்போது இரண்டு பக்கமும் உணர்ச்சி வசப்பட்டு ஆத்திரம் மேலோங்கி அடி, தடி, ரத்தக்களறி, போலீஸ் தலையீடு, சில கைதுகள் என்றுதான் முடிந்து கொண்டிருந்தது.

நடுவில், தம்மண்ணனுக்கு முடக்கு வாதம் ஏற்பட்டு ஒருபக்கம் செயலற்றுப் போய் விட்டதாக யாரோ வந்து சொன்னார்கள். இதுவே கூட ஒரு கெட்ட நிகழ்ச்சியின் அறிகுறியாகப் பட்டது அவருக்கு.

ரெட்டைக் காளை பூட்டிய சின்னக் கூண்டுவண்டியில் பெரியமீசையை முறுக்கிக் கொண்டு வரும் தம்மண்ணனை நினைத்துப் பார்த்தார். அவர் கண்கள் கலங்கின. திடகாத்திரமாக இருந்த அவருக்குத் திடீரென்று இந்த வாத நோய் வந்து அடித்துப்போட்டதே கூட தெய்வ குற்றம்தான் என்று பரவலாகப் பேச ஆரம்பித்து விட்டார்கள்.

இன் நினைவுகளிலிருந்து விடுபட்ட போது மனைவி பாராத்தா அவரையே பார்த்த வண்ணமிருந்தாள்.

''ஒண்ணுமில்லே தாயி, வாழப்பாடி போனப்ப கோயில் அய்யரப் பாத்தேன். அவரப் பாக்கப் பாவமா இருக்கு. இத நம்பி பத்து வருசத்துக்கு முன்னால வந்தவரு இப்ப வாழப்பாடி ரிசிஸ்டர் ஆபீஸ் ஓரம் குந்திக்கிட்டு பாண்டு, பத்திரம் எழுதிக் காலத்தை ஓட்டுறாராம். கேக்கவே கஸ்டமாயிருக்கு... பாராத்தா... தாயி மேட்டுப்பட்டி கோலுக்காரன ஆளனுப்பி, ஒடனே கூட்டியாரச் சொல்லு. வெள்ளாள குண்டம் ஆளுங்களுக்கு ஒரு சேதி அனுப்போணும். இத இப்படியே வுட்டுட முடியாது புள்ளே... இந்தத் தவா ரெண்டுல ஒண்ணு முடிவு கட்டியாவணும்...''

அரியமுத்து பரபரவெனக் காரியத்திலிறங்கினார். இத்தனை நாள் வரை வீண் விவகாரம் வரக் கூடாது. ஊர் இரண்டுபடக் கூடாது என்று தயங்கிக் கொண்டிருந்தார். இனி அப்படியிருந்து பிரயோஜனமில்லை. 'கோயில் மான்யங்களை உடனே மீட்டாகணும். கோயில் சொத்தை அபகரிக்க நினைக்கிறவனை சும்மா வுடக் கூடாது...' என்று கிராமம் கிராமமாகப் போய் வீடு வீடாகச் சொன்னார்.

'தெய்வத்தின் பேரில் இப்படி அக்கறை இல்லாம இருக்கிறதுனாலேதான் கோயில் சொத்தையெல்லாம் எவனெவனோ அனுபவிச்சுக்கிட்டு இருக்கான். கோயில் பணத்திலே பங்களா கட்டுறான். சினிமாத் தியேட்டர் வாங்குறான். தேர்தல்லே நிக்கறான். இதுக்கெல்லாம் முடிவு கட்டியாவணும்...' என்று அவர் சொன்னவை கிராம மக்களிடையே ஒரு புதிய விழிப்புணர்வை உண்டாக்கியது. அதன் பலன், அவர் பின்னால் ஒரு புதிய அணி வகுப்பொன்று சைன்யம் போல நிற்கத் தொடங்கிவிட்டது.

துடும்புக்காரனை அழைத்து, துடும்பு போடுவதற்கான செய்தியைச் சுருக்கமாகச் சொன்னார். 'இந்தப் பங்குனில செல்லியாத்தா நோம்பி போட ஊர்க் கவுண்டர் முடிவு பண்ணியிருக்காரு. பல வருசமா பூசை நின்னு போனதைப் பத்தி பேசப் போறாரு. வார செவ்வாக் கௌமை முத்தம்பட்டி சாவடில. ஊர்ப் பெரியவங்க கூடி முடிவெடுக்கறாங்க. ஊர் சனங்க எல்லாரும் வரவோணும்...'

செய்தி எல்லா இடங்களுக்கும் பரவியது. தனிப்பட்ட முறையிலும் கோலுக்காரன் மூலம் தம்மண்ணன் வகையறாவுக்கு அழைப்பு அனுப்பப்பட்டது. அவர்களும் பஞ்சாயத்துக்கு வருவதாகச் சொல்லி அனுப்பியிருந்தார்கள். தம்மண்ணன் பேசக்கூடிய நிலையில் இல்லையென்றாலும் ஊர் பஞ்சாயத்து நிகழ்ச்சிகளை உட்கார்ந்தபடி கவனிக்க வருவார். அவர் மகன் மாரிமுத்து இதில் தீவிர பங்கு கொள்வார் என்கிற செய்தி வந்தது.

''விவகாரத்தை முத்தவிடாம முடிக்கப் பாருங்க... ஆ... கவுண்டரே ஒம்மத்தான்...'' பாராத்தா வெளியே புறப்படவிருந்த தன் கணவரிடம் கூறினாள்.

''பாரு தாயி, காத்து, மழை, மண்ணு, அதோ அந்த மலை இத மாதிரி தெய்வமும் ஒரு இயற்கைதான். அந்த இயற்கையை நாம மனசு சுத்தியோட ஆராதனை பண்ணினா

** நாம் எதற்கு ஆசைப்படுகிறோமோ அது நம்மிடம் இல்லாதலால் அந்த அளவுக்கு ஏழையாக இருக்கிறோம். எவன் அதிக ஆசைப்படுகிறானோ அவன் அதிக ஏழையாக இருக்கிறான்.

அழகாபுரி அழகப்பன்

புதிய தொடர்

''நீ சினிமா ஸ்டாரா ஆனா, லட்சம் லட்சமா சம்பாதிப்பே; கார்லே போவே; பங்களாவிலே காத்து வாங்குவே! ஆனா, உன்னை நடிகையாக்க ஒரு டைரக்டரோட திறமை வேணும்; உனக்கு உதவி செய்யறவங்க உன்கிட்டேயிருந்து ஏதாவது உதவியை எதிர்பார்க்கத்தானே செய்வாங்க?''

''ஆமா''.

''என்னைப் போல ஆண்கள் கிட்டப் பணத்தை எதிர்பார்க்கலாம். உன்மாதிரி அழகான பொண்ணுகிட்ட என்ன எதிர்பார்க்க முடியும்?''

''சொல்லு.''

''உன்னைத்தான் எதிர்பார்ப்பாங்க. நீ முடியாதுன்னு சொன்னா, சான்ஸ் தரமாட்டாங்க. அப்போ என்ன செய்யப் போறே? நடிக்காது போனாலும் பரவாயில்லைன்னு திரும்பிடப் போறியா? நீ கேட்கிறதை அவங்க தரணும்னு எதிர்பார்க்கிற நீ, அவங்க கேட்கிறதைத் தரத் தயாராயில்லைன்னா எப்படி?''

''அப்போ அவங்களும் என்னைத்தான் கேட்பாங்களா?''

''கேட்கலாம்; கேட்காமலும் போகலாம். கேட்டா நீ மறுக்க முடியுமா?''

''முடியாதுதான்.''

''அப்போ, என்கிட்டே மட்டும் ஏன் மறுக்கிறே? என் உதவியில்லாம நீ டைரக்டரைப் பார்க்கக் கூட முடியாதே!''

அவள் தன் நிலையைப் புரிந்து கொண்டாள்.

''சரி, நவநீதம். உன் இஷ்டத்துக்கு சம்மதிக்கிறேன்.''

அவன் கைகள் அவள் மேல் ஊர்ந்தன.

அவளும் புதிய உணர்வுகளால் புல்லரித்து நின்றாள்

அவன் இரு கரங்களாலும் அவளை இறுக அணைத்துக் கொண்டே குனிந்து அவள் ஆரஞ்சு உதடுகளில் அழுத்தமாக முத்தமிட்டான்.

அவளும் அவனது உறுதியான உடலைத் தழுவிக் கொண்டாள்.

ஒரு சில நிமிஷங்கள் கூட அவனால் தாள முடியவில்லை; வேறெங்கோ போக ஆசைப்பட்டான்.

கூடத்தில் சுருட்டிக் கிடந்த பாயை விரித்து விட்டான். தலையணையை எடுத்துச் சரியாக வைத்தான்.

அவளை மெல்ல பாயில் சாய்த்து, தானும் சரிந்து கொண்டான்.

ஆர்வம் தாளாமல் அவன் கையை நகர்த்த; வெட்கம் தாளாமல் அவள் தடுக்க; அவர்களுக்கிடையே ஒரு செல்லப் போராட்டம் நடந்து கொண்டு இருந்த போதுதான், வாசலில் அந்தக் குரல் கணீரென்று ஒலித்தது.



காதல் ரசம் சொட்டும் இப்புதிய தொடர்கதை ஞாயிறு தோறும் தினமலர் வாரமலர் இதழில் படிக்கத்தவறாதீர்கள்.

பரிசு ரூ. 200/-

பொன்மொழிப் போட்டி — 12

இந்த இதழின் உள்பக்க மார்ஜின்களில் உள்ள ஐந்து பொன் மொழிகள் யாரால் கூறப்பட்டவை? கீழே உள்ள ஐந்து பெயர்கள் அருகே வெற்றிடத்தில் பொருத்தம் பார்த்துப் பொன்மொழியைப் பிழையின்றி முழுமையாக எழுதவும். விலாசத்தைப் பூர்த்தி செய்து இந்த அரைப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். உறையின்மேல் "பொன்மொழிப் போட்டி—12" என்று குறிப்பிடவும்.



ஜவாஹர்லால் நேரு:

லின் யூடாங்:

சத்யசாயி பாபா:

தாமஸ் ஹார்டி:

பெர்னார்ட் ஷா:

முடிவு தேதி: 8.4.87

என் பெயர்: ....

விலாசம்: ....

....

நிச்சயமா நல்ல பலன் கிட்டும். பொய் சொல்லி, அந்த இயற்கையை நீ ஏமாத்த நெனச்சா இயற்கை ஒன்ன ஏமாத்திப்புடும். இதுதான் பாராத்தா எனக்குத் தெரிஞ்ச பாடம். இன்னக்கி ஒரு குடம் தண்ணிக்குக் கொடத்தஎடுத்துக்கிட்டுக் காடுகாடா அலேய ரேமே, ஏன்? உன் ஆராதனையிலே சுத்த மில்லே, உன் ஆராதனையிலே உண்மை யில்லே. அதான் எல்லாத்துக்கும் கஷ்டப் படும்படியா வச்சுப்புட்டா. நல்ல மழை பேஞ்சு எத்தனையோ வருசமாச்சு. நல்ல வெள்ளாமை பண்ணி எத்தனையோ வருச மாச்சு...

"நீ செய்யற கடவுள் காரியத்திலே வெறும் ஆர்ப்பாட்டம்தான் இருக்கு. சிரத்தையில்லே. உன்னப் பாத்து, பத்து நூறு பேரு பாராட்டணும்னு விழா எடுக்கறியே தவிர, மனசு சுத்தமா எங்கே காரியம் பண்றே? அது போவட்டும். இத்தனே வருசமா இந்த வெவகாரம் பத்திப் பேசவே வராம இருந்தவங்க இப்ப ஊர் நியாயம் பேச வரேன்னு சொல்லி அனுப்பியிருக்காங்களே, அதுவே ஒரு நல்ல சகுனந்தான்..."

அவர் மனைவியுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே மேளதாளத்துடன் பெரிய ஊர்வலமொன்று அவர் காட்டுக் கொட்டகையை நோக்கி வந்து கொண்டிருந்தது.

கோலுக்காரன் கூட்டத்தைக் கடந்து ஓடி வந்து, "தம்மண்ண கவுண்டர் மவன் மாரிமுத்து கோயில் மால கொண்டாருறு..." என்றான்.

கூட்டம் நெருங்கி வந்துவிட்டது. மாரிமுத்து பெரிய மாலேயுடன் வேகமாக வர, அர்ச்சகர் மணி கையில் பரிவட்டத்தோடு புன்னகையுடன் பின்னால் வந்து நின்றார்.

"என்ன இதெல்லாம்?"

"பெரியவங்க நடந்த விசயங்கள மறந்துட்டு செல்லியாத்தா கோயில் பொறுப்ப வந்து ஏத்துக்கணும். ஆத்தாளோட கணக்கு வழக்கெல்லாம் சுத்தமாக் கொண்டாந்திருக்கேன். அவளோட ஒரு காசு கூட எனக்கு வேண்டாம்., நடுவிலே ஏதேதோ தப்பு நடந்து போச்சு. எல்லாத்தையும் சரி பண்ணித் தாரேன். ஐயாரு கோயிலாண்ட காத்துக்கிட்டு இருக்காரு. அவரால நடக்க முடியாது. அவரைத் தூக்கியாந்து கோயில்லே ஒக்கார வச்சிருக்கோம். மறுபடி செல்லியம்மன் ஆலயப் பொறுப்பு அத்தனையையும் உங்க கிட்டே செல்லியம்மனுக்கு முன்னாலேயே ஒப்படைக்கக் காத்துக்கிட்டு இருக்காரு."

தம்மண்ணன், மாரிமுத்து ஆகியோரிடம் இன்று ஏற்பட்டிருக்கிற மன மாறுதல் திடீரென்று ஏற்பட்டதல்ல என்பது அவருக்கும் தெரியும். எனினும் அதைப் பெரிதுபடுத்த அவர் விரும்பவில்லை. சூழ்நிலையின் சாதகத்தை அனுசரித்து எல்லாவற்றையும் மறந்து விட்டவர் போல மாரிமுத்துவைத் தழுவிக் கொண்டார்.

பொன்னியின்



இருபத்திநாலாம் அத்தியாயம்

காக்கையும் குயிலும்

இரவெல்லாம் கட்டையைப் போல் கிடந்து தூங்கி விட்டுக் காலையில் சூரியன் உதித்த பிறகே வந்தியத் தேவன் துயிலெழுந்தான். விழித்துக் கொண்ட பிறகும் எழுந்திருக்க மனம் வராமல் படுத்திருந்தான். மேலக் காற்று விர்ரென்று வீச, மரஞ் செடிகளின் கிளைகளும் இலைகளும் ஒன்றோடொன்று உராய்ந்து 'சோ' என்ற சத்தத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன. அந்த சுருதிக்கிணங்க, ஒரு இளம் பிள்ளையின் இனிய குரல் சுந்தர மூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பாடலைப் பண்ணுடன் பாடியது:

"பொன்னார் மேனியனே புலித்
தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல்
மிளிர்
கொன்றை அணிந்தவனே!"

இதைக் கேட்ட வந்தியத்தேவன் கண்ணை விழித்துப் பார்த்தான். அவனுக்கெதிரே பூந்தோட்டத்தில் கொன்றை மரங்கள் சரஞ்சரமாகப் பொன் மலர்களைத் தொங்க விட்டுக் கொண்டு காட்சியளித்தன. சேந்தன் அமுதன் ஒரு கையில் குடலையும் இன்னொரு கையில் அலக்கும் வைத்துக் கொண்டு, வாயினால் பாடிக் கொண்டே, கொன்றைமலர்களைப் பறித்துக்

செல்வன்

அமரர் கல்கி

கொண்டிருந்தான். அதிகாலையிலே எழுந்து ஸ்நானம் செய்து திருநீறு புனைந்திருந்த சேந்தன் அமுதன் சிவ பக்தனாகிய மார்க்கண்டனைப் போல் தோன்றினான். இப்படி இனிமையாகவும் அழகாகவும் பாடும் பிள்ளையின் குரலைக் கேட்க அவனுடைய அன்னை கொடுத்து வைக்கவில்லையே என்ற எண்ணத்துடன் வந்தியத்தேவன் எழுந்தான். அமுதனைப் போல் தானும் பூந்தோட்டம் வளர்த்துச் சிவ கைங்கரியம் செய்துகொண்டு ஏன் ஆனந்தமாய்க் காலங் கழிக்கக் கூடாது? எதற்காகக் கையில் வாளும் வேலும் ஏந்திக் கொண்டு ஊர் ஊராக அலைய வேண்டும்? எந்த நேரமும் பிறரைக் கொல்லுவதற்கும் பிறரால் கொல்லப்படுவதற்கும் ஆயத்தமாக ஏன் திரிய வேண்டும்? — இத்தகைய எண்ணங்கள் அவன் மனத்தில் உதித்தன. ஆனால் சிறிது நேரத்தில் மனம் மாறியது. சேந்தன் அமுதனைப் போல் உலகில் எல்லாருமே சிவ பக்தர்களாயிருந்து விடுவார்களா? இருடர்களும் கொள்ளைக்காரர்களும் வஞ்சகர்களும் எளியவர்களைத் துன்புறுத்துவதில் களிப்படைகிறவர்களும் இருக்கத்தான் இருப்பார்கள். இவர்களையெல்லாம் அடக்கி நியாயத்தையும் தர்மத்தையும் நிலை நாட்ட அரசாங்கம் வேண்டும். அரசாங்கம் நடத்த அரசர்களும் அமைச்சர்களும் வேண்டும். இவர்களுக்கு ஆபத்து வராமல் பாதுகாக்க வேளக்கர்ரப் படைகளும் வேண்டும். தன்னைப் போல் அரசர்களுக்கு ஓலை கொண்டு போகவும் ஆட்கள் வேண்டும்.... ஆம்! இன்று சுந்தர சோழ சக்கரவர்த்தியைப் பார்த்தே தீர வேண்டும். பெரிய பழுவேட்டரையர் திரும்பி வருவதற்குள் சக்கரவர்த்தியைப் பார்த்தால்தான் பார்த்தது. அவர் வந்துவிட்டால் அது சாத்தியமில்லாமலே போகலாம்....

பூந்தோட்டத்துக்குப் பக்கத்திலேயிருந்த தாமரைக் குளத்தில் குளித்துவிட்டு வந்து வல்லவரையன் ஆடை ஆபரணங்கள் அணிந்து தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டான். சக்கரவர்த்தியைத் தரிசனம் செய்யப் போகும்போது சாதாரணமாகப் போகலாமா? இதற்காகத்தான் அலங்கரித்துக் கொண்டானா, அல்லது பழுவூர் இளைய ராணியை அன்று மீண்டும் பார்க்கப் போகிறோம் என்கிற எண்ணமும் அவன் மனத்திற்குள் இருந்ததா என்று நாம் சொல்ல முடியாது.

காலை உணவுக்குப் பிறகு சேந்தன் அமுதன் உச்சி வேளை பூஜைக் கைங்கரியத்துக்காகப் பூக்குடலையுடன் கிளம்ப, வந்தியத்தேவன் சக்கரவர்த்தியின் தரிசனத்துக்காகப் புறப்பட்டான். இருவரும் நடந்தே சென்றார்கள்.

கோட்டைக்குள் குதிரையைக் கொண்டு போக வேண்டாம் என்று வல்லவரையன் முன்னமேயே தீர்மானித்திருந்தான். குதிரை நன்றாக இளைப்பாற அவகாசம் கொடுப்பது அவசியம். சீக்கிரத்தில் அக்குதிரையைத்தான் துரிதப் பிரயாணத்துக்கு உபயோகப்படுத்த வேண்டி வரலாம். யார் கண்டது? எப்படியானாலும், அது இங்கே இருப்பதுதான் நல்லது.

கோட்டை வாசல் போய்ச் சேரும் வரையில் அமுதனுடன் பேச்சுக் கொடுத்து இன்னும் சில விவரங்களைத் தெரிந்து கொண்டான்.

"உன் அன்னையைத் தவிர உனக்கு வேறு உற்றார் உறவினர் யாரும் கிடையாதா?" என்று வல்லவரையன் கேட்டதற்கு அமுதன் கூறியதாவது:—

"இருக்கிறார்கள். என் அன்னையுடன் கூடப் பிறந்த ஒரு தமக்கையும் தமையனும் உண்டு. தமக்கை காலமாகி



விட்டான். தமையனார் **கோடிக் கரைக் குழகர்** கோயிலில் புஷ்ப கைங்கரியம் செய்கிறார். அத்துடன் இரவு நேரங்களில் கலங்கரை விளக்கத்தில் தீப மேற்றிப் பாதுகாக்கும் பணியும் செய்து வருகிறார்.... அவருக்கு ஒரு புதல்வனும் புதல்வியும் உண்டு. புதல்வி....'' என்று நிறுத்தினான்.

''புதல்விக்கு என்ன?''

''ஒன்றுமில்லை. எங்கள் குடும்பத்திலேயே ஒரு விசித்திரம். சிலர் ஊமையாகப் பிறப்பார்கள்; மற்றவர்கள் இனிய குரல் படைத்திருப்பார்கள்; நன்றாய்ப் பாடுவார்கள்....''

''உன் மாமனின் மகள் ஊமை இல்லையே?'' என்றான் வந்தியத்தேவன்.

''இல்லை, இல்லை!''

''அப்படியானால் நன்றாய்ப் பாடக் கூடியவள் என்று சொல்லு. உன்னைக் காட்டிலும் நன்றாய்ப் பாடுவாளா?''

''அழகாயிருக்கிறது உங்கள் கேள்வி. 'குயில் காக்கையை விட நன்றாய்ப் பாடுமா?' என்று கேட்பது போலிருக்கிறது. **பூங்குழலி** பாடினால் சமுத்திர ராஜா அலை எறிந்து ஓசை செய்வதை நிறுத்திவிட்டு அமைதியாகக் கேட்பார். ஆடு மாடுகளும் காட்டு மிருகங்களும் மெய்மறந்து நிற்கும்....''

''உன் மாமன் மகளின் பெயர் பூங்குழலியா? அழகான பெயர்!''

''பெயர் மட்டும்தானா அழகு?''

''அவளும் அழகியாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், நீ இவ்வளவு பரவசமடைவாயா?''

''மானும் மயிலும் அவளிடம் அழகுக்குப் பிச்சை கேட்க வேண்டும். ரதியும் இந்திராணியும் அவளைப் போல் அழகியாவதற்குப் பல ஜன்மங்கள் தவம் செய்ய வேண்டும்.''

சேந்தன் அமுதனுடைய உள்ளம் சிவபக்தியிலேயே பூரணமாக ஈடுபட்டு விடவில்லையென்பதை வல்லவரையன் கண்டு கொண்டான்.

''அப்படியானால், உனக்குத் தகுந்த மணப்பெண் என்று சொல்லு. மாமன் மகளாகையால் முறைப் பெண்ணுங் கூடத்தானே? கல்யாணம் எப்போது?'' என்று கேட்டான் வந்தியத்தேவன்.

''எனக்குத் தகுந்தவள் என்று ஒரு நாளும் சொல்லமாட்டேன். நான் அவளுக்கு எவ்விதத்திலும் தகுதியில்லாதவன். பழைய நாட்களிலே போலப் பூங்குழலிக்குச் சுயம்வரம் வைத்தால் ஐம்பத்தாறு தேசத்து ராஜாக்களும் வந்து போட்டி போடுவார்கள்! தமயந்தியை மணந்து கொள்வதற்கு வானுலகத்திலிருந்து தேவர்கள் வந்ததுபோல் வந்தாலும் வருவார்கள். ஆனால் இந்தக் கலியுகத்தில் அவ்விதமெல்லாம் ஒருவேளை நடவாது...''

''அப்படியானால், உன்னை மணந்து கொள்ள அவள் விரும்பினாலும், நீ மறுத்துவிடுவாய் என்று சொல்லு!''

''நன்றாயிருக்கிறது. இறைவன் என் முன்னால் தோன்றி, 'நீ சுந்தர மூர்த்தியைப் போல் இந்த உடம்போடு கைலாஸத்துக்கு வருகிறாயா? அல்லது பூலோகத்திலிருந்து பூங்குழலியுடன் வாழ்கிறாயா?'' என்று கேட்டால் 'பூங்குழலியுடன் வாழ்கிறேன்' என்றுதான் சொல்லுவேன். ஆனால் நான் சொல்லி என்ன பயன்?''

''ஏன் பயன் இல்லை? உனக்குச் சம்மதமாயிருக்கும்போது அநேகமாகக் கல்யாணம் ஆனது போலத் தானே? எல்லாரும் பெண்களைக் கேட்டுக் கொண்டுதானா கலியாணம் செய்கிறார்கள்! உதாரணத்துக்கு, பெரிய பழுவேட்டரையர் அறுபத்தைந்து வயதுக்கு மேல் கலியாணம் செய்து கொண்டிருக்கிறாரே! அந்த

ராணியின் சம்மதத்தின் பேரிலா திருமணம் நடந்திருக்கும்......!''

''அண்ணு! அது பெரிய இடத்துச் சமாசாரம். நாம் ஏன் அதைப் பற்றிப் பேச வேண்டும்? முக்கியமாக, உங்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். நீங்கள் கோட்டைக்குள் போகிறீர்கள். கோட்டைக்குள் பழுவேட்டரையர்களைப் பற்றி எதுவும் பேச வேண்டாம். பேசினுல் ஆபத்து வரும்...!''

''ஏது தம்பி, ஒரேயடியாகப் பயமுறுத்துகிருயே?''

''உண்மையைத்தான் சொல்கிறேன். மெய்யாக இரண்டு பழுவேட்டரையர்களுந்தான் இப்போது சோழ சாம்ராஜ்யத்தையே ஆளுகிருர்கள். அவர்களுடைய அதிகாரத்துக்கு மிஞ்சிய அதிகாரம் வேறு கிடையாது!''

''சக்கரவர்த்திக்குக் கூடவா அவர்களைவிட அதிகாரம் இல்லை?''

''சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிருர். பழுவூர்க்காரர்கள் போட்ட கோட்டை அவர் தாண்டுவதில்லை என்று ஜனங்கள் சொல்லுகிருர்கள். அவருடைய சொந்தப் புதல்வர்களுடைய பேச்சுக்கூடக் காதில் ஏறுவதில்லை என்கிருர்கள்!''

''அப்படியா சமாசாரம்! பழுவேட்டரையர்களுடைய செல்வாக்கு அபாரமாய்த்தான் இருக்க வேண்டும். இரண்டு வருஷத்துக்கு முன்னுல் அவர்களுக்கு இத்தனை செல்வாக்கு இல்லை அல்லவா?''

''இல்லை; அதிலும் சக்கரவர்த்தி தஞ்சைக்கு வந்த பிறகு பழுவேட்டரையர்களுடைய அதிகாரம் எல்லையில்லாமல் போய்விட்டது. அவர்களைத் தட்டிப் பேசுவதற்கே யாரும் கிடையாது. அநிருத்த பிரமராயர் கூட வெறுப்படைந்துதான் பாண்டிய நாட்டுக்குப் போய்விட்டார் என்று கேள்வி.''

''பழையாறையிலிருந்து சக்கரவர்த்தி தஞ்சாவூருக்கு எதற்காக வந்தார்? உனக்குத் தெரியுமா, தம்பி!''

''நான் கேள்விப் பட்டதைச் சொல்கிறேன். மூன்று வருஷத்துக்கு முந்தி வீர பாண்டியன் போரில் மாண்டான். அச்சமயம் சோழர் படைகள் பாண்டிய நாட்டில் சில கொடூரங்களைச் செய்ததாகக் கேள்வி. யுத்தமென்ருல் அப்படித்தானே? மதுரை சோழ ராஜ்யத்துக்கு உட்பட்டு விட்டது. ஆனுல் வீர பாண்டியனுக்கு அந்தரங்கமான சிலர் எப்படியாவது பழிக்குப் பழி வாங்குவதென்று சபதம் எடுத்துக் கொண்டு சதி செய்கிருர்களாம். பழையாறையில் மன்னர் இருந்தால் அவரைப் பாதுகாக்க முடியாது என்றுதான் அவரைப் பழுவேட்டரையர்கள் தஞ்சைக்கு அழைத்து வந்து விட்டார்கள். இங்கே கோட்டையும் வலிவுள்ளது; கட்டுக் காவலும் அதிகம். அதோடு சக்கரவர்த்தியின் உடம்பு நலத்துக்கும் பழையாறையைக் காட்டிலும் தஞ்சாவூர் நல்லது என்று வைத்தியர்கள் சொன்னுர்கள்.''

''சுந்தர சோழரின் உடம்பைப் பற்றி எல்லாரும் சொல்கிருர்கள். ஆனுல் என்ன நோய் என்று மட்டும் யாருக்கும் தெரிவதில்லை.''

''தெரியாமல் என்ன? சக்கரவர்த்திக்குப் பக்கவாதம் வந்து இரண்டு கால்களும் சுவாதீனம் இல்லாமற் போய் விட்டன.''

''அடடா! அதனுல் அவரால் நடக்கவே முடிவதில்லையோ?''

''நடக்க முடியாது. யானை அல்லது குதிரை மீது ஏறவும் முடியாது. படுத்த படுக்கைதான். பல்லக்கில் ஏற்றி இடத்துக்கு இடம் கொண்டு போனுல்தான் போகலாம். அதிலும் வேதனை அதிகம். ஆகையால் சக்கரவர்த்தி அரண்மனையை விட்டு வெளிக் கிளம்புவதே இல்லை. சில காலமாகச் சித்தம் அவ்வளவு சுவாதீனத்தில் இல்லையென்றும் சொல்கிருர்கள்.''

''ஆஹா! என்ன பரிதாபம்!''

''பரிதாபம் என்று கூடச் சொல்லக் கூடாது, அண்ணு! அதுவும் ராஜ நிந்தனை என்று சொல்லிப் பழுவேட்டரையர்கள் தண்டனை விதிப்பார்கள்.''

பழுவேட்டரையர்! பழுவேட்டரையர்! — எங்கே, யாரிடம் பேசினுலும் பழுவேட்டரையர்களைப் பற்றியே பேச்சு! அவர்கள் எவ்வளவு பராக்கிரமசாலிகளாய் இருந்தால்தான் என்ன? தன பொக்கிஷம், தானியக் களஞ்சியம், தஞ்சை நகர்க் காவல்,

ஒற்றர் படை எல்லாம் அவர்களுடைய வசத்தில் இருக்கும்படி சக்கரவர்த்தி விட்டிருக்கக் கூடாது. இவ்வளவு அதிகாரத்தையும் அவர்களிடம் விட்டதனால் அல்லவா சக்கரவர்த்திக்கு விரோதமாகச் சதி செய்யத் தொடங்கி விட்டார்கள்? இவர்களுடைய சதி எவ்வளவு தூரம் பலிக்குமோ? அது பலிக்காமல் போக நம்மால் இயன்ற பிரயத்தனம் செய்ய வேண்டும். சந்தர்ப்பம் கிடைத்தால் சக்கரவர்த்திக்கும் எச்சரிக்கை செய்து வைக்க வேண்டும்....!

இதற்குள் கோட்டை வாசல் வந்து விட்டது. சேந்தன் அமுதன் தனது புதிய நண்பனைப் பிரிந்து தளிக்குளத்தார் ஆலயத்தை நோக்கிச் சென்றான்.

வந்தியத்தேவனோ எத்தனையோ மனக் கோட்டைகளுடன் அந்தக் கோட்டை வாசலை நெருங்கினான்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

கோட்டைக்குள்ளே

பனை இலச்சினை தாங்கிய மோதிரம் கதைகளில் வரும் மாய மோதிரத்தைப் போல் அபாரமான மந்திர சக்தி வாய்ந்ததாயிருந்தது.

காலை நேரத்தில் பால் தயிர் விற்பவர்கள், பூக் கூடைக்காரர்கள், கறிகாய் விற்பவர்கள், பழக் கடைக்காரர்கள், மற்றும் பல தொழில்களையும் செய்வோர், கணக்கர்கள், உத்தியோகஸ்தர்கள் முதலியோர் ஏகக் கூட்டமாகக் கோட்டைக்குள் பிரவேசிக்க முயன்று கொண்டிருந்தார்கள். கோட்டைக் கதவின் திட்டி வாசலைத் திறந்து அவர்களை ஒவ்வொருவராக உள்ளே விடுவதிலே கோட்டை வாசற் காவலர்கள் தங்கள் படாடோப அதிகாரத்தைக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால் நம் இளம் வீரன் பனை இலச்சினை பொறித்த மோதிரத்தைக் காட்டியதுதான் தாமதம், காவலர்கள் மிக்க மரியாதை காட்டி, கோட்டைக் கதவுகளில் ஒன்றைத் திறந்துவிட்டார்கள். வந்தியத் தேவனும் கோட்டைக்குள் பிரவேசித்தான்.

ஆகா! தஞ்சைபுரிக் கோட்டைக்குள் அவன் கால் வைத்த வேளை என்ன வேளையோ தெரியாது! அதிலிருந்து எத்தனை எத்தனை முக்கிய நிகழ்ச்சிகள் தொடர்ந்து வந்தன! சோழ சாம்ராஜ்யத்தின் சரித்திரத்திலேயே அது ஒரு முக்கிய சம்பவமாக வல்லவா ஏற்பட்டது?

கோட்டைக்குள் பிரவேசித்துச் சிறிது நேரம் வரை வந்தியத் தேவன் ஒரே பிரமிப்பில் ஆழ்ந்திருந்தான்.

காஞ்சி பழைய பல்லவ சாம்ராஜ்யத்தின் தலைநகரம். பல தடவை பகைவர்களின் தாக்குதல்களுக்கு உட்பட்டது. அங்கிருந்த மாளிகைகளும் மண்டபங்களும் மற்ற கட்டடங்களும் பழமையடைந்து சிதிலமாகிப் பூஞ்சக் காளான் பூத்திருந்தன. அழகிய சிற்ப வேலைப்பாடுகள் அமைந்த கட்டடங்கள்தான்; ஆனாலும் பல பகுதிகள் இடிந்தும் சிதைந்தும் கிடந்தன. ஆதித்த கரிகாலர் வந்த பிறகு புதுப்பித்துக் கட்டிய சில மாளிகைகள் மட்டும், பட்ட மரத்தில் ஒவ்வோரிடத்தில் தளிர்த்திருக்கும் மலர்களைப் போல் விளங்கி, நகரத்தின் பாழடைந்த தோற்றத்தை மிகைப்படுத்திக் காட்டின.

அந்தத் தஞ்சையின் தோற்றமோ நேர் மாறாக இருந்தது. எல்லாம் புதிய மாளிகைகள்; புதிய மண்டபங்கள். வெண் சுண்ண மாளிகைகளுக்கு மத்தியில் செம் மண்ணில் சுட்ட செங்கற்களினால் கட்டிய சிற்சில கட்டிடங்கள் வைரங்களுக்கும் முத்துக்களுக்கும் இடையிலே இரத்தினங்களைப் பதித்

ததுபோல் ஒளி வீசித் திகழ்ந்தன. ஆங்காங்கு அரண்மனைத் தோட்டங்களில் வளர்ந்திருந்த விருட்சங்கள் செம்மண் பூமியின் சத்தை உண்டு, கொழு கொழுவென்று செழித்து ஓங்கியிருந்தன. புன்னை, தென்னை, அசோகம், அரசு, ஆல், பலா, வேம்பு முதலிய மரங்களில் அடர்ந்து தழைத்திருந்த இலைகள் மரகதப் பச்சையின் பல சாயல்களுடன் கண்ணுக்கு இனிமையையும் மனத்துக்கு உற்சாகத்தையும் அளித்தன. அதிசய சக்தி வாய்ந்த மந்திரவாதியான மயன் புதிதாக நிர்மாணித்த நகரம் இது. இந்தப் புதிய நகருக்குள் பிரவேசிக்கும் போதே ஒரு புதிய உற்சாகம் பிறந்தது; உள்ளம் பூரித்துப் பொங்கியது; காரணம் தெரியாத கர்வம் நிறைந்தது.

கோட்டையின் கட்டுக்காவலையும் கோட்டைக்குள் பிரவேசிப்பதில் உள்ள நிர்ப்பந்தங்களையும் கவனித்திருந்த வந்தியத்தேவன் உள்ளே அதிக ஜன நடமாட்டமே இல்லாமல் வெறிச்சென்று இருக்கும் என்று எண்ணியிருந்தான். ஆனால் அதற்கு நேர் மாறாக, தெருக்களெல்லாம் ஜே ஜே என்று கூட்டமாயிருந்தன. குதிரைகளும் குதிரைகள் பூட்டிய ரதங்களும் பூமி அதிரும்படி சத்தமிட்டுக்கொண்டு சென்றன; கரிய குன்றுகள் அசைந்து வருவது போல் நிதானமாகவும் கம்பீரமாகவும் நடந்து வந்த யானைகளின் மணி ஓசை நாலாபுறங்களிலும் கேட்டது! பூ, கறிகாய், பழம், பால் தயிர் விற்போரின் கூச்சல்கள் செவிகளைத் துளைத்தன. அவ்வப்போது காலத்தை அறிவிக்கும் ஆலாட்ச மணிகளின் ஓசையுடன் பேரிகையின் முழக்கம் கலந்தது. இசைக் கருவிகள் எழுப்பிய இன்னிசைகளுடன் மங்கையர் பாடிய மதுர கீதங்கள் கலந்தன. எல்லாம் ஒரே திருவிழாக் கோலாகலமாகவே இருந்தது.

நகரம் என்றால் இதுவல்லவா நகரம்! நாளுக்கு நாள் விரிந்து பரந்து வரும் ஒரு சாம்ராஜ்யத்தின் தலைநகரம் இப்படித்தான் இருக்கும் போலும்!


தான் இத்தகைய நகரத்துக்கு முற்றிலும் புதியவன் என்று காட்டிக் கொள்ள வந்தியத் தேவன் விரும்பவில்லை. யாரையாவது வழி கேட்டால் தன்னை ஏற இறங்கப் பார்த்து, "நீ இந்த ஊருக்குப் புதியவனா?" என்று அலட்சியமாகப் பேசுவார்கள். அரண்மனைக்கு வழி கேட்கிறவனை வெளியூரிலிருந்து வந்த பட்டிக்காட்டான் என்று கூட நினைத்து விடுவார்கள். ஆகையால், யாரையும் வழி கேட்காமலேயே சக்கரவர்த்தியின் அரண்மனையைக் கண்டு பிடித்துப் போய்விட வேண்டும். அது அப்படியொன்றும் முடியாத காரியமாயிராது....

எந்தப் பக்கம் நோக்கினாலும் மாட மாளிகைகளின் மீது மகர தோரணங்களும் கொடிகளும் தோன்றின. வேகத்துடன் வீசிய மேலக் காற்றுடன் அவை துவந்த யுத்தம் செய்து சடசட படபடவென்று சத்தம் செய்து கொண்டு பறந்தன. புலிக்கொடிகளும் பனைக் கொடிகளுமே அதிகமாகக் காணப்பட்டன. மற்ற எல்லாக் கொடிகளையும் தாழ்த்திக் கொண்டு மேக மண்டலத்தை அளாவிக் கம்பீரமாக ஒரு பெரிய புலிக் கொடி பறந்தது. அதுவே சக்கரவர்த்தி தங்கும் அரண்மனையாக இருக்க வேண்டும் என்று வல்லவரையன் ஊகித்துக் கொண்டு, அக் கொடி பறந்த திக்கை நோக்கித் தான் மேலே செய்ய வேண்டிய காரியத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டு நடந்தான்.

சக்கரவர்த்தியை நேரில் சந்தித்து ஓலையைக் கொடுப்பது முதற் காரியம். அதோடு ஆதித்த கரிகாலர் நேரில் வாய்மொழியாகத் தெரிவிக்கச் சொன்னதையும் சொல்ல வேண்டும். சின்னப் பழுவேட்டரையரின் அனுமதியின்றிச் சக்கரவர்த்தியைப் பார்க்க



முடியாது. அவருடைய அநுமதியை எப்படிப் பெறுவது? கோட்டைக்குள் பிரவேசிப்பதற்குத் தெய்வம் துணை செய்தது. ஆனால் முழுதும் தெய்வம் வழி காட்டும் என்றே இருந்துவிடலாமா? சக்கரவர்த்தியைப் பார்ப்பதற்கு நாமேதான் யுக்தி கண்டு பிடித்தாக வேண்டும்! அது என்ன யுக்தி! வாணர் குலத்தில் வழி வழியாக வந்த மூளையே! கொஞ்சம் வேலை செய், பார்க்கலாம்! சிறிது உன் கற்பனா சக்தியைத் தட்டி விடு! காவியம் கவிதை எழுதுவோருக்கு மட்டும் கற்பனா சக்தி தேவை என்பதில்லை. உன்னைப் போல் இராஜாங்க காரியங்களில் ஈடுபட்டவர்களுக்கும் கற்பனா சக்தி வேண்டும். எங்கே, உன் கைவரிசையைக் காட்டு, பார்க்கலாம்....!



பெரிய பழுவேட்டரையர் இன்னும் கோட்டைக்கு வந்து சேரவில்லை என்பதை வந்தியத்தேவன் உறுதிப் படுத்திக் கொண்டான்.

கோட்டை வாசலைத் தாண்டி உள்ளே வந்ததும், அங்கே உட்புறத்தில் நின்ற காவலன் ஒருவனிடம், "ஏன் அப்பா! பழுவேட்டரையர் திரும்பி வந்துவிட்டாரா?" என்று கேட்டான்.

"யாரைக் கேட்கிறாய், தம்பி! சின்னவர் அரண்மனையில்தான் இருக்கிறார்."

"அது எனக்குத் தெரியாதா? நடு நாட்டுக்குச் சென்றிருந்த பெரியவரைப் பற்றித்தான் கேட்கிறேன்."

"ஓ! பெரியவர் நடு நாட்டுக்கா சென்றிருந்தார்? அது எனக்குத் தெரியாது. நேற்று மாலை இளைய ராணியின் பல்லக்குத்திரும்பிவந்தது. பெரிய அரசர் இன்னும் வரவில்லை. இன்று இரவு திரும்பக் கூடும் என்று செய்தி வந்திருக்கிறது!" என்றான் காவலன்.

இது நல்ல செய்திதான். பெரிய பழுவேட்டரையர் திரும்பி வருவதற்குள்ளே எப்படியும் சக்கரவர்த்தியைப் பார்த்து ஓலையைக் கொடுத்தாக வேண்டும். அதற்கு என்ன வழி....? வந்தியத்தேவனுடைய மூளையில் ஒரு யோசனை உதயமாகி விட்டது! அந்தக் கணமே அவன் முகத்தில் கவலைக் குறி மறைந்தது; குறும்புப் புன்னகையும் குதூகல மலர்ச்சியும் தோன்றின.

சக்கரவர்த்தியின் அரண்மனையை அணுகுவதற்கு அவன் அதிகமாக



அலைந்து திரிய வேண்டியிருக்கவில்லை. பெரிய புலிக்கொடியைப் பார்த்துக் கொண்டே போனான். விரைவிலேயே அரண்மனை முகப்பை அடைந்து விட்டான். ஆகா! இது எத்தகைய அரண்மனை! தேவலோகத்தில் தேவேந்திரனுடைய அரண்மனையையும் உஜ்ஜயினி நகரத்து விக்ரமாதித்தனுடைய அரண்மனையையும் போல அல்லவா இருக்கிறது? அந்த முன் வாசல் மண்டபத்துத் தூண்களில் செய்திருக்கும் சிற்ப வேலைகளின் அற்புதந்தான் என்ன! ஒவ்வொரு தூணிலும் செதுக்கியிருக்கும் குதிரை முன் கால்களைத் தூக்கிக் கொண்டு அப்படியே பாய்வது போல இருக்கிறதே!

அரண்மனையை அடைவதற்குப் பல பாதைகள் நாலு திசைகளிலிருந்தும் வந்தன. ஒவ்வொரு பாதை முடிவிலும் இரண்டு குதிரை வீரர்களும் சில காலாள் வீரர்களும் நின்றார்கள். அவர்களண்டை நெருங்கி வராமலே அவ்வீதிகளில் நடமாடிய ஜனங்களில் பலர் திரும்பிப் போய்விட்டார்கள். ஒரு சிலர் அவர்கள் கிட்ட வந்து சற்றே நின்று அரண்மனை முகப்பை எட்டிப் பார்த்து விட்டும் புலிக்கொடியை அண்ணாந்து பார்த்துவிட்டும் போனார்கள். அதிக நேரம் நின்று கூட்டம் சேரும் போலிருந்தால் காவலர்கள் கையினால் சமிக்ஞை செய்து அவர்களைப் போகும்படி செய்தார்கள். கூட்டங்கூடி நின்றவர்களும் இரைந்து பேசாமல் காதோடு மெள்ளப் பேசிக் கொண்டார்கள்.

வந்தியத்தேவன் மற்றவர்களைப்

போல் சிறிதும் தயங்கி நிற்கவில்லை. வேகமாகவும் முடுக்காகவும் நடந்து சென்று அரண்மனைப் பாதைக் காவலர்களை நெருங்கினான். உடனே இரு குதிரைகளும் முகத்தோடு முகம் உரையும்படி வழிமறித்து நின்றன. குதிரை மேலிருந்தவர்கள், கீழே நின்றவர்கள், அனைவருடைய வேல்களும் முனையோடு முனை பொருந்தி வழியை அடைத்தன.

வந்தியத்தேவன் தன்னுடைய மந்திர மோதிரத்தை நீட்டினான். அவ்வளவுதான்; அதைப் பார்த்தவுடனே அவ்வீரர்களின் முடுக்கும் பெருமிதமும் அடங்கின. ஒருவர்பின் ஒருவராக மூன்றுபேர் மோதிரத்தை உற்றுப் பார்த்தார்கள். "சரி! வழி விடுங்கள்!" என்று ஒருவன் சொன்னான். இரண்டு வேல்கள் உடனே அகன்று நின்று வழிவிட்டன. வந்தியத்தேவன் மிடுக்குடன் நடந்து சென்றான்.

ஆயினும், என்ன? இன்னும் எத்தனை காவல்கள் இப்படி உண்டோ! சின்னப் பழுவேட்டரையர் எங்கே இருக்கிறாரோ? எப்படி விசாரிப்பது? யாரிடம் கேட்பது? சின்னப் பழுவேட்டரையரின் அனுமதியின்றிச் சக்கரவர்த்தியைப் பார்க்க முடியாது! இந்தப் பெரிய விஸ்தாரமான அரண்மனையில் நோயாளியான சக்கரவர்த்தி எந்த இடத்தில் இருக்கிறாரோ? அதைத்தான் எவ்விதம் தெரிந்து கொள்வது?......



தனக்குப் பின்னால் சிலர் கூட்டமாக வருவதை அறிந்து வந்தியத்தேவன் திரும்பிப் பார்த்தான். ஆம்; பத்துப் பதினைந்து பேர் கும்பலாக வந்து, காவலர்களருகில் நின்றார்கள். அவர்கள் உயர்ந்த பட்டுப் பீதாம்பரங்கள் தரித்திருந்தார்கள். முத்து மாலைகள், மகர கண்டிகள், காதில் குண்டலங்கள் அணிந்திருந்தார்கள். சிலர் நெற்றியில் திருநீறும் மற்றவர்கள் சந்தனம், குங்குமம், சவ்வாதுப் பொட்டும் இட்டிருந்தார்கள்! ஆ! இவர்களைப் பார்த்தால் புலவர்களைப் போல அல்லவா இருக்கிறது!... ஆம், புலவர்களின் கூட்டந்தான் என்று மறுகணமே தெரிந்துவிட்டது.

காவலர்களில் ஒருவன்,— அவர்களுடைய தலைவனாயிருக்க வேண்டும்,—

"கவிராயர்கள் வந்திருக்கிறார்கள்! வழி விடுங்கள்!" என்று சொன்னதுடன், ஒரு வீரனைப் பார்த்து, "சின்னப் பழுவேட்டரையர் ஆஸ்தான மண்டபத்தில் இருக்கிறார். அவரிடம் கொண்டு போய்விடு!" என்றான்.

"புலவர்களே! ஏதாவது பரிசு கிடைத்தால் போகும்போது இந்த வழியாகவே திரும்பிச் செல்லுங்கள்! பரிசு கிடைக்காவிட்டால் வேறு வழியாகப் போய் விடுங்கள்!" என்று மேலும் அவன் சொன்னதைக் கேட்டு மற்றவர்கள் சிரித்தார்கள்.

சற்று நின்று இந்தச் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த வந்தியத்தேவன், "பழம் நழுவிப் பாலில் விழுந்தது!" என்று எண்ணிக்கொண்டான். இந்தப் புலவர்களுடனே போனால், சின்னப் பழுவேட்டரையர் இருக்குமிடம் போய்ச் சேரலாம். யாரையும் வழி விசாரிக்க வேண்டியதில்லை. பிறகு, நமது சாமர்த்தியம் இருக்கிறது; அதிர்ஷ்டமும் இருக்கிறது! இவ்வாறு எண்ணியபடியே புலவர் கூட்டத்துடன் சென்றான்.

இருபத்தாறாம் அத்தியாயம்

"அபாயம்! அபாயம்!"

ஆஸ்தான மண்டபத்தில் புலவர்களுக்கு முன்னதாகவே வந்தியத்தேவன் பிரவேசித்தான். அங்கே ஓர் உயர்ந்த சிம்மாசனத்தில் கம்பீரமாக வீற்றிருப்பவர்தான் சின்னப் பழுவேட்டரையராயிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டான். அவரைச் சுற்றிலும் பலர் கை கட்டி வாய் புதைத்து நின்றார்கள். அன்று வந்த ஓலைகள் பலவற்றை வைத்துக் கொண்டு ஒருவர் நின்றார். கணக்காயர் கணக்குச் சொல்வதற்குக் காத்திருந்தார். காவல் படைத் தலைவர்கள் சின்னப் பழுவேட்டரையருடைய அன்றாடக் கட்டளைகளை எதிர்பார்த்து நின்றார்கள். ஏவிய வேலைகளைச் செய்வதற்குப் பணியாளர்கள் காத்திருந்தார்கள். சிம்மாசனத்துக்குப் பின்னால் நின்று சில ஏவலாளர் வெண்சாமரம் வீசிக் கொண்டிருந்தார்கள். கையில் வெற்றிலைப் பெட்டியுடன் ஒருவன் ஆயத்தமாயிருந்தான்.

மிடுக்கிலும் பெருமிதத்திலும் யாருக்கும் பின்வாங்காதவனான வந்தியத்தேவன் கூடச் சிறிது அடக்க ஒடுக்கத்துடனேதான் சின்னப் பழுவேட்டரையரிடம் அணுகினான்.

பெரியவரைக் காட்டிலும் சின்னவர் வீர கம்பீரத்தில் இன்னும் ஒருபடி உயர்ந்தவராகவே காணப்பட்டார்.

நமது வீரனைப் பார்த்ததும் அவர் முக மலர்ச்சியுடன், ''யார், தம்பி, நீ! எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டார்.

வீர வாலிபர்களைக் கண்டால் சின்னப் பழுவேட்டரையரின் கடுகடுத்த முகம் மலர்ந்துவிடும். நாடெங்கும் உள்ள வாலிப வீரர்களைத் தம்முடைய காவல் படையில் சேர்த்துக் கொள்வதில் அவருக்கு மிக்க ஆர்வம்.

''தளபதி! நான் காஞ்சீபுரத்திலிருந்து வந்தேன்! இளவரசர் ஓலை கொடுத்து அனுப்பினார்!'' என்று பணிவான குரலில் வந்தியத்தேவன் மறுமொழி சொன்னான்.

காஞ்சீபுரம் என்றதும் சின்னப் பழுவேட்டரையரின் முகம் கடுத்தது.

''என்ன? என்ன சொன்னாய்?'' என்று மீண்டும் கேட்டார்.

''காஞ்சீபுரத்திலிருந்து இளவரசர் கொடுத்த ஓலையுடன் வந்தேன்!''

''எங்கே? இப்படிக் கொடு!'' என்று அலட்சியமாய்க் கேட்ட போதிலும், அவருடைய குரலில் சிறிது பரபரப்புத் தொனித்தது.

வல்லவரையன் அடக்க ஒடுக்கத்துடன் ஓலைச் சுருளை எடுத்துக் கொண்டே, ''தளபதி! ஓலை சக்கரவர்த்திக்கு!'' என்றான்.

அதைப் பொருட்படுத்தாமல் சின்னப் பழுவேட்டரையர் ஓலையை வாங்கி ஆவலுடன் பார்த்தார். பக்கத்தில் நின்றவனிடம் கொடுத்து அதைப் படிக்கச் சொன்னார். கேட்டுவிட்டு, ''புதிய விஷயம் ஒன்றுமில்லை!'' என்று தமக்குத் தாமே முணுமுணுத்துக் கொண்டார்.

''தளபதி! நான் கொண்டு வந்த ஓலை......'' என்றான் வந்தியத்தேவன்.

''ஓலைக்கு என்ன? நான் கொடுத்து விடுகிறேன் சக்கரவர்த்தியிடம்!''

''இல்லை; என்னையே நேரில் சக்கரவர்த்தியின் கையில் கொடுக்கும்படி...''

''ஓகோ! என்னிடம் நம்பிக்கை இல்லையா? இளவரசர் ஆதித்தர் அப்படி உன்னிடம் சொல்லி அனுப்பினாரோ?'' என்ற போது தஞ்சைக் கோட்டைத் தளபதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

''இளவரசர் அவ்வாறு சொல்லவில்லை; தங்கள் தமையனார்தான் அவ்விதம் கட்டளையிட்டார்!''

''என்ன? என்ன? பெரியவரை நீ எங்கே பார்த்தாய்?''

''வழியில் கடம்பூர் சம்புவரையர் வீட்டில் ஒருநாள் இரவு தங்கியிருந்

தேன். அங்கேதான் பார்க்க நேர்ந்தது. இந்த மோதிரத்தையும் அவர்தான் கொடுத்தனுப்பினார்......''

''ஆகா! இதை நீ ஏன் முன்னமே சொல்லவில்லை? கடம்பூரில் இரவு நீ தங்கியிருந்தாயா? இன்னும் யார் யார் வந்திருந்தார்கள்?''

''மழநாடு, நடுநாடு, திருமுனைப்பாடி நாடுகளிலிருந்து பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள்......''

''இரு! இரு! பிறகு சாவகாசமாகக் கேட்டுக் கொள்கிறேன். முதலில் நீயே இந்த ஓலையைச் சக்கரவர்த்தியிடம் கொடுத்துவிட்டு வா! அப்புறம் தமிழ்ப் புலவர்கள் வந்துவிடுவார்கள். வளவளவென்று பேசிக் கொண்டிருப்பார்கள்......இந்தப் பிள்ளையைச் சக்கரவர்த்தியிடம் அழைத்துப் போ!'' என்று அருகில் நின்ற வீரன் ஒருவனுக்குச் சின்னப் பழுவேட்டரையர் கட்டளையிட்டார்.

அந்த வீரனைத் தொடர்ந்து வந்தியத்தேவன் மேலும் அரண்மனையின் உட்புறத்தை நோக்கிச் சென்றான்.

மூன்றுபக்கங்களில் அலைகடல் முழக்கம் கேட்கும்படியாகப் பரந்திருந்த சோழ சாம்ராஜ்யத்தின் சிங்காதனம் சில காலமாக நோய்ப் படுக்கையாக மாறியிருந்தது. அந்தச் சிம்மாதனத்தில் பராந்தக சுந்தர சோழ சக்கரவர்த்தி சாய்ந்து படுத்திருந்தார். இராஜ்யாதிகாரங்களையெல்லாம் மற்றவர்களிடம் ஒப்படைத்துவிட்டு மருத்துவ சிகிச்சை செய்து கொண்டிருந்தாராயினும், சிற்சில முக்கியமான சந்தர்ப்பங்களில் முக்கியமான மனிதர்களுக்கு அவர் தரிசனம் அளித்தே தீரவேண்டியிருந்தது. அமைச்சர்களும் தளபதிகளும் வேளக்காரப் படை வீரர்களும் அவரைத் தினந்தோறும் வந்து தரிசித்துவிட்டுப் போவது இராஜ்யத்தின் நன்மைக்கு அவசியமாயிருந்தது.

எத்தனையோ போர் முனைகளில் செயற்கரும் வீரச் செயல்கள் புரிந்து அஸகாய சூரர் என்று பெயர் பெற்றவரும், நாடுநகரமெல்லாம் 'சுந்தர சோழர்' என்று அழைக்கப்பட்டவரும், அழகில் மன்மதனுக்கு ஒப்பானவர் என்று புகழ் பெற்றவருமான சக்கரவர்த்தியின் நோய்ப்பட்டு மெலிந்த தோற்றத்தைக் கண்டதும் வந்தியத்தேவனால் பேசவே முடியாமற் போய்விட்டது. அவனுடைய கண்களில் நீர் ததும்பியது. அருகில் சென்று அடிபணிந்து வணங்கிப் பயபக்தியுடன் ஓலையை நீட்டினான்.

சக்கரவர்த்தி ஓலையை வாங்கிக் கொண்டே ''எங்கிருந்து வந்தாய்? யாருடைய ஓலை?'' என்று ஈனஸ்வரத்தில் கேட்டார்.

''பிரபு! காஞ்சியிலிருந்து வந்தேன். இளவரசர் ஆதித்தர் தந்த ஓலை!'' என்று வந்தியத்தேவன் நாத் தழுதழுக்கக் கூறினான்.

சக்கரவர்த்தியின் முகம் உடனே பிரகாசம் அடைந்தது. அவர் அருகில் திருக்கோவலூர் மலையமான் புதல்வியான சக்கரவர்த்தினி வானமாதேவி வீற்றிருந்தாள். அவளைப் பார்த்து, ''தேவி! உன் புதல்வனிடமிருந்து ஓலை வந்திருக்கிறது!'' என்று சொல்லிவிட்டுப் படித்தார்.

''ஆகா! இளவரசன் காஞ்சியில் பொன் மாளிகை கட்டியிருக்கிறானாம். நீயும் நானும் அங்கு வந்து சில நாள் தங்கியிருக்க வேண்டுமாம்!'' என்று சொல்லியபோதே, சக்கரவர்த்தியின் முகம் முன்னைவிடச் சுருங்கியது.

''தேவி! உன் புதல்வன் செய்கையைப் பார்த்தாயா? என் பாட்டனார், உலகமெல்லாம் புகழ்பெற்ற பராந்தக சக்கரவர்த்தி, அரண்மனையில் சேர்ந்திருந்த தங்கத்தையெல்லாம் அளித்துத் தில்லை அம்பலத்துக்குப் பொன் கூரை வேய்ந்து, பொன்னம்பலம் ஆக்கினார். நம்முடைய குலத்தில் தோன்றிய பெரியவர்கள் யாரும் தாங்கள் வசிக்கும் அரண்மனையைப் பொன்னால் கட்டியதில்லை. அரண்மனை கட்டுவதைக் காட்டிலும் ஆலயம் எடுப்பதையே முக்கியமாகக் கருதினார்கள். ஆனால் ஆதித்த கரிகாலன் இப்படிச் செய்திருக்கிறான்! ஆகா! இந்தத் தெய்வ நிந்தனைக்கு என்ன பரிகாரம் செய்வது?'' என்றார்.

மகனிடமிருந்து ஓலை வந்தது என்பதைக் கேட்டுச் சிறிது மலர்ச்சியடைந்த தேவியின் முகம் மறுபடி முன்னைக்



ஒருத்தரைப் போல் ஒருத்தர் நிறம் இருத்தல் இல்லை.


பொருத்தமளிக்க உமக்கென்றே 3வித வண்ணச் சாயல்களில் வருவது லக்மே காலமைன் ஒன்றே.

லக்மே காலமைன் ஒன்றுதான்
மூவித வண்ணச் சாயல்களில்
மோகனமாய் வருகுது:
நேச்சுரல், லைட், கோல்டு, இதில்
உமக்கொன்று சேர்த்தி,
ஒருங்கிணைய நேர்த்தி-எண்ணிலா
வண்ண மேனியரை இனம்பிரித்து
உணருதே லக்மே. இன்மணமுடன்
மேனிமீது இலகுவாய் இழையும்
லக்மே காலமைன் —தனிநிற
உரிமையைத் தருகுது உமக்கு.
பரிட்சார்த்தப் பேக்காகவும்
கிடைக்குது பதம்பார்க்க வசதியாக

நேச்சுரல்
—மாநிற
மேனியருக்கு

லைட்
—சிகப்பு
மேனியருக்கு

கோல்டு
—கருவண்ண
மேனியருக்கு



லக்மே காலமைன்

சரும வண்ணம் எவ்வண்ணம்
சாயலுண்டு அவ் வண்ணம்.

Tm



உங்களுடைய ஆயுள் காப்பு பாலிசி முதிர்ச்சி அடையும் பொழுது...

தயவு செய்து பாலிசி பத்திரத்தை தீர்ப்பு ரசீதுடன் திருப்பி அனுப்புங்கள்.

உரிய தொகையை துரிதமாக அளிக்க எங்களுக்கு உதவும்.

எல்.ஐ.சி. சாதாரணமாய் பாலிசி முதிர்வதற்கு அல்லது எஞ்சியிருப்பவர் லாபதவணை முதிர்வதற்கு வெகு நாட்கள் முன்பே முதிர்ச்சி அடையும் ரசீதை அனுப்புகிறது. நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ரசீதில் கையொப்பமிட்டு, சாட்சிக் கையெழுத்தும் வாங்கி பாலிசி பத்திரத்தோடு சேர்த்து எல்.ஐ சி. அலுவலகத்திற்குத் தவறாமல் அனுப்புவதுதான். இப்படிச் செய்தால் நாங்கள் பாலிசி முதிரும் தினத்திற்கு முன்பே உங்களுக்குப் பின் தேதியிட்டு செக்கு அனுப்பமுடியும்.

நினைவிலிடுங்கள்

உங்களுக்குத் தீர்ப்பு ரசீது பாலிசி முதிரும் தினத்திற்கு முன்பே கிடைக்கவில்லை யெனில் துரிதமாக செயல்புரிய உங்களுடைய ஏஜண்ட் அல்லது உங்கள் பாலிசியை கவனிக்கும் எல்.ஐ.சி. கிளை அலுவலகத்திடம் தொடர்பு கொள்ளுங்கள். எல்.ஐ.சி.. செக்கை உங்கள் வாயிற்படியில் அளிக்க எல்லா முயறசிகளும் எடுக்கும்.

தயவு செய்து பாலிசி பத்திரத்தை பத்திரமாக வைத்திடுங்கள். நீங்கள் வேறிடத்திற்குக் குடி பெயர்ந்தால் உங்கள் புதிய முகவரியை உடனே தெரியப்படுத்துங்கள். உங்களுக்கு நன்கு சேவை புரிய எங்களுக்கு உதவுங்கள்



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

30 ஆண்டுகள் மக்கள் சேவையில்

LIC/CO/2-87



காட்டிலும் அதிகமாக வாடியது. மறுமொழி ஒன்றும் அவளால் சொல்ல முடியவில்லை.

அச்சமயத்தில் வந்தியத்தேவன் தைரியமும், துணிவும் வரவழைத்துக் கொண்டு, "பிரபு! தங்கள் திருக்குமாரர் செய்தது அப்படி ஒன்றும் தவறில்லையே? உசிதமான காரியத்தையே செய்திருக்கிறார். மகனுக்குத் தாயும் தந்தையுமே முதன்மையான தெய்வங்கள் அல்லவா? ஆகையால் தாங்களும் தேவியும் வசிப்பதற்காகத் தங்கள் புதல்வர் பொன் மாளிகை கட்டியது முறைதானே?" என்றான்.

சுந்தர சோழர் புன்னகை பூத்து, "தம்பி! நீ யாரோ தெரியவில்லை. மிக்க அறிவாளியாயிருக்கிறாய். சாதுர்யமாகப் பேசுகிறாய். ஆனால் மகனுக்குத் தாய் தந்தை தெய்வமே என்றாலும், மற்றவர்களுக்கு இல்லை தானே? எல்லாரும் வழிபடும் தெய்வத்துக்கு அல்லவா பொன் கோயில் எடுக்க வேண்டும்!" என்றார்.

"பிரபு! மகனுக்குத் தந்தை தெய்வம்; மக்களுக்கெல்லாம் அரசர் தெய்வம். அரசர்கள் திருமாலின் அம்சம் பெற்றவர்கள் என்று வேத புராணங்கள் சொல்கின்றன. ஆகையால் அந்த வகையிலும் தங்களுக்குப் பொன் மாளிகை எடுத்தது பொருத்தமானதே!" என்றான் நம் வீரன்.

சுந்தர சோழர் மறுபடியும் மலையமான் திருமகளை நோக்கி, "தேவி! இந்தப் பிள்ளை எவ்வளவு புத்திசாலி பார்த்தாயா? நம்முடைய ஆதித்தனுக்கு இவனையொத்தவர்களின் உதவியிருந்தால், அவனைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அவனுடைய அஜாக்கிரதை சுபாவத்தைப் பற்றியும் விசாரப்பட வேண்டியதில்லை!" என்றார்.

பிறகு வந்தியத்தேவனைப் பார்த்து, "தம்பி! பொன் மாளிகை கட்டியது உசிதமானாலும் உசிதமில்லாவிட்டாலும் நான் காஞ்சிக்கு வருவது சாத்தியமில்லை. நீதான் பார்க்கிறாயே! எப்போதும் படுத்த படுக்கையாக இருந்து வருகிறேன். நெடுந்தூரப் பிரயாணத்தை மேற்கொள்ளுதல் இயலாத காரியம். ஆதித்தன்தான் என்னைப் பார்ப்பதற்கு இங்கே வந்தாக வேண்டும். அவனைக் காண்பதற்கு எங்களுக்கும் ஆசையாகத்தான் இருக்கிறது. நாளைக்கு மீண்டும் வா! மறு ஓலை எழுதி வைக்கும்படி சொல்லுகிறேன்!" என்றார்.

இச்சமயத்தில் கூட்டமாகப் பலர் தரிசன மண்டபத்தை நெருங்கி வருவதை வந்தியத்தேவன் அறிந்தான். ஆகா! அந்தப் புலவர் கூட்டம் வருகிறது போலும்! அவர்களுடன் ஒருவேளை சின்னப் பழுவேட்டரையரும் வருவார். அப்புறம் தான் சொல்ல வேண்டியதைச் சொல்ல முடியாமலே போய்விடலாம்! நாலு வார்த்தையில் சுருக்கமாக இப்போதே சொல்லிவிட வேண்டியதுதான்! — இவ்விதம் சில விநாடிப் பொழுதில் சிந்தித்து முடிவு செய்து, "சக்கரவர்த்தி! தயவு செய்யுங்கள்! கருணை கூர்ந்து என் விண்ணப்பத்தைக் கேளுங்கள். தாங்கள் அவசியம் இந்தத் தஞ்சையிலிருந்து கிளம்பிவிட வேண்டும்: இங்கே தங்களை அபாயம் சூழ்ந்திருக்கிறது! அபாயம்! அபாயம்!...." என்றான்.

அவன் இவ்விதம் சொல்லிக்கொண்டிருக்கும்போதே சின்னப் பழுவேட்டரையர் தரிசன மண்டபத்துக்குள் பிரவேசித்தார். அவரைத் தொடர்ந்து புலவர்கள் வந்தார்கள்.

வந்தியத்தேவன் கடைசியாகக் கூறிய வார்த்தைகள் கோட்டைத் தளபதியின் காதில் விழுந்தன. அவருடைய முகத்தில் கோபக் கனல் ஜுவாலை விட்டது!

(தொடரும்)

மயில்



நமது நாட்டின் தேசிய பறவை மயில். இது ஒரு அழகான பறவை. இதன் தோகைகள் வண்ணக் கலவைகள் மிகுந்தவை. இந்த அழகு மயிலின் தோகையின் மென்மையை மேனி உணரும்போது மனதில் ஒருவித மகிழ்ச்சிப் பரவசம் ஏற்படுகிறது.

இதே போன்றதொரு மகிழ்ச்சிப்பரவசம் கரூர் P.R.C. கார்மெண்ட்ஸாரின் பிரத்யேக தயாரிப்பான ''லில்லி'' பாவாடைகளை வாங்கி உடுத்தும் அனைத்து மங்கையர்களிடமும் ஏற்படுகிறது.

''லில்லி'' பாவாடைகள் *(INSKIRTS)* நல்ல தரமான பட்டு போன்ற மென்மை யான பாப்ளின் துணியில் நூற்றுக்கணக் கான வண்ணங்களில் அனைத்து மங்கையர்களுக்கும் பொருந்தக்கூடிய அளவுகளில் மிகவும் கவனமாக தயாரிக்கப்படுகிறது. அனைத்து பட்டு மற்றும் பாலியஸ்டர் போன்ற எல்லா ரக சேலைகளுக்கும் மிகச்சரியான மேட்சிங் கலரிலும் கிடைக்கிறது.


நியாயமான விலையில் அனைத்து துணி விற்பனை நிலையங்களிலும் ஆயத்த ஆடைகள் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கிறது.

வாங்கிடுவீர் !
P.R.C. கார்மேண்ட்ஸாரின்
லில்லி
பாவாடைகளை !

P.R.C. கார்மெண்ட்ஸ் :
நெ. 26/1 380, பிரதட்சணம் ரோடு,
A Plot, கரூர்-639 002.

இது ஒரு சுயவேலை வாய்ப்பு நிறுவனம், பாரதப் பிரதமர் அவர்களின் ''படித்த இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்பு''த் திட்டத்தின் கீழ் கரூர் கிளை 'கனரா வங்கி' யின் சீரிய பொருளாதார உதவியுடன் மிகச்சிறப்பாக செயல்படும் நிறுவனங்களில் ஒன்றாகும்.

MAYUR IMPRESS-57/87



வீட்டு வேலைகளில் எனக்குக் கைகொடுக்கும் நம்பகமான தோழியைச் சந்தியுங்கள்.

சுறுசுறுப்பும், பொறுப்பும் மிக்க இல்லத்தரசிகள் சிபிசி பிரீமியர் வெட் கிரைண்டரையே தேர்ந்தெடுக்கிறார்கள். அதற்கு வலுவான காரணங்கள் இதோ:

- மோட்டார் உற்பத்தியில் 40 ஆண்டு கால அனுபவம் வாய்ந்தவர்களால் தயாரிக்கப்படும் தனிச்சிறப்பு மிக்க சிபிசி பிரீமியர் மோட்டார் இதன் ஜீவ நாடியாக விளங்குகிறது.
- இதனை இயக்குவது வெகு சுலபம்; சுத்தம் செய்வதும் எளிது.
- விற்பனைக்குப் பிந்திய உடனடி சேவைக்கு, விரிந்து பரந்த விற்பனை அமைப்பு வழி வகுக்கிறது.
- இரண்டு ஆண்டுகால உத்தரவாதம் அளிக்கும் புகழ் வாய்ந்த வெட் கிரைண்டர் இது ஒன்றே.

வழக்கமான நேர்வகையிலும், சாய்த்து எடுக்கும் சாய்வு வகையிலும் கிடைக்கின்றன.


2 ஆண்டு கால உத்தரவாதம்!

OBM 9936 TM

சிபிசி | பிரீமியர்
வெட் கிரைண்டர்கள்

கிளைகள் : 173 தம்பு செட்டி தெரு, சென்னை — 1. போன் : 25564. ● 15-A/3, மேல வெளி வீதி, மதுரை — 1. போன் : 22757. ● 262, அவநாசி ரோடு, கோயமுத்தூர் — 18, போன் : 24451. ● 3-A, காலேஜ் ரோடு, திருச்சிராப்பள்ளி — 2. போன் : 25030. ● 643, நேரு ரோடு, விழுப்புரம் — 2. போன் : 2263. ● 17-2-30, பொன்னியம்மன்கோவில் தெரு, சித்தூர் — 1. போன் : 3225.

மகள்



மணி ஒன்பதுக்கு மேல் இருக்கும்.

அரக்கப் பரக்கப் புத்தகங்களை அள்ளிக் கொண்டு வாசலுக்கு வந்த முரளி, அம்பாய்ச் சீறி வந்து நின்ற ஆட்டோவைக் கண்டவுடன், கழுத்தை வீட்டிற்குள் ஒடித்துக் குரலை உயர்த்தினான்.

"அம்மா! அம்மா! அக்கா வந்திருக்கும்மா!"

அதற்குள் புவனா ஆட்டோவை விட்டு இறங்கி வேகமாய் வீட்டிற்குள் நுழைய... அவளுக்கு, வாசலில் நின்று கொண்டிருந்த அவள் தம்பி முரளியின் கன்னத்தில், ஓங்கி அறைய வேண்டும் போலிருந்தது.

"ஏண்டா! அக்கா வந்திருக்கு! அக்கா வந்திருக்குன்னு வாசல்ல நின்னுக்கிட்டே கத்திக்கிட்டு நிக்கிறியே! ஓடிவந்து இந்தப் பையை வாங்கிக்கக் கூடாதா! அறிவு கெட்ட முண்டம்! அம்மா எங்கே?"

"சமையல் அறைல....!"

"நான் வந்தது தெரியுமா?"

"தெரியும்! கைவேலையா இருக்கா ...!"

"பொல்லாத கைவேலை! ஒரு எட்டு ஓடி வந்து, 'வாம்மா புவனா'ன்னு கேட்டுட்டுப் போயிட்டா குடியா முழுகிடும்! அவ்வளவு அலட்சியம்!"

தாயை அர்ச்சித்தபடி புவனா வராந்தாவைக் கடக்க... முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டே அவளை எதிர் கொண்டாள் அவள் தாய் ராஜம்.

"ஏண்டி! வந்ததும் வராததுமா, இப்படி அலுத்துக்கிறே! நான்தான் வந்திட்டேனே!"

"ஆமாம்... வந்தீங்க! நான் வந்து ஒரு மணி நேரம் ஆகப் போவுது! இப்பத்தான் வர்றீங்க... ஆடி அசைஞ்சுக்கிட்டு! ஏய் முரளி! மசமசன்னு நின்னுக்கிட்டு இருக்காம, ஓடிப் போயி சூடா ஒரு காப்பி வாங்கிட்டு வா...! ஆமா, திலகா எங்க...?"

- கொண்டையை அவிழ்த்துப் பிரித்துக் கொண்டே முகத்தை மட்டும் உயர்த்தினாள் புவனா!

"ரெக்கார்ட் எழுதிக்கிட்டிருக்கா! அவங்க ஸ்கூல்ல ஏதோ ப்ராக்டிகல் எக்ஸாமாம்!"

"அவளுக்கு ஊர்லேந்து வந்திருக்குற அக்காவ ஒரு நிமிஷம் ஓடிவந்து பார்க்கறதை விட.... எக்ஸாம்தான் முக்கியமாப் போச்சு! ஆள் ஆளுக்கு இங்க எவ்வளவு அலட்சியம்! இந்தக் குடும்பத்துக்குப் போயி நான் மாசம் நூத்தி அம்பது ரூபா அழுவுறேனே! என்னைச் சொல்லணும்! நன்றி கெட்ட ஜென்மங்கள்! சே!"

புவனாவின் வார்த்தைகளில் ஏகமாய் அடிபட்டுச் சிவந்து போனாள் ராஜம்! அவள் உடல் குப்பென்று வியர்த்தது.

"ஏய் சும்மா நிறுத்துடி! நானும் வந்ததிலேர்ந்து பார்த்துக்கிட்டிருக்கேன்! ஒரேயடியா எகிறிக் குதிக்கிறியே! அப்படி என்னடி நாங்க உங்கிட்ட நன்றி கெட்டத்தனமா நடந்துக்கிட்டோம். ம்! நீ மாசம் நூத்தி அம்பது ரூபா அனுப்புறேங்கறதுக்காக, இங்க உள்ளவுங்களை, வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசலாம்னு நினைச்சுக்கிட்டிருக்காதே!"

அவ்வளவுதான்! நாற்காலியை இழுத்துப் போட்டு அமரப் போன புவனாவிற்கு வந்த வேகம் கொஞ்சநஞ்சமல்ல. பற்களை அரைத்தபடி அவள் தாயை ஆக்ரோஷமாய் ஏறிட்டாள். விழிகள் சிவந்து வார்த்தைகள் அக்னியாய் உதிர்ந்தன.

"ஆமா! உங்களுக்கு ஒண்ணு சொல்லிடக் கூடாது. உடனே ரோஷம் பொத்துக்கிட்டு வந்திடும்! அப்பா செத்ததிலேர்ந்து எவ்வளவு கரெக்டா மாசா மாசம் இங்க பணம் அனுப்பிக்கிட்டிருக்கேன். அதுவும் என் வீட்டுக்காரருக்குத் தெரியாம! அந்த விசுவாசம் உங்களுக்குக் கொஞ்சமாவது இருக்கா...?"

"யாரும்மா வீட்ல, எம். ஓ. வந்திருக்கு...!"


வாசலில் ஒலித்த தபால்காரரின் குரலைக்

ஞானம்பாள் செல்வம்

அரசுக்கே அசிங்கமாய்



* தேன்தமிழ்



* ஊத்துப் பள்ளத்தில் தோண்டப்பட்ட கிணறு

தமிழகத்தில் உள்ள டவுன் பஞ்சாயத்துத் தலைவர்களுள் ஒருவர் மட்டுமே பெண்மணி. அவர்தான் நங்கவள்ளி டவுன் பஞ்சாயத்துத் தலைவர் தேன்தமிழ். "மேட்டூர் அணையிலிருந்து சேலத்திற்கு வரும் குடிநீர், இங்குதான் சுத்திகரிக்கப்பட்டு அனுப்பப்படுகிறது. அப்படியிருந்தும் நங்கவள்ளியில் குடிநீர்ப் பஞ்சம்!" என்று அங்கலாய்க்கிறார் தேன்தமிழ்.

"சேலத்திற்குச் செல்லும் குடிநீரில், தினமும் ஏழாயிரத்து ஐந்நூறு காலன் தண்ணீரை நங்கவள்ளிக்குத் தருகிறார்கள். அது போதவில்லை. இருபதாயிரம் காலனாவது தர வேண்டுமென்று, கடந்த ஐந்தாண்டு காலமாகப் போராடிக் கொண்டிருக்கிறோம். பயனில்லை. முத்துசாமி என்ற இளைஞர் தீக்குளிப்புப் போராட்டத்திற்குக்கூட அறிவிப்பு செய்துவிட்டார். அப்போதும் கலெக்டர், போலீஸ் எஸ்.பி. என்று அதிகாரிகள் வந்து சமாதானப்படுத்திச் சென்றார்களே தவிர, தண்ணீர் வரச் செய்தபாடில்லை.

"இது ஒருபுறமிருக்க, பத்து ஆழ் குழாய்க் கிணறுகள் தோண்டித் தரச் சொன்னபோது, ஒரேயொரு ஆழ்குழாய்க் கிணறுதான் தோண்டிக்கொடுத்திருக்கிறார்கள். இத்தனைக்கும் இடையில், இத்தனை காலமாக இல்லாமல், இப்போது ஒரு பெண் தலைவராக வந்துவிட்டாளே என்று சில ஊர்ப் பெரியவர்களுக்கு எரிச்சல், எங்கள் எம்.எல்.ஏ.வும் தொகுதி மக்களின் தேவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. பஞ்சாயத்திலும் நிதி வசதியில்லை. இத்தகைய சூழ்நிலையில் தான் நானும், என்னையொத்த முற்போக்கு

கேட்ட ராஜம் வேகமாய் ஓடிக் கையெழுத்திட்டு, பணத்தை எண்ணியபடி, உள்ளே வர... புவனாவின் விழிகள் அகலமாய் விரிய...

"யாரும்மா பணம் அனுப்பிச்சிருக்கா...?"

"உன் வீட்டுக்காரர்தான்..."

"என்னது!"

புவனாவிற்குள் அணுகுண்டு வெடித்தது... ராஜம் நிச்சலனமாய் மகளை ஏறிட்டாள்.

"ஆமாம்... புவனா! நீ நூத்தி அம்பது ரூபா அனுப்பிச்சிட்டு, இந்தக் குதி குதிக்கறே! உன் வீட்டுக்காரர், ஆம்பளை இல்லாத வீடாச்சே! பிள்ளை குட்டிங்க அதிகமா இருக்கேன்னு இரக்கப்பட்டு, மாசம் முந்நூறு ரூபா அனுப்பிச்சிக்கிட்டிருக்கார்."

"எப்பலேர்ந்தும்மா?"

"உன்னைக் கைப்பிடிச்ச நாள்ளேர்ந்து!"

"ரெண்டு வருஷமாவா...?"

"ஆமாம்...!"

"என்கிட்டே ஒரு தடவை கூட அவரு இதைப் பத்திச் சொன்னதில்லையே!"

"உன்கிட்டச் சொல்லக் கூடாதுன்னு தானே எங்ககிட்டேயும் சொல்லியிருக்கார்! யாரு பெத்த பிள்ளையோ இந்தக் குடும்பத்

இல்லையா?



* ரங்கசாமி



* குமார்



* நஞ்சப்பன்

எண்ணம் கொண்ட இளைய சமுதாயத்தினரும் எங்கள் தேவைகளுக்காகப் போராடி வருகிறோம்!'' என்றார் தென்தமிழ்.

நங்கவள்ளியின் நிலைமை இப்படியிருக்க, அதன் பக்கத்திலிருக்கும் இன்னொரு டவுன் பஞ்சாயத்தான வனவாசியின் நிலைமை வேறு மாதிரி.

''எங்கள் ஊரின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்காக, ஊருக்கு மேற்கே சுமார் நான்கு கி.மீ. தூரத்திலுள்ள 'ஊத்துப் பள்ளம்' என்னும் ஓடைக்குள் ஒரு கிணறு தோண்டி, அங்கிருந்து குழாய் மூலம் தண்ணீரைக் கொண்டு வந்து, ஊருக்குள் ஒரு மேல்நிலை நீர்த் தொட்டி கட்டி, அதன் மூலம் குடிநீர் சப்ளை செய்ய ஒரு திட்டம் தீட்டினார்கள். கடந்த 80—ல் தீட்டப்பட்ட இத்திட்டத்திற்கு உடனடியாக அரசின் அனுமதியும் கிடைத்தது. வேலையும் துவங்கப்பட்டது. ஆயினும் பயனில்லை!

''காரணம், கிணறு தோண்டி, ஊருக்குள் மேல்நிலை நீர்த்தொட்டி கட்டி, கிணற்றிலிருந்து மேல்நிலை நீர்த்தொட்டிக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கான குழாய்களைப் பதித்து முடிக்க.... என்று அனைத்துக்கும் சேர்த்து ஒதுக்கப்பட்ட நிதி முழுவதும் கிணறு தோண்டுவதற்கே சரியாகப் போய் விட்டதென்று சொல்லிவிட்டார் காண்ட்ராக்டர்! அதனால்தான் தோண்டிய கிணற்றில் ஏராளமான ஊற்று இருந்தும் நாங்கள் குடிநீரின்றித் தவிக்கிறோம். காண்ட்ராக்டர் ஆளுங்கட்சிக்கு மிகவும் வேண்டியவர் என்பதால் அரசும் கையைக் கட்டிக் கொண்டு சும்மா இருக்கிறது....'' என்று மிகவும் வேதனைப்பட்டுச் சொன்னார்கள், வனவாசி டவுன் பஞ்சாயத்துத் தலைவர் ரங்கசாமி மற்றும் இளைஞர்களான குமார், நஞ்சப்பன் ஆகிய மூவரும்.

இவற்றையெல்லாம் பார்க்கும் நமக்கே அசிங்கமாக இருக்கிறது. ஆனால் சம்பந்தப்பட்ட தொகுதிகளின் எம்.எல்.ஏ.க்களுக்கும், எம்.பி.க்களுக்கும், அதிகாரிகளுக்கும் அரசாங்கத்திற்கும் மட்டும் கொஞ்சம் கூட அசிங்கமாகப் படுவதில்லையே, அது ஏன்?

— தில்லப்பா

துக்கு இவ்வளவு பணம் அனுப்பிக்கிட்டிருக்கு. நீ, இந்தக் குடும்பத்தில பிறந்திட்டு, உன் தம்பி தங்கச்சிங்களுக்குச் செய்ற உதவியை யாரோ தெருவுல போறவங்களுக்குச் செய்யற மாதிரி, ஊர் முழுக்கச் சொல்லிக் காமிச்சிக்கிட்டு அலையறே! உன் புருஷன் என்னைப் பொறுத்த வரை இந்தக் குடும்பத்துக்கு மருமகன் இல்லேடி! மகன்! அவரோட பரந்த மனப்பான்மைக்கும், பெருந்தன்மைக்கும் முன்னால, நீ... நான் என்னத்தச் சொல்றது? உனக்குத் தெரிஞ்சது அவ்வளவுதான்! சரி! சரி! எந்திரிச்சுப் போய்க் குளிச்சிட்டு வா! அதுக்குள்ள உப்புமாக் கிளறி வைக்கிறேன்...''

வார்த்தைகளை நிதானமாய் உதிர்த்து விட்டு, ராஜம் சமையல் அறைக்குள் நுழைய... காற்றிழந்த பலூனாய் வீற்றிருந்தாள் புவனா. அவள் மனமேட்டில், நெடு நாட்களாய்க் கூடுகட்டி, வைரம் பாய்ந்து கொண்டிருந்த வக்கிரக் கூடுகள் அனைத்தும் பொடிப் பொடியாய் வெடித்துச் சிதறிக் கொண்டிருந்தன!

இத்தனை மாதங்களுக்குப் பிறகு அப்பாவைப் பார்க்கப் போகிறாள். அப்பாவுடன் பேச, சிரிக்க எவ்வளவு விஷயங்கள் உள்ளன. அம்மாவுடன் இருக்கும்போது, தன்னை மிகப் பெரியவளாக உணர்ந்த புவனா, அப்பாவைப் பற்றி நினைக்கும்போது சின்னக் குழந்தையாகக் குதூகலித்தாள். அப்பா பழையபடி 'உம்'மென்று இருப்பாரா அல்லது பதினைந்து மாதப் பிரிவில் அவளுக்காகக் காத்திருந்து ஆவலுடன் வரவேற்பாரா?

அப்பா, கட்டாயம் 'புவனுக்குட்டி என்னென்ன பாட்டுகள் கற்றுக் கொண்டிருப்பாளோ, பட்டணத்தில் எதெல்லாம் பார்த்திருப்பாளோ?' என்று அறிந்து கொள்ளும் ஆவலில் காத்திருப்பார். அப்பாவுக்கு உடம்பு சரியில்லை என்று செய்தி வந்திருப்பதாக அம்மா சொன்னாள். ஆனால், அவளுக்கு மட்டுமே இந்தத் தந்தியின் மர்மம் தெரியும். 'அப்பா உங்களைப் பார்க்காம என்னால இருக்கவே முடியலே. அம்மாவோ கிளம்பவே மாட்டேங்கறாங்க. அதுக்கும் மேல, பாட்டு வாத்தியார் வேறு லீவு தர மறுக்கிறார். எனவே, யாருக்கும் தெரியாம உங்களுக்கு அல்லது லோகுவுக்கு உடம்பு சரியில்லே'ன்னு தந்தி கொடுங்க. அப்போதுதான் நான் கிளம்பி வர முடியும்...' என்று அப்பாவுக்குக் கடிதம் எழுதியிருந்தாள். அப்பா நல்ல அப்பா, அவள் மனது புரிந்த அப்பா. அவருக்கும் அவளைப் பார்க்கும் ஆசை இருந்திருக்கிறது. அதனால்தான் தந்தியடித்திருக்கிறார். அம்மா கையில் தந்தியை வைத்துக் கொண்டு, நேற்று இரவு படபடத்ததையும், ஸ்டேஷனுக்கு ஓடிய பதற்றத்தையும் கண்டபோது, புவனா நமட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டாள். ஒவ்வொரு சமயம் அம்மாவிடம் நிஜத்தைச் சொல்லி விடலாமா என்று கூடத் தோன்றியது. ஆனால், உண்மை தெரிந்தால் 'ஊருக்குப் போக இப்ப என்னடி அவசரம், அடுத்த மாதம் பார்த்துக் கொள்ளலாம்' என்று நின்று விட்டாலும் நின்றுவிடுவாள்.

ரயிலின் ஜன்னல் வழியே பார்த்தபோது, விடிவானம் மிகவும் அழகாகத் தெரிந்தது. இரவு முழுவதும் தூக்கத்தை விரட்டிக் கும்மாளம் போட்ட மனம், அதிகாலைச் சூரியனைப் பார்த்ததும், இன்னும் சற்று உயரம் எழும்பிக் குதித்தது! அம்மாடி! இருபுறமும்தான் என்ன பசுமை... சென்னை நகரில் இத்தகைய பசுமையை அவள் கண்டதே இல்லை. பச்சையிலும்தான் எத்தனை கலப்பு நிறங்கள்... சூரிய ஒளிபட்டு, மஞ்சள் கலந்த பசுமை; அதிலேயே நெற்கதிரில் நீலமான ஒளிபட்டுச் சிதறிய வானவில் வண்ணம்; பழுப்புக் கலந்த கரும்புக் கொல்லையின் பச்சை! அம்மாடி... ஒரு நிறத்திலேயே இத்தனை நிறங்களா...?

'என்னப்பா, வெளிச்சம் வெள்ளையா இருக்குது, அதிலே எப்படி வானவில்லின் அத்தனை நிறமும் இருக்குதுன்னு சொல்றாரு வாத்யாரு?' என்று புவனா என்ற பத்து வயதுச் சிறுமி கேட்டபோது, அப்பா அவளுக்கு அதிகாலைச் சூரிய ஒளியைக் காட்டி விளக்கினார். வீட்டுக்குள்ளேயே ப்ரிசம் வைத்துப் பரிசோதனை நடத்திக் காட்டினார். வண்ணத்தின் மாயம் என்று புரிந்தது.

''சங்கீதமும் வெளிச்சம் மாதிரிதான். ஒவ்வொரு ராகமும் ஒரு தனி நிறம். அதில் அடுத்ததன் சாயல் தெரியும். புதிய ராகத்துடன் அதைக் கலந்து புதிய வண்ணம் உண்டாக்கலாம். ஆனாலும் ஒவ்வொரு நிறத்துக்குமான தனித் தன்மை, அதனை அடையாளங் காட்டி விடும் என்றார். அப்போது புரியவில்லை. சமீபத்திய சங்கீதப் பயிற்சியில் புரிந்திருந்தது.

வயல்காட்டில் ஏற்றம் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. அடேடே, ஏற்றம் கூடத் தாளம் போடுகிறது. ரயிலின் வேகத்தில் காட்சி மறைந்து விட்டாலும், அப்பா கூறிய விளக்கம் மறக்கவில்லை: 'தாளம் என்கிறது ஏதோ சங்கீதத்துக்கு மாத்திரம் சொந்தமானதில்லே புவனா. சாதாரணமாய் நடக்கும்போது கூட நாம் தாளத்தோடுதான் நடக்கிறோம். அந்தத் தாளம் திடீரென நின்றாலோ, வேகம் குறைந்தாலோ, நடையே தடைப்படும் அல்லது தடுக்கும். இது இயற்கை நியதி. இசை, தாளம் இரண்டும் மனிதன் இயற்கையிலிருந்து பெற்ற வரப் பிரசாதங்கள்.

இதோ கும்பகோணம் ஜங்ஷன்... அம்மா பிளாட்பாரத்தில் விலை பேசி கவுளி வெற்றிலை வாங்கிக் கொண்டாள். புவனாவுக்கு இந்த வெற்றிலை பற்றித் தெரியும். நாக்கையே எரித்து விடுமளவு இதில்

உஷா சுப்பிரமணியன்

காரமுண்டு. அம்மா இதில் சுண்ணாம்பை வேறு தடவி வாயில் திணித்துக் கொள்வாள். அப்பாவுக்கு ஏனோ இந்தப் பழக்கமே பிடிக்காது. அப்பாவுடன் பேச வரும் சக ஆசிரியர்கள் கூட 'சுந்தரம் சாருக்கு வெற்றிலைப் பழக்கம் ஆகாதே' என்று வெற்றிலையை வெளியே துப்பிவிட்டு, 'புவனா, ஒரு லோட்டா தண்ணி கொண்டாம்மா' என்று வாய் கழுவி விட்டுத்தான் பேச வருவார்கள். 'தஞ்சாவூருக்கு இசையையும், நடனத்தையும், கலைகளையும் சீதனமாகக் கொடுத்தவர்கள், ஏனோ ஒரு குறை இருக்கட்டுமென்று இந்த வெற்றிலை, பாக்குப் பழக்கத்தையும் சேர்த்துத் தந்துவிட்டார்கள் போலிருக்கு...' என்று அப்பா முகம் சுளிப்பார். புவனாவுக்கும் நாலுபுறமும் செங்காவி சிதறப் பேசுபவர்களைக் கண்டால் அருவருக்கும். ஆனால், 'அம்மா வெற்றிலை போடுவாள். சுமங்கலிகள் சாப்பிட்டானதும், வெற்றிலை போட்டு நாக்குச் சிவந்தால், புருஷனுக்கு ஆயுள் விருத்தி என்று ஏதோ சாஸ்திரத்தைக் கூறிக் கொண்டு, வெற்றிலை போடுவாள். நல்ல வேளை, அதை வாயில் அடக்காமல் மென்று தின்றுவிட்டு, வெற்றிலைச் சாறு உள்ளே இறங்கியதும் அப்படியே உறங்கியும் போவாள்.

அம்மா இரண்டு முழம் கதம்பம் வாங்கிப் புவனாவுக்குச் சூட்டிவிட்டுத் தன் பிச்சோடாவிலும் முறுக்கி வைத்து க்ளிப் குத்தினாள்.

''அம்மா, அப்பா நீ பிச்சோடா கொண்டையெல்லாம் போட்டுப் பார்த்ததேயில்லை. உன்னைப் பார்த்து அப்படியே அதிசயப்பட்டு நிக்கப் போறார்...'' என்று புவனா சிரித்தாள்.

ஞானமும் அவளுடன் சேர்ந்து சிரித்தாலும் எவ்வளவுதான் உள்மன வேதனையை வெளிக்காட்டாமல் அடக்க முயன்றாலும், அது நெற்றியில் கோடாகப் படிந்







அருள்வாக்கு

என்னிடமே பலபேர் கேட்டிருக்கிறார்கள், ''காலத்தை அநுசரித்து சாஸ்திரத்தை ஏன் மாற்றக் கூடாது?'' என்று. 'ஸர்க்கார் சட்டங்களை மாற்றவில்லையா?' என்று ஆத்ரம்காட்டுகிறார்கள். என்னையேரொம்ப ஸ்தோத்திரம் பண்ணி, ''ஸ்மிருதிகளைப் பண்ணின ரிஷிகள் மாதிரிதான் இந்தக் காலத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். அதனால் நீங்கள் மனசு வைத்தால் சாஸ்திரங்களை இந்தக் காலத்துக்குத் தகுந்தாற் போல் மாற்றி விடலாம்'' என்கிறார்கள். ''நாங்கள் ஆசைப் படுகிற மாதிரி நீங்கள் சாஸ்திரத்தை மாற்றித் தாருங்கள்'' என்பதையே இப்படிக் கௌரவ மாகச் சொல்கிறார்கள்!

ஸ்மிருதிகள் அந்தந்த ஸ்மிருதி கர்த்தாவின் சொந்த அபிப்ராயம்தான் என்றால் இவர்கள் நினைப்பதிலும் கேட்பதிலும் தப்பு இல்லை.

ஆனால் ரொம்பப் பேருக்கு — தர்ம சாஸ்திரங்களிடம் மதிப்புணர்ச்சி உள்ளவர்களுக்குக் கூட — என்ன தெரியவில்லையென்றால், இந்த ஸ்மிருதிகள் அவற்றைச் செய்தவர்களின் சொந்த அபிப்ராயமே இல்லை. ஏற்கெனவே வேதங்களில் சொல்லியிருந்தவற்றையேதான் அவர்கள் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். வேத வாக்கை ஒரு காலும் எந்த சந்தர்ப்பத்திலும் மாற்றக் கூடாதாகையால் தர்ம சாஸ்திர விதிகளையும் மாற்றுவதற்கே இல்லைதான்.

சாஸ்திரப்படியே நீங்கள் நடக்கும்படி பண்ண எனக்கு சக்தியோ, யோக்யதையோ இல்லாமல் இருக்கலாம். ஆனாலும் அதை மாற்றுவது நிச்சயமாக என் காரியமில்லை. என்னை இங்கே (மடத்தில்) உட்கார்த்தி வைத்திருப்பது வேத தர்மங்களை ஜனங்கள் பரிபாலனம் பண்ணும்படியாகச் செய்வதற்குத்தான். ஆசார்யாள் ஆக்ஞை அதுதான். அதனால் இந்தக் காலத்தின் ஸௌகரியத்துக்கு, புதுக் கொள்கைக்கும் போக்குகளுக்கும் சாதகமாக சாஸ்திரத்தை மாற்றிக் கொடுப்பதற்கு எனக்கு authority (அதிகாரம்) இல்லை.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

திருந்தது. புடவை நுனியில் வைத்தீஸ்வரன் கோவிலுக்கு ஒன்று, தஞ்சாவூர் மாரியம்மனுக்கு ஒன்று, திருப்பதி வெங்கடாசலபதிக்கு ஒன்று என்று பழக்கம் காரணமாக முடிச்சர்க ஏறியிருந்தது. ஊரை அடைவதற்குள் புடைவைத் தலைப்பு முழுவதுமே காணிக்கை முடிச்சாகிவிடுமோ என்று பயமாக இருந்தது.

'ஆத்தா மகமாயி, என் புருஷன் தர்மபுத்திரர். வம்பு தும்புக்குப் போகாதவர். ஊருக்கு நல்லவர். அவருக்கு உடம்பொண்ணுமில்லாம காப்பாத்தும்மா...' என்று மனதாரப் பிரார்த்தனை செய்து கொண்டபடி வந்தாள். சுய இரக்கமும், குற்ற உணர்வும் வேறு அவளைக் குடைந்தெடுத்தன. 'பத்தினிப் பெண் சீற்றம் கொண்டால் ஊரெரியும், பத்தினிப் பெண் கெட்டழிஞ்சா ஊரழியும்' என்று நம் பக்கத்திலே சொல்லுவாங்க. எங்க குடும்பத்திலே, குலத்திலே இல்லாத விதமா, கட்டின புருஷனுக்கு நான் துரோகம் செய்துட்டேன். அது தெரிஞ்சுதான் ஆத்தா எனக்குத் தண்டனையா அவரைப் படுக்கப் போட்டுட்டா. இல்லாவிட்டால், நோய் நொடி இல்லாம இருந்தவருக்குத் திடீர்னு என்ன வியாதி? அம்மா மகமாயி, அவரை உயிர் பிழைக்க வை. நான் சத்தியமா, உம் மேல ஆணையா, கெட்ட விஷயத்துக்குப் போக மாட்டேன். புருஷன் காலடியிலேயே ஆயுசனைக்கும் விழுந்து கிடக்கிறேன். எம் பொண்ணு பாடகியானாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி எனக்குக் கவலையில்லை. எம் புருஷன் உடம்பு நன்றாக ஆனால் போதும் என்று மனத்தில் ஆயிரம், பிரசவ வைராக்கியங்களை ஏற்றிக் கொண்டாள். இருபதாண்டுப் பாசப் பிணைப்பு அவள் ஜீவாதாரத்தை உலுக்கியது. அவள் உடம்பின், மனத்தின் ஒவ்வோர் உணர்வு மையமும் சுந்தரத்தின் நல்வாழ்வுக்காக ஏங்கித் துடித்தது...


தாம்பத்தியம் என்பது சாதாரண உணர்வா என்ன? உடலாலும், மனத்தாலும் சங்கமித்து, உரமேற்றக் கூடிய ஒரே மனித உறவு அது. இரு ஆத்மாக்கள் ஒரே சுருதியில் முயங்கி இசைக்கக் கூடிய ஒரே இசை அது. இருபத்து நாலு மணி நேர உறவு அது. வெறும் உறவல்ல, பிணைப்பு; இரு உயிர்களுக்கு மூன்றுகோலாக்கி நிற்க வைக்கும் அன்புப் பிணைப்பு. அதுவும் ஆண்டுகள் செல்லச் செல்ல, பதப்பட்டு, பாச மெருகு ஏற்றப்பட்டு எவ்வளவு அழகான கோலமாகி விடுகிறது அது.

இந்தப் பிணைப்பில், தான் எவ்வளவு தூரம் கட்டப்பட்டிருக்கிறோம் என்பது ஞானசுந்தரிக்கு இந்த விநாடி புரிந்தது. இந்த உறவு தந்த முழுமையையும், பாதுகாப்பு உணர்வையும், அந்தச் சென்னை பெரிய மனிதர் திட்டமிட்டு அவளை நைச்சியப் படுத்திச் சாதித்துக் கொண்டபோது, பெற முடிந்ததா என்று கேட்டுக் கொண்டாள். 'சீ... சுந்தரத்துடன் அந்த ஆளுங்களை ஒப்பிட்டுப் பார்க்காதே' என்று மனம் எச்சரித்தது.

** மதத்தின் முக்கிய நோக்கம் மனிதனை தேவலோகத்துக்கு அழைத்துப் போவதல்ல; தேவலோகத்தை மனிதனுக்குள் புகுத்துவதே!

சமையல் கேஸ் இப்போது நீண்ட நாள் கிடைப்பதற்கு.

ஒவ்வொரு தடவை சமைக்கும் போது கேஸ் மிச்சப் படுத்தலாம் என்று உங்களுக்கு தெரியுமா? கீழ்கண்ட சில வழிகளை சீராக கடைப் பிடிக்கவும்



1 மிச்சப்படுத்த நனைக்கவும்.
சமைப்பதற்குமுன், பலவித பருப்பு களையும், அரிசியையும் நனைக்கவும். இதனால் குறைந்த நேரத்தில் சமைக்கலாம்.

2 பிரஷர் குக்கர் சமையினால் எரிபொருள் மிச்சம்.
பிரஷர் குக்கர் உபயோகியுங்கள். குக்கரின் தனித்தனி அடுக்குகளில், ஒரே சமயத்தில், அரிசி, காய்கறி, மற்றும் பருப்புகளை வைத்து சமைத்தால், கேஸ், நேரம் எல்லாம் மிச்சம்.

3 குறைந்த நீரினால் மிச்சப்படுத்தவும்.
தேவையான அளவு தண்ணீரினால் சமைக்கவும். அதிக நீரால் சமைக்க நேரமாகும், கேஸ்அதிகம் வேண்டும், அதிக நீரை வெளி யேற்றுவதால் சத்துத் தன்மையும்.போய்விடும்.

4 மூடிய பின் சமைக்கவும்.
ஒவ்வொரு தடவையும் சமைக்கும் போது, மூடிபோட்ட பாத்திரத்தை பயன்படுத்தவும். மூடிஇருந்தால் சூடும் இருக்கும்; விரைந்தும் சமைக்கலாம். நேரம், கேஸ் மிச்சமாகிறது.

5 சிறிய பர்னரால் மிச்சப்படுத்தவும்.
சிறியதைவிட பெரிய பர்னரினால் எரிபொருள் அதிகம் பயன்படுத்த வேண்டி இருக்கும் சிறிய பர்னரினால் கேஸை மிச்சப்படுத்தவும்.

6 ஸிம்மரில் வைத்து மிச்சப்படுத்தவும்.
பாத்திரம் கொதிநிலையை அடைந்தபின், சூடு அதிகரிக்காது. அதில் உள்ளவை தான் ஆவியாகிவிடும். கேஸை ஸிம்மரில் வைத்து, மிச்சப்படுத்தவும்.

7 உறைநிலை அகற்றி மிச்சமாக்கவும்.
ஒவ்வொரு தடவை சமைக்குமுன், குளிர்ந்த உணவும் பொருட்களை ரெப்ரிஜிரேட்டரில் இருந்து வெளியே எடுத்து அறையின் வெப்பநிலைக்கு வரும்படி வைக்கவும். பின்னர் கேஸ் மீது வைக்கவும். மிகவும் குளிர்ந்த உணவுக்கு அதிக கேஸ் தேவைப்படுகிறது.

இந்த மாதம் புதிய பரிசோதனையை முயன்றுபாருங்கள்.
கீழ்கண்ட சில வழிகளை சீராக கடைப் பிடிக்கவும். புதிய கேஸ் சிலிண்டர் எத்தனை நாள் வருகிறது என்பதைக் குறித்துக் கொள்ளவும். முந்தைய சிலிண்டருடன் ஒப்பிடவும். நீண்ட நாள் கேஸ்பயன்படுமாறு நீங்கள் செய்யமுடியும். கேஸ் மிச்சமாகும் புதிய வழி ஏதாவது சிந்திக்க முடிந்தால், பிசிஆர்ஏ வுக்கு எழுதவும்.

D

எனது சமையல் கேஸ் நீண்டநாள் வருவதைப்பற்றி மேலும் அறிய விரும்புகிறேன்! தயவுசெய்து இலவச சிறுபுத்தகத்தை எனக்கு அனுப்பவும்.

எனது பெயர் ____________________

எனது முகவரி ____________________


____

____________________ பின் ☐☐☐☐☐☐

20 சதவீத கேஸை மிச்சப்படுத்தும் தனிப்பட்டமான எப்போதும் நூதனின் கேஸ் அடுப்பு.

PCRA 5038 TAMIL

பெட்ரோலியம் சேமிப்பு ஆராய்ச்சி சங்கம்
(பெட்ரோலியம் கன்ஸர்வேஷன் ரிசர்ச் அஸோஸியேஷன்)
சோர்டியா சேம்பர்ஸ், முதல் மாடி, 739, அண்ணாசாலை சென்னை-600 002.



கேசட்டில் உள்ள நாடா உபயோகப்படுத்த முடியாத நிலையில் இருந்தால் தூக்கி எறிந்துவிடாதீர்கள்.

அதைத் துண்டுகளாக நறுக்கி, குஞ்சலங்களாகக் கட்டி வீட்டு வாசலிலோ அல்லது கார், பஸ், லாரி முதலியவற்றிலோ முன்புறம் தோரணம் போல் கட்டித் தொங்க விடுங்கள்.

சூரிய ஒளி அல்லது மின்விளக்கொளி பட்டு, காற்றில், குஞ்சலம் அசைகிறபோது, மினுமினுப்பாகப் பார்க்க மிக அழகாக இருக்கும்.

— எல். சிவாஜி ராவ்

"அம்மா, ஸ்டேஷன் வர்றது. அப்பாவும், லோகுவும் ஸ்டேஷனுக்கு வந்திருப்பாங்களாம்மா?" புவனா ஆவலுடன் வெளியே எட்டிப் பார்த்தாள்.

"நாம இந்த ரயிலிலே வர்றது அவங்களுக்கு எப்படித் தெரியும்... அதோட அப்பாவுக்குத்தான் உடம்பு சரியில்லையே." ஞானம் அவசரம் அவசரமாகச் சாமான்களை இறக்கினாள். ஸ்டேஷனில் தெரிந்த முகங்களை அவள் பார்வை தேடியது. கணவனைப் பற்றி ஏதாவது விசாரிக்கலாமே. ஊஹூம்... அதுக்குக் கூட அதிர்ஷ்டமில்லை.

ஜில் ஜில் என்று மணி கட்டிய சைக்கிள் ரிக்ஷாவில் தாயும், மகளும் சாமான்களை ஏற்றிக் கொண்டனர்.

"நம்மைக் கூட்டிட்டுப் போக அப்பா ஸ்டேஷனுக்கு வந்திருந்தா எவ்வளவு நல்லா இருந்திருக்கும்!" புவனா குதியாட்டம் போட்டுப் பேச, ஞானம் பயத்தில் தன்னுள் ஒடுங்கிப் போனாள். "சும்மா சள, சளன்னு பேசாமல் உட்காரும்மா" என்று மகளை அடக்கினாள். அவள் கைகள் புடைவைத் தலைப்பை முறுக்க, வாய் கந்தர் சஷ்டி கவசத்தை முணுமுணுத்தது. 'கந்தா, என் கணவனைக் காப்பாத்துப்பா...'

"அம்மா, நான் லோகுவுக்கு என் சிவப்பு அமெரிக்கன் ஜார்ஜெட் புடைவையையும் தந்துவிடப் போகிறேன். நான்தான் இன்னும் புடைவை கட்டவே ஆரம்பிக்கல்லையே. லோகுவுக்குச் சிவப்பு நன்றாக இருக்கும்..." பேசியபடியே வந்த புவனா, தெருவில் தன் தோழிகளைப் பார்த்ததும் வேகமாகக் கைதட்டினாள். "சாயந்திரம் வீட்டுக்கு வாங்கம்மா" என்று ரிக்ஷாவிலிருந்து கத்தினாள்.

அவள் பட்டணம் சென்று விட்டதால் என்ன, இரண்டு கொம்பா முளைத்து விட்டது? ஏதோ பேய் பிசாசைப் பார்த்து மிரண்டது போல் அந்தத் தோழிகள் கையைக் கூட ஆட்டிச் சிரிக்காமல் போகிறார்கள். இப்போதே இப்படி என்றால், அவள் பெரிய பின்னணிப் பாடகியான பிறகு, எப்படித்தான் பயப்படுவார்களோ?

ரிக்ஷா அவர்கள் வசிக்கும் தெருவில் திரும்பியது. அப்பா தலை எங்காவது தெரிகிறதோ... இன்று கட்டாயம் பள்ளிக்குப் போக மாட்டார்... அவர்கள் வருவார்கள் என்று எப்படியும் காத்திருப்பார். ஆனால், அப்பாவைப் பற்றிச் சொல்ல முடியாது. அவர் கடமை வீரர். மனைவியையும், மகளையும், மதிய இடைவேளையில் பார்த்தால் போதும் என்று இருந்தாலும் இருப்பார்.

ஹெட்மாஸ்டர் ஐயா, தமிழ் வாத்தியார், பௌதிக ஆசிரியர், அத்தை புருஷன், இத்தனை மாணவர்கள் ஏன் வீட்டு வாசலில் நிற்கிறார்கள். அப்பாவுக்கு நிஜமாகவே உடம்பு சரியில்லையா?

புவனாவுக்குப் படபடப்புத் தாங்கவில்லை. "ரிக்ஷா, நிறுத்துப்பா..." என்று இரண்டு வீடுகள் முன்பே கத்தியவள் ரிக்ஷா நிற்குமுன், 'தொப்'பென்று குதித்து வேகமாக ஓடினாள்... மூச்சிரைக்கு மட்டும் ஓடி, கூட்டத்தை விலக்கி உள்ளே பாய்ந்தாள்...

"அப்பா..." ஒரே அலறலில் கீழே சாய்ந்தாள்.

எந்த அப்பாவுடன் பேசிச் சிரித்து மகிழ, ஆவலுடன் ஓடி வந்தாளோ அவர் இனிப் பேச மாட்டார். சிரிக்க மாட்டார். அவள் கூறும் கதைகளைக் கேட்டு மகிழ மாட்டார். மகளுக்கு நண்பனாக, தோழனாக, குருவாக, தெய்வமாக இருந்தவர் தெய்வமாகவே மாறிப் போயிருந்தார்.

அப்பா காத்திருக்கவில்லை, கிடத்தப்பட்டிருந்தார்.

அவர் உருவம் அத்தனை அழகுடனும், கம்பீரத்துடனும் நடுஹாலில் படுத்திருக்க, அவர் உயிர் உறைந்திருந்தது. கூடு கிடக்க, மூச்சு பிரிந்திருந்தது...

ஞானம் நிலைகுலைந்து போனாள்.

"தந்தி வந்தா புரிஞ்சுக்கிட்டு, டாக்ஸி போட்டுக்கிட்டு உடனே வர வேணும்... ஊர் ஜனங்க ஒருநாள் முழுதுமில்ல காத்திருக்காங்க..." தம்பியின் மீது உயிரையே வைத்திருந்த சிவகாமி, அழுது சோர்ந்த முகத்துடன் சொல்ல, ஊர் கூடிச் சுந்தரத்தை அப்புறப்படுத்த முனைய...

"நல்லா இருந்த என் ராஜாவுக்கு என்னதான் ஆச்சு சொல்லுங்க..." என்று ஞானம் ஒவ்வொருவராய் உலுக்க, "மகள் ஓடிப் போன அதிர்ச்சி போல, ஸ்கூல் வாசலில் சைக்கிளிலிருந்து இறங்கியவர், மார்பைப் பிடித்துக் கொண்டாராம். அவ்வளவுதான்..." என்று யாரோ விளக்க, கூட்டத்தில் லோகுவின் முகத்தைத் தேட முயன்ற ஞானம், சோகத்தின் அதீத நிலையில் செயலற்று ஸ்தம்பித்தாள்.

(தொடரும்)



கண்கள் இல்லாமலும் பார்க்கலாம்...

IIFF திரைவிழாப் படக்கதை 6

அந்தக் கார் விபத்து எதிர்பாராமல் நடந்தது.

ராட்சஸ வேகத்தில் ஓட்டிக் கொண்டிருந்தாள் கோலோ. திடீரென்று, திருப்பத்தில் வேகம் குறைக்காமல் திரும்பியதில், கண்ட்ரோல் விட்டுப் போய்ச் சாலையோர மரத்தில் மோதி, காரின் முன் விளக்குகள், அதன் கண்ணாடி எல்லாம் நொடியில் நொறுங்கிப் போய் —

கண் விழித்தபோது ஆஸ்பத்திரியில் இருந்தாள்.

தவறு. போன வாக்கியத்தை அடித்து விடுங்கள். கண் விழித்தபோது என்பதற்கு பதில், நினைவு திரும்பியபோது என்று அமைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில், அவளுடைய இரண்டு கண்களிலும் மெத்தென்ற பஞ்சு வைத்துக் கட்டப்பட்டிருந்தது.

"கோலோ... எப்படியம்மா இருக்கிறது?"

சித்தப்பாவின் குரல். அன்பொழுகும் குரல்.

"சித்தப்பா... என் கண்கள்..." கோலோவின் குரலில் பதற்றம் இருந்தது.

"டாக்டர் இன்னும் தீர்மானமாய் எதுவும் சொல்லவில்லை, கோலோ. நீ எதற்காக ரேஸ் வேகத்தில் காரை ஓட்டினாய்? உயிர் பிழைத்ததே அதிசயம்..."

டாக்டர்கள் அவளைச் சூழ்ந்து கொண்டார்கள். கையருகே இருந்த சின்ன எலும்பு முறிவைச் சரிப்படுத்துவது கஷ்டமில்லை. ஆனால் அவளுடைய கண்கள்? அறையில் இருந்த விளக்குகளைக் குறைத்துவிட்டு, அவளுடைய கண்கட்டை மெல்ல, மெல்ல விடுவித்தார்கள்.

கோலோவிற்குக் கண்களுக்குள் முட்கள்

குத்திக் கொண்டிருப்பது போல் வலி இருந்தது. பூவை மலர்த்துவது போல் இமைகளை நிதானமாகத் திறந்தான். டாக்டர் முதலில் இடது கண்ணை மூடி வலது கண்ணால் பார்க்கச் சொன்னார்.

ஒரு சின்னப் புள்ளியளவு வெளிச்சம் தெரிந்து கொஞ்சம் கொஞ்சமாக அறையின் ஒற்றை விளக்கை அவளால் கவனிக்க முடிந்தது.

"குட். இப்போது இடது கண்."

இமையைப் பிரிப்பதே நரகமாய் இருந்தது. கண்ணடித் தூள் குத்திய இடத்தில் ரத்தம் ஒழுகி, கெட்டித்துப் போய் கோந்தாக ஒட்டியிருந்ததை டாக்டர்கள் கவனமாக நீக்கியிருந்தார்கள். இருந்தாலும் கண்ணில் நெருப்பு எரிந்தது. அறை விளக்கு மஞ்சள் புள்ளியாகத் தெரியாமல் மஞ்சள் பிசிறாய்த் தெரிந்தது.

"டாக்டர், இடது கண் வலிக்கிறது... பார்க்க முடியவில்லை... எனக்கு பயமாயிருக்கிறது..."

"பயப்படக் கூடாது. தைரியமாக இரு. நாளைக்கு உன்னைக் கண் சிகிச்சை நிபுணர்கள் பார்க்கப் போகிறார்கள்."

கண் நிபுணர்கள் ஜூரர்கள் போல் கூடிப் பேசினார்கள். முடிவுக்கு வந்தார்கள்.

"கோலோ, உனக்கு என்ன வயதாகிறது?"

"இருபத்திரண்டு..."

"நீ இன்னும் வாழ வேண்டிய வருடங்கள் நிறைய இருக்கின்றன. பார்க்க வேண்டிய காட்சிகள் ஏராளம் இருக்கின்றன."

"ஏன் டாக்டர், என் கண்களுக்கு என்ன?"

"வலது கண்ணில் பிரச்னையில்லை. இடது கண் வெகுவாகச் சிதைந்து விட்டது. புண்ணாகி, செப்டிக் ஆகுமுன் அந்த இடது விழியை எடுத்து விடுவது நல்லது. நீ ஒற்றைக் கண்ணுடன் மிச்ச நாட்களைக் கழிக்கலாம்..."

"நோ" ஆஸ்பத்திரிக் கட்டடமே அதிரும் வண்ணம் கோலோ அலறினாள். "என்னைக் குருடாக்கி விடாதீர்கள்..."

"இடது கண்ணை எடுக்கா விட்டால் அது வலது கண்ணையும் பாதிக்கக் கூடும் கோலோ..."

"பரவாயில்லை.. ஆனால், இந்த இளம்வயதில் நான் ஒற்றைக் கண்ணுடன் தெருக்களில் அலைய விரும்பவில்லை. நான் ஆபரேஷனுக்கு அனுமதி தர மாட்டேன், அனுமதி தரவே மாட்டேன்" கோலோ குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்தாள்.

ஆஸ்பத்திரியிலிருந்து டிஸ்சார்ஜ் செய்ததிலிருந்து கோலோ நிறைய நேரம் வெற்றுப் பார்வை பார்த்தாள். சிந்தனையை எங்கேயோ சிதறவிட்டுப் பாதிச் சாப்பாட்டில் எழுந்து கொண்டாள். இரவுகளில் படுக்கையில் எழுந்து உட்கார்ந்து அழுதாள். விளக்கை அணைக்கும் போதெல்லாம் தன் எதிர்காலமும் அதேபோல் இருட்டாகி

விட்டது என்று துடித்தாள். வெளியுல கிற்குப் போகவே தயங்கி நான்கு சுவர்களுக் குள் அழ ஆரம்பித்தாள்.

"கோலோ, நீ என்னோடு வெளியே வரு கிறாய்" என்றார் சித்தப்பா. "நான் உன்னை ஒருத்தனிடம் அறிமுகம் செய்ய விரும்பு கிறேன்."

"வேண்டாம்... வேண்டாம்" என்று கோலோ மறுக்க மறுக்க, அவளை இழுத்துக் கொண்டு போனார்.

காரை மெல்ல ஓட்டினார்.

மலைப்பாதையின் ஆரம்பத்தில் அந்த மாளிகை இருந்தது.

பெரிய காம்பவுண்டின் உள்ளடக்கத்தில் உயர உயரமான மரங்கள் நின்றன. பச்சைத் தலைகளை சிலுப்பிக் கொண்டன. நுழைந் ததும் பெரிய தோட்டம். தோட்டத்தில் பச்சை வெல்வெட். கலர் கலராக மலர்ச் செடிகள். விதம் விதமான தழைச் செடிகள்.

"ராபர்ட்" என்று கூப்பிட்டார் சித்தப்பா.

உள்ளே மாளிகைக் கதவு திறந்து. ஆரோக் கியமான கறுப்பு நாய் ஒன்று முதலில் ஓடி வந்தது. அதன் சங்கிலி முனையைப் பற்றிக் கொண்டு அந்த இளைஞன் வெளிப்பட் டான். இரண்டு கண்களும் திறந்து இருந்தா லும், அவற்றில் உயிரோ பிரகாசமோ இல்லா மல் எங்கோ குத்திட்டு நின்றன. அகலமான புன்னகையை வீசினான்.

"வெல்கம், வெல்கம்" என்று சரியான திசையில் கையை நீட்டி நட்புடன் குலுக்கி னான்.

"கோலோ என் அண்ணன் மகள், ராபர்ட். ஒரு விபத்தில் அவளுடைய இடது கண் பாதிக்கப்பட்டு விட்டது. வாழ்க்கையில் பிடிப்பில்லாமல் அவள் மிகுந்த வேதனையில் இருக்கிறாள். பார்வையில்லாதவர்களுக்காக நீ கொடுக்கும் விசேஷப் பயிற்சியை இவளுக் கும் தர வேண்டும்..."

"பேஷாக" என்றான் ராபர்ட். சந்தோஷ மாக கோலோவின் கையைத் தேடிப் பிடித்து "வா" என்று வீட்டிற்குள் அழைத்துப் போனான். படிகளில் ஏறும்போது தடுமாற வில்லை. கதவின் கைப்பிடியைத் தேடவில்லை. நாற்காலிகள் எங்கே என்று தொட்டுப் பார்க்காமல் சரியாக உட்கார்ந்தான்.

"ஆச்சரியப்படுகிறாய், இல்லை? இது பெரிய வித்தை இல்லை. குருடனுக்குக் கோல் அவசியம். எனக்கு ஓர் ஊன்றுகோலை விட உதவியாக என் நாய் இருக்கிறது. நாய்களை நாம் சரியாகப் பழக்கிக் கொண்டால், கண் கள் தேவையே இல்லை, கோலோ. சொல், உன் பிரச்னை என்ன?"

"என் இடது கண்ணை எடுக்க வேண்டும் என்கிறார்கள், டாக்டர்கள்."

"அதற்கென்ன, எடுத்து விட்டால் போயிற்று..." என்றான் ராபர்ட்.

"என்னால் முடியாது. ஒரு கண்ணை இழக்க என் மனம் இடம் கொடுக்காது."

"ஸாரி கோலோ, நீ போகலாம். உனக்கு இங்கே இடம் கிடையாது." என்று அந்தரத் தில் பேச்சை வெட்டிவிட்டு ராபர்ட் எழுந்து

** உண்மையைக் கூறுவதை விடப் பெரிய தைரியம் உலகில் வேறொன்றுமில்லை.

பொன்மொழிப் போட்டி முடிவு—3

இதில் நான்கு பொன்மொழிகளையும் நூற்று இருபத்து மூன்று வாசகர்கள் சரியாக எழுதி, பரிசு ரூபாய் இருநூறையும் சமமாகப் பகிர்ந்து கொள்கிறார்கள். ஒவ்வொருவருக்கும் ரூ 1.65 அனுப்பப்படுகிறது. சரியான விடையும், பரிசு பெற்றோர் பட்டியலும் அடுத்த இதழில் இடம் பெறும்.

போய் விட்டான்.

"ஏன் ராபர்ட்? ஏன் ராபர்ட்?" என்று துரத்திக் கொண்டே போனார் சித்தப்பா.

"கண்ணை இழப்பது கேவலம் என்று நினைக்கிறான் கோலோ. அந்த எண்ணமே எனக்கு ஒப்புதலில்லை. அப்படியானால் என்னைப்போல்பார்வையிழந்தஎத்தனையோ பேர் கேவலமா?"

"அவளை நீதான் மாற்ற வேண்டும் ராபர்ட்.. ப்ளீஸ்..."

சற்று யோசித்துவிட்டு ராபர்ட் "சரி" என்றான். "நாளைக் காலை விடிந்ததும் கோலோ இங்கு வரட்டும்."

அவர்கள் அந்த விஸ்தீரணமான தோட்டத்தில் மெல்லக் கைகோத்து நடந்தார்கள்.

"ராபர்ட், உன்னை ஒன்று கேட்க வேண்டும்..." கோலோ தயங்கி விட்டு இழுத்தாள். "உனக்கோ பார்வையில்லை. இங்கு பயிற்சிக்கு வரும் பெரும்பான்மையோருக்குக் கண் தெரியாது. அப்புறம் எதற்கு இத்தனை வர்ணங்களில் பூச்செடிகளை வளர்க்கிறாய்?"

ராபர்ட் புன்னகை செய்தான். "கண்களால் மட்டும்தான் பார்க்க முடியுமா கோலோ? நான்பிறவியிலிருந்தேபார்வையில்லாதவன். நான் சூரியனைப் பார்த்ததில்லை. ஆனால், அவன் வெயிலைப் 'பார்த்திருக்கிறேன்.' அழகழகான மலர்களைப் பார்த்ததில்லை; ஆனால் அவற்றின் சுகந்த வாசனையைத் தினமும் 'பார்த்துக்' கொண்டிருக்கிறேன். மலையைப் பார்த்ததில்லை; ஆனால் அதன் சரிவுகளை அவற்றில் இறங்கி ரசித்திருக்கிறேன். பார்வையிருப்பவர்களுக்கு இருட்டு கடவுளின் சாபம் போலத் தெரியலாம். எனக்கு அந்தப் பிரச்னை இல்லை. எனக்குப் பகலும், இரவும் தெர்மாமீட்டரில்தான் மாறுகின்றன."

கோலோவுக்கு ஏதோ புரிந்தது போல் இருந்தது.

அவன் நாய் நடத்தும் பாதையில் சிரமமில்லாமல் நடந்தபோது, ஆச்சரியமாய்ப் பார்த்தது போக, அதில் கூட அவன் எத்தனை சந்தோஷத்தைச் சேர்த்திருக்கிறான் என்பதைப் பிரமிப்புடன் கவனித்தாள். தரையில் உட்கார்ந்து, புற்களின் இதழ்களை எடுத்து முகத்தை வருடிக் கொண்டு, இயற்கையை எப்படிக் காதலித்தான் என்பதை வியந்தாள்.

அவனுடைய அருகாமையில் தன்னம்பிக்கை ஊற்றெடுத்துப் பெருகுவதை உணர்ந்தாள்.

"கோலோ, பார்வை எப்படி ஒரு வரப்பிரசாதமோ அவ்வாறே பார்வையில்லாததும் கடவுளின் பரிசுதான். வெள்ளைக்காரன் என்றும், கறுப்பன் என்றும் இனம் பிரிக்கும் அருவருப்பான செயல் எங்களிடம் இல்லை. அழகு — அழகில்லை என்ற மமதையில்லை..."

ராபர்ட்டுடன் பழக ஆரம்பித்த இரண்டாவது வாரமே, ஆஸ்பத்திரிக்குப் போகத் தயாரானாள் கோலோ.

"பழுதாகிவிட்ட என் இடது கண்ணை ஆபரேஷன் செய்து எடுத்து விடுவதில் எனக்கு எந்த ஆட்சேபமும் இல்லை டாக்டர்..."

ராபர்ட்டுக்குச் செய்தி வந்தபோது சந்தோஷப்பட்டான்.

"கோலோவிற்குப் பக்குவம் வந்துவிட்டது. இனி உலகில் அவளுக்குப் பிரச்னைகள் இல்லை..."

ஆபரேஷன் முடிந்ததும், கோலோ ஒற்றைக் கண் பார்வையுடன் ராபர்ட்டிடம் வந்து நின்றாள். "நான் இனி உன் பயிற்சிக்கு உதவியாக இருக்கப் போகிறேன், ராபர்ட்..."

"தட்ஸ் குட்," என்றான் ராபர்ட், அவளை அன்பாக அணைத்துக் கொண்டு. "பார்வையின்மையை நீ பூரணமாகப் புரிந்து கொண்டு விட்டால், உலகத்தின் முன்னால் நாடகமாடுவதை மறந்துவிட்டு, உலகத்தின் இயல்புகளோடு ஒன்றி வாழ ஆரம்பிக்கலாம் கோலோ..."

கோலோ கண்கள் கருங்கச் சந்தோஷமாக அவன் கருத்தை ரசித்துச் சிரித்தாள்.

— ஜெயமன்மதன்



CACTUS எனும் இந்த ஆஸ்திரேலியப் படம் நாற்பத்தேழு வயது Paul Cox டைரக்ட் செய்தது. 'இளம் வயதில் ஒரு கண் இழந்த தாயைப் பார்த்துப் பிரமித்தது, நெஞ்சில் ஒரு தீராத பாதிப்பாக மாறி இந்தப் படத்தை எடுக்கத் தூண்டியது' என்கிறார். பார்வையின்மையின் சித்தாந்தங்களை, சர்க்கரை தடவிக் கொடுத்த விதம் தன்னம்பிக்கையை வளர்ப்பதாக அமைந்து விட்டது. இந்தச் சினிமா உணர்த்தியதை விட நாமாக உணரச் செய்தது அதிகம். அதுவே அதன் தனிச் சிறப்பு.



வாழ்க்கை வளம் பெற...

10



சாதனைப் பாதையில் கட்டுப்பாடு என்ற படிகள்

ஆசையை அழைத்துச் செல்லும் வழிக்குப் பெயர்: கட்டுப்பாடு. கட்டுப்பாடற்ற பாதையில் சென்றால் இலக்கை அடைய முடியாது. வாழ்க்கையில் வெற்றி கிட்டாது. வாழ்வு ஒரு நிரந்தரப் போராட்டம். நல்லவற்றிற்கும் கெட்டவற்றிற்கும், சுயகட்டுப்பாட்டிற்கும் — மனம் போன போக்கிற்கும் இடையே நடக்கும் அந்தப் போராட்டத்தில் சுயகட்டுப்பாடு வெற்றி பெறுகிறதா அல்லது மனம் போன போக்கு மேவுகிறதா என்பதைப் பொறுத்துத்தான் வெற்றி அமைகிறது. நமது சாதனைகள் அமைகின்றன.

சுயகட்டுப்பாடு வாழ்வின் ஒவ்வொரு துறையிலும் நமக்குத் தேவைப்படுகிறது. சாப்பாடு; உடலின்பம்; வரவு—செலவு; குழந்தை வளர்ப்பு; கோபம், சந்தோஷம், பொறாமை போன்ற உணர்வுகள் என்று, வாழ்வின் எல்லா அம்சங்களிலும் சுயகட்டுப்பாடுடன் இருப்பவர்களே நல்லபலன்களைக் காண்கிறார்கள்.

ஆழ்ந்து நோக்குமிடத்து இந்த உலகமே— இந்தப் பிரபஞ்சமே — ஒரு கட்டுப்பாட்டில்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது என்பது தெரிய வரும். பூமியும், சந்திரனும், செவ்வாய்க் கோளமும், சூரியனும் ஒரு கதியில் — ஓர் ஒழுங்கில்தான் இயங்குகின்றன. "என்னைச் சுற்றி வா!" என்று சொல்லிவிட்டு, சூரியன் பூமியைத் திடீரென்று விட்டுவிடுகிறதென்றால் என்னாகும்? எப்படி பிரபஞ்சத்திலுள்ள கோளங்கள் அனைத்தும் பரஸ்பர ஈர்ப்புச் சக்தியால் கவரப்பட்டு ஓர் ஒழுங்குடன் இயங்குகின்றனவோ அதுபோலத்தான் மனித வாழ்வும், சமுதாயமும் இயங்குகிறது. அதாவது நமது கட்டுப்பாடு, நம் வாழ்வை மட்டுமின்றி, பிறர் வாழ்வையும் தொடுகிறது; பாதிக்கிறது.

கற்பு என்பதும் ஒரு வகை கட்டுப்பாடுதான். கற்பு என்பது வாழ்வின் ஒரு நெறி. அதை ஏன் போற்றுகிறோம் என்றால் அந்த நெறியைக் கடைப்பிடிப்போரின் வாழ்க்கை பூராவும் அது ஊடுருவுகிறது. அதனால் அவர்கள் வலிமை பெறுகிறார்கள். அவர்கள் மனக்கட்டுப்பாட்டின் வலிமையை 'பெய்யெனப் பெய்யு மழை!'யாகக் காண்கிறோம். மதுரையைத் தீப்பிடிக்க வைக்கும் கண்ணகியின் கோபமாகக் காண்கிறோம். தீயில் குளித்து வெளிவந்த சீதா பிராட்டியாகக் காண்கிறோம். ஆணுக்கும் பெண்ணுக்கும் அதனைப் பொதுவில் வைத்த பாரதியின் நேர்மையாகக் காண்கிறோம். கட்டுப்பாட்டின் வலிமையை நாம் இவற்றிலிருந்து புரிந்து கொள்ள வேண்டும்.

முதல் நாள் விரதமிருந்த மகாத்மா காந்தியின் தாய், மறுநாள் சூரியனைப் பார்க்காமல் சாப்பிடுவதில்லை. தானும் மற்ற சகோதரர்களும் தெருவில் நின்று, சூரியன் வராதா' என்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, அம்மாவிடம் ஓடிப் போய்ச் சொல்லும் விஷயத்தை மகாத்மா காந்தி தம் சுயசரிதத்தில் எழுதுகிறார். கவனியுங்கள்: ஒரு தாய் கொண்டிருந்த பழக்கம் எத்தகைய நெறிகளை, மன உறுதியை இளைஞர் மோகன்தாஸ் காந்தியின் மனத்தில் வளர்த்தது; எப்படி அது சத்தியாக்கிரகத்திற்குப் பின்னால் வழிவகுத்தது என்பதை எண்ணிப் பாருங்கள். ஆகவேதான், நாம் நம் குழந்தைகளைக் கண்டித்துச் சொல்வதைவிட, வாழ்ந்து காட்டுவது நல்லது.

சுய கட்டுப்பாடு ஒன்றும் சுலபமான

விஷயமல்ல. கட்டுப்பாடு என்று நமக்கு நாமே விதித்துக் கொண்டு வாழ்க்கையின் சுகங்களைத் தியாகம் செய்ய வேண்டுமா, என்று எனக்கே நான் யோசிப்பதுண்டு. துவக்கத்தில் அது ஒரு தண்டனையாகவும், தியாகமாகவும்தான் ஆரம்பிக்கிறது. ஆனால் அதன் விளைவுகளில் ஏற்படும் நிறைவு, நமது தியாகங்கள் எல்லாவற்றையும் ஈடு செய்கிறது. நமது மதிப்பில் நம்மை உயர்த்தி விடுகிறது. பிறர் சொல்கிறார்களோ இல்லையோ நாம் நம் மதிப்பில் பெரிய மனிதர்களாகி விடுகிறோம்.

டிசம்பர் 10-ம் தேதி வந்த ஒரு தமிழ் வார இதழைப் பார்த்தேன். 96 பக்கங்களில் விளம்பரம் 36 பக்கம். மிகுந்த 60 பக்கங்களில் 15 பக்கங்கள் சினிமா நட்சத்திரங்களைப் பற்றிய கவர்ச்சிச் செய்திகள்: அதாவது நாலில் ஒரு பங்கு சினிமா. இதைப் படிப்பவர்கள் இளைஞர்கள்தான் பெரும்பாலும்.

இப்போது நமது சமுதாயத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அவர்கள் உழைக்கும் நேரமான எட்டு மணி நேரத்தில் நாலில் ஒரு பங்கை சினிமாவைப் பற்றிச் சிந்திப்பதற்கும் பேசுவதற்கும் செலவிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். நாடு எங்கே போகும்?

இத்தகைய பத்திரிகையைக் கட்டுப்பாடற்ற பத்திரிகை எனலாமா? பொறுப்பற்றது என்று கூறுவதா? காசு மட்டுமே குறி என்று எதையும் விற்கத் தயாராயிருக்கும் ஒரு மனப் பக்குவம் என்று கூறுவதா?

கட்டுப்பாட்டிற்கு மறுபெயர் பொறுப்பு. பொறுப்பில்லாமல் காரியம் செய்து கொண்டு, இளைஞர்கள் மனம் போகிற போக்கில் போகிறோம் என்று பத்திரிகைகள் சொல்லுமேயானால், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்கிறோம் என்று அர்த்தம். நாட்டின் வருங்கால இளைஞர் சமுதாயத்தை வஞ்சிக்கிறோம் என்று அர்த்தம்.

ஒரு முக்கியமான துறை — ஜனநாயகத்தில் இன்றியமையாத பத்திரிகைத் துறை— எப்போது கட்டுப்பாட்டை இழக்கிறதோ, எப்போது நாம் அதைக் கண்டும் காணாதது போல் போகிறோமோ, அப்போது இந்தக் கட்டுப்பாடற்ற தன்மை சமுதாயத்தின் மற்ற துறைகளிலும் சுலபமாகப் பரவும்; பரவுகிறது — அரசியலில், கல்லூரிகளில், போலீஸில், நீதித் துறையில் என.. மக்கள் அபிப்ராயங்களை உருவாக்குபவர்களுக்கு இதில் மகத்தான பங்கிருக்கிறது. இவர்கள் கட்டுப்பாடு இழந்தால் மக்களும் இழப்பர். மக்களின் எண்ண ஓட்டத்தைத் திசை திருப்பும் பள்ளி, கல்லூரி ஆசிரியர்களும், பத்திரிகாசிரியர்களும், பொது வாழ்வில் ஈடுபட்ட அரசியல்வாதிகளும் இதை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

"காமக் கிளர்ச்சியில் மகிழும் — தன்னை மறக்கும் — சமுதாயம் ஆண்மையை இழக்கிறது" என்றான் ஓர் அறிஞன். ரோம் சாம்ராஜ்யத்தை இதற்கு உதாரணங் காட்டுவார்கள். நமது தேசத்திலும் உதாரணங்கள் உண்டு என்று சரித்திரம் பேசுகிறது.

விலங்குகள், மனிதர்களைப் போல காமக் கிளர்ச்சியில் ஈடுபடுவதில்லை. இனம் அழிந்துவிடாமல் இருக்க, எப்போது தேவையோ — அப்போதுதான் அதில் ஈடுபடுகின்றன என்று விலங்கியல் அறிஞர்கள் எழுதுகிறார்கள்.

'காமம் என்பது மனிதன் கற்றுக்கொண்ட கலை. இயல்பாக உள்ள உந்துதல் — உணர்வு— ஓரளவுதான். மற்றவை எல்லாம் தானாக வளர்த்துக் கொண்ட நினைப்புக்கள்'' என்று அவர்கள் எழுதுகிறார்கள்.

நமது ஊரிலோ மனிதன் செக்ஸை ஆண்மைக்கு உரைகல்லாகக் கருதத் தொடங்கிவிட்டான்! 'ஆடவர்க்கழகு சின்ன வீடு அமைத்தல்' என்று புதிய பழமொழி உலவுகிறது. நானறிந்த ஒருவர் போதும் போதாதென்று ஆபீசிலேயே ஒரு சின்ன வீடு வைத்திருக்கிறார்!

கட்டுப்பாடும், கட்டுப்பாடான நோக்கமும் — நாடு தழுவிய நிலையில் இருந்தால் தான் இந்த நாடு முன்னேறும். இல்லாவிட்டால், 'அவர் ஆசாரங்க! ஆம்லெட்டில் வெங்காயம் சேர்த்துக்க மாட்டார்!'' என்கிற கதைதான்!

— டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி



"உனக்கு ரெகமண்டேஷன் ஏதாவது இருக்கா?"

"இருக்கு சார். மந்திரி மன்னார்சாமி ரெகமண்ட் பண்ணியிருக்கார்..."

"ஒரு மணி நேரம் முன்னதான் அவர் பதவி பறிபோனது. போய் வா!"


நியூட்ராமுல் சக்தி
1000 gms. 500 gms. Refil.
நியூட்ராமுல் 37.21 19.29 –
மால்டோவா 43.75 24.65 22.79
பூஸ்ட் – 24.89 23.06
போர்ன்விடா 47.48 24.67 22.81
Prices as on 1st January, 1987. Local taxes extra.
நியூட்ராமுல்
விளங்குங்கள் நியூட்ராமுல் வஸ்தாத்தாக
daCunha/GCM/135/86 TAM

22

சின்னச் சின்ன கனவுகள்

சுபா

ரத்தினம் சிரிப்பை மாற்றாமல் நந்தகுமாரின் முடியைப் பற்றி இழுத்தான்.

"ஆந்தைடா நான்... என் கண்லேர்ந்து தப்பிச்சுட முடியாது..."

"அண்ணே" என்றான் நந்தகுமார். பிராக்கெட் போல வளைந்து ரத்தினத்திடமிருந்து திமிறினான். "என்னை விட்டுருங்கண்ணே."

"மாட்டிக்கிட்டவுடனே அண்ணேயாடா, அவிசாரிக்குப் பொறந்தவனே?"

நந்தகுமாருக்கு அந்த வாக்கியத்தின் முழுப் பொருள் விளங்கவில்லை. ரத்தினம் இடது புறங்கையால் நந்துவின் கன்னத்தில் மின்னல் போலத் தீண்டினான்.

"அம்மா."

"இன்னும் கத்திக் கூப்புடுறா... கூப்புடு. ஒரு பய வர்றானா பாப்போம். நீயும் உங்கம்மாவும் இந்த ஊர்ல காலை எடுத்து வச்சீங்க — சனி பிடிச்சிருச்சு, எங்க மொதலாளியை..."

நந்தகுமார் அவன் பிடியிலிருந்து திமிறினான். உடலெங்கும் பயம் ஊடுருவியது. வேண்டாம், இந்த ஃபாக்டரி வேண்டாம்; அதன் முதலாளி வேண்டாம்; மாமா வேண்டாம்; அத்தை வேண்டாம்; தங்கராஜ் அண்ணன் கூட வேண்டாம்; அம்மா போதும்; அம்மா மட்டும் முழுசாக் கிடைத்தால் போதும்.

ரத்தினத்தின் பிடி இறுகிக் கொண்டிருந்தது.

"வலிக்குது அண்ணே..."

"பூவால வருடிக் கொடுக்கச் சொல்றியாடா? உங்கப்பன் என் தம்பியை நெருப்பில தள்ளினப்போ, அவன் எப்படித் துடிச்சிருப்பான்? நீ கொஞ்சம் துடிடா, ராஜா..."

நந்தகுமார் சட்டென்று நின்று விட்டான்.

"எங்கப்பா தள்ளினாரா? எவன் சொன்னது?"

"அப்படியே கழுத்தை நெரிச்சுக் கொன்னுடுவேன்... நடடா..." ரத்தினம் தன் ராட்சச உள்ளங்கையால் நந்தகுமாரின் சிட்டுக் குருவிக் கழுத்தைப் பிடித்தான். அந்தப் பிடி நந்தகுமாரை என்னென்னவோ செய்தது.

"ஃபாக்டரில என்ன நடந்ததுன்னு உங்களுக்குத் தெரியுமாண்ணே?"

"டேய் வாயைத் தொறந்தே, அப்படியே கிழிச்சிடுவேன்."

"எங்கப்பா கொலைகாரரில்ல, இல்ல, இல்ல! முத்துன்னு ஒரு ஆளை அந்த கெமிக்கல் ரூம்ல வச்சுப் பூட்டி, உங்க முதலாளி நெருப்பு வச்சாரு... அந்தாளைக் காப்பாத்தப் போனப்பதான் எங்கப்பாவையும் உள்ள தள்ளிட்டாரு முதலாளி..."

"டேய், பேச்சு மாத்து பண்ணி ஓடலாம்னு பாத்தே, நான் பொல்லாதவனாயிடுவேன்" ரத்தினத்தின் பிடி லேசாகத் தளர்ந்தது.

"எங்கம்மா மேல சத்தியமாச் சொல்றேன் அண்ணே... முத்துவைக் காப்பாத்தப் போய்த்தான் எங்கப்பாவே செத்தாரு..."

ரத்தினம் நந்தகுமாரிடமிருந்து கையை எடுத்தான்.

"முத்து யாருன்னு தெரியுமாடா உனக்கு?"

"மொதலாளியோட அடியாள். ரெண்டு பேருக்கும் ஏதோ சண்டைன்ற வரைக்கும் எனக்குத் தெரியும்..."

"முத்து என் தம்பிடா.... இப்ப சொல்லு, நீ சொல்றது நிஜமா, பொய்யா?"

"அண்ணே, நீங்க யாருன்னு நான் பாத்ததில்ல. உங்க தம்பியைக் கூட ஜாஸ்தி பாத்ததில்ல. அந்த ரூம் பக்கம் நான் போனப்ப ஒரு வாட்டி, தடி வச்சு வெரட்டினாரு. அப்புறம் வெடிகுண்டு, அது இதுன்னு ஏதோ மொதலாளியோட சண்டை போட்டாரு. ரூம்ல போய் மாட்டிக்கிட்டாரு. முதலாளி முத்துவை உள்ள தள்ளி, வெளில தாப்பாப் போடறதை நான் ரெண்டு கண்ணாலயும் பாத்தேன் அண்ணே..."

"பொறுக்கி ராஸ்கல்!"

"அண்ணே...."

"உன்னையில்லடா... என் திருட்டு மொதலாளியைச் சொன்னேன். என்னடா நடந்தது, கரெக்டா சொல்லு..."

நந்தகுமாருக்கு மெல்ல மூச்சு சீரானது. இந்த ஆள் தன்னை நம்பத் தயாராகி விட்டான். வாழ்நாள் முழுமைக்கும் மறக்க முடியாத அந்த நெருப்புக் காட்சியை மில்லி மீட்டர் மில்லி மீட்டராக ரத்தினத்திடம் சொல்ல ஆரம்பித்தான்.

மாயகிருஷ்ணனின் இரட்டை விளையாட்டு புரிந்த போது ரத்தினத்தின் கண்கள் மேலும் சிவந்திருந்தன.

சினிமாக் கொட்டகை அருகில் உட்கார்ந்திருந்தார்கள். உள்ளே ராத்திரிக் காட்சியின் விம்மல்கள் வெடித்துக் கொண்டிருந்தன. கொட்டகைக்கு அருகில் இருந்த டீக்கடையில் கண்ணாடி டம்ளருடன் ஸ்பூன் மோதும் ஓசை அவ்வப்போது வந்தது. ரத்தினத்தின் காலடியில் ஒரு கட்டு பீடி சாம்பலாகியிருந்தது.

நந்தகுமாரின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான் ரத்தினம். கையை நீட்டி மெல்ல அவன் தலையை வருடிக் கொடுத்தான்.

"காலேலேர்ந்து என்னடா சாப்டே?"

ரத்தினத்தின் குரலில் இருந்த மாற்றம் நந்தகுமாருக்கு ஆச்சரியமாக இருந்தது. நினைத்துக் கொண்டாற் போல பசி. கிளறிவிட்ட நெருப்பைப் போல் குபீரென்று கிளம்பியது.

"அத்தை வீட்டுப் பக்கம் போனேன். அது பூட்டிக் கெடந்தது. அம்மா இருக்கற எடத்தைச் சுத்தி உங்க ஆளுங்க நிக்கறாங்க. தங்கராஜ் அண்ணனும் வீட்டுப் பக்கம் வரலே யில்ல. கைல காசும் இல்ல. இருந்தாலும் கடைப்பக்கம் போயிருக்க மாட்டேன். உங்க ஆளுங்க கப்புன்னு பிடிச்சிருவாங்கன்னு பயம்..."

"எங்க ஆளுன்னு இனிமே சொல்லாதடா... மொதலாளியோட ஆளுங்க... ஒண்ணும் சாப்பிடலையாடா அப்பா?"

"கொழாத் தண்ணிதாண்ணே..."

"எழுந்திரு.." ரத்தினம் நந்தகுமாரை டீக்கடைக்கு அழைத்துப் போனான்.

"வாங்க ரத்தினமண்ணே" பாய்லரிடம் இருந்தவன் சிவப்பு பனியனோடு பணிவாகச் சிரித்தான்.. "பெசல் டீ போடட்டுமாண்ணே?"

"மாஸ்டர், மொதல்ல சாப்பிடறதுக்கு ஏதாச்சும் கொடு. பன்பட்டர் ஜாம் போடச் சொல்லு. அப்புறம் பெசல் டீ..."

"எனக்கு நீங்க எதுவும் வாங்கிக் கொடுக்க வேண்டாண்ணே, எங்கம்மா கிட்ட பத்திரமாக் கொண்டு விட்டுடுங்க... காலேலேர்ந்து நான் அவங்களைப் பாக்கவேயில்ல..." நந்தகுமாரின் கண்கள் நீரோடு கெஞ்சின.

"நந்தகுமாரு, மொதலாளியைப் பத்தி உனக்கு சரியாத் தெரியாது. உன்னே தீத்துக் கட்டற வரைக்கும் உங்கம்மா வீட்டைச் சுத்திக் காவல் நிக்கும். இப்ப நீ அங்க போக முடியாது. மாப்பிள்ளே..."

பன் பட்டர் ஜாமை நந்தகுமாரிடம் நீட்டினான். "உங்கம்மா பத்திரமா இருக்காங்களான்னு நான் போய்ப் பாத்திட்டு வரேன்... ஏய் மாஸ்டர்; உள்ள ஏதாவது தங்கிக்க எடம் இருக்காய்யா?"

மாஸ்டர், ரத்தினத்தின் குரல் கேட்டு அரண்டு போனான். "பின்னால ஒரு ரூம் இருக்குங்க... ஆனா.."

"இருக்கு இல்ல. அது போதும்." ரத்தினம்





''உங்க பையனுக்குக் கேள்வித்தாள் அவுட் ஆயிடுத்துன்னு சொன்னீங்களே; பின்னே ஏன் டல்லா இருக்கான்?''

''கேள்விங்க மட்டும் அவுட் ஆனாப் போதுமா? விடையெல்லாம் அவுட் ஆகலேன்னுதான்!''

— அரகண்டநல்லூர் சாதிக்பாஷா.

சுவாதீனமாக அந்த அறைக்குப் போய்ப் பார்த்து விட்டு வந்தான்.

''பொம்பளே சகவாசத்துக்குன்னே வெச்சிருக்கியாய்யா. கட்டில், பொட்டலம், மல்லிப்பூ, சினிமா விட்டவுடனே எவ, ளாவது வரேன்னு சொல்லியிருக்காளா? இன்னிக்கு அந்த மாதிரி ஏதாவது வெச்சிக்கிட்டே, மவனே பொலி போட்ருவேன். நம்ம மாப்பிள்ளையை அங்க தங்க வக்கறேன். நான் திரும்பி வர்ற வரைக்கும் அவன் மேல தூசி படக் கூடாது. என் பேரைச் சொல்லிக்கிட்டு எவன் வந்தாலும் கூட இவனேப் பத்தி மூச்சு விடக் கூடாது. மூச்சு விட்டே...'' என்று எச்சரிக்கையை அந்தரத்தில் கனமாகத் தொங்க விட்டுக் கிளம்பினான்.

ரத்தினத்தின் ரத்தக் குழாய்களில் ஜிவ்வென்று வேகம் கூடியிருந்தது.

காற்றில் மாயகிருஷ்ணனே உருவகம் செய்து மானசீகக் கத்தியால் குத்திக் கிழித்துக் கொண்டே நடந்தான். முத்து தேவைப்பட்டான். கூப்பிட்டு விட்டார். முத்து தொந்தரவானான். தீர்த்துக் கட்டினார். இன்றைக்கு முத்து. நாளைக்கு? முதலாளிக்கு உயிர்கள் கூட கூட்டல் கழித்தல் கணக்குத்தான்.

மாயகிருஷ்ணனின் ரத்தம் தோய்ந்த நடவடிக்கைகளில் முதல் பங்கு அவனுக்குத் தான் என்பதால் அவர் குணம் ஆச்சரியமாக இல்லே. ஆனால் தன் மடியிலேயே கை வைப்பார் என்று எதிர்பார்த்திராததில் அதிர்ச்சியாக இருந்தது. மயிர்க்கால்களெல்லாம் சிலிர்த்து அடங்கின.

பாண்டியன் வீடு இருந்த தெருவில் ஆரம்பத்திலேயே நிழலில் ஆட்கள் தென்பட்டார்கள்.

''என்ன அண்ணே?''

''அந்த நந்தகுமார்ப் பையன் இந்தப் பக்கம் வந்தானா மாசிலாமணி?'' என்றான் ரத்தினம் இயல்பாக.

''கண்ணுல வெளக்கெண்ணெய் விட்டுக்கிட்டுக் காத்திருக்கோம். வரல்லேயே அண்ணே''

''வீட்ல அவங்கம்மா மட்டும்தானே?''

''தங்கராஜ் வந்திருக்கான். அந்தப்பொண்ணோட அண்ணனும், அண்ணியும் ஏதோ கல்யாணத்துக்குப் போயிருக்கிறதாச் சேதி...''

''நீ இரு. நான் உள்ள போய் அந்தப் பய எங்கயாவது ஒளிஞ்சுக்கிட்டிருக்கானான்னு பாத்துட்டு வரேன்...''

''சாக்கிரதையண்ணே... தங்கராஜ் உள்ள இருக்கான்...''

வீட்டிற்குள் நுழைந்து சட்டென்று கதவை உள்ளே தாளிட்டான் ரத்தினம். சத்தம் கேட்டுத் தங்கராஜ் விறைத்துத் திரும்பினான்.

''ரத்தினம்! என்ன இது?''

ரத்தினம் என்ற பெயரைக் கேட்டவுடன் குனிந்த தலையுடன் உட்கார்ந்திருந்த இந்திரா திடுக்கிட்டு எழுந்து விட்டாள்.

''தங்கராஜ், தங்கராஜ்...'' மேலே பேச முடியாமல் ரத்தினம் திணறினான்.

''சொல்லு ரத்தினம்.''

''நந்தகுமாரு'' என்று சொல்லி நிறுத்தினான்.

இந்திரா படக் என்று நிமிர்ந்தாள். ''நந்துவுக்கு என்ன? நந்துவுக்கு என்ன?''

''தங்கராஜ், அவங்களைக் கத்த வேணாம்னு சொல்லு. வெளியே எங்க ஆளுங்க காதில விழுந்து தொலைக்கப் போறது...'' ரத்தினம் பதறினான்.

''அண்ணி.... கொஞ்சம் இருங்க... என்னன்னு நான் கேக்கறேன்...''

''தங்கராஜ், நம்ம கையை மீறி என்னென்னவோ நடந்திடிச்சு...'' என்று ஆரம்பித்தான் ரத்தினம். ''இப்பக் கூட நந்தகுமாரைத் தேடிப் பிடிச்சிக்கிட்டு வான்னுதான் மொதலாளி என்னே அனுப்பினாரு...''

''நந்துவைப் பிடிக்கணுமா — எதுக்கு ரத்தினம்?''

''நான் இங்க உக்காரலாமா தங்கராஜ்...'' ரத்தினம் தரையில் உட்கார்ந்து கொண்டான். ''பாண்டியன் விபத்துல சாகலே தங்கராஜ். மொதலாளிதான் நெருப்பில பிடிச்சுத் தள்ளிட்டாரு...''

தங்கராஜ் சட்டென்று பாய்ந்து வந்தான். ரத்தினத்தை முரட்டுத்தனமாகப் பற்றித் தூக்கினான்: ''சொல்றதை ஒழுங்காச் சொல்லு ரத்தினம்.''

''நம்ம ஃபாக்டரி பின்னால தனியா ஒதுக்குப்புறமா ஒரு கெமிக்கல் ரூம் இருக்குதில்ல தங்கராஜ்?''

''பத்திட்டு எரிஞ்சதே. அந்த ரூம்?''

''ஆமா. அது உண்மையில கெமிக்கல் ரூம் இல்ல தங்கராஜ். மொதலாளி ரகசியமா வெடிகுண்டு தயார் பண்ண வெச்சிருந்த ரூம்...

''என்னது! வெடிகுண்டா?''

''கேளு... அங்க என் தம்பியும் வேலேல இருந்தான். போலீஸுக்கு எப்படியோ விஷயம் போயிடிச்சு. ரூமையே கொளுத்திடலாம்னு மொதலாளி முடிவு செஞ்சிருக்கார். அதுக்கு என் தம்பியைப் பலி வாங்கிட்டாரு. காப்பாத்தப் போன பாண்டியனேயும் நெருப்பில தள்ளிட்டாராம். நந்தகுமார் எல்லாத்தையும் பாத்திட்டான். இப்ப அவனே

•• ஆறு மணிநேரத் தூக்கம் அவசியம்; ஏழு மணிநேரத் தூக்கம் சுகபோகம்; எட்டு மணிநேரத் தூக்கம் கெட்ட பழக்கம்.

வேட்டையாடிட்டிருக்காங்க...''

''ஐயோ நந்தா!'' இந்திரா சுவரில் மோதிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

''இப்ப நந்து எங்கே?'' தங்கராஜ் உறுமினான்.

''அவனை பத்திரமா ஒரு இடத்தில ஒளிச்சு வச்சிருக்கேன்! தங்கராஜ்,மொதலாளியோடு சேர்ந்துக்கிட்டு நானும் நெறையத் தப்புப் பண்ணியிருக்கேன்...'' ரத்தினம் தலையைக் குனிந்துகொண்டான்.''என் தம்பி போயிட்ட துக்கத்தில உளர்றேன்னு நெனைக்காதே தங்கராஜ். மொதலாளியைப் பத்தின அத்தனை விஷயமும் எனக்குத் தெரியும்...'' இந்திராவைக் கடைக்கண்ணால் பார்த்தான். அவள் இவன் பேச்சில் கவனம் வைக்காமல் சுவரோடு தேய்ந்திருந்தாள்.

''சொல்லு ரத்தினம். எதையோ சொல்ல வர்றே. அப்புறம் தயங்கறே...''

''நீ கட்டிக்க இருந்தியே ஒரு பொண்ணு பரிமளான்னு — அது தற்கொலை பண்ணிக்கலே, தங்கராஜ்... மொதலாளிதான்...''

''மொதலாளிதான்?'' தங்கராஜ் ரத்தினத்தின் முகவாயைப் பற்றி நிமிர்த்தினான்.

''பாண்டியன் கல்யாணத்துக்கு வந்துட்டு ராத்திரி தனியா திரும்பிட்டிருந்தது பரிமளா. மொதலாளி கண்ல மாட்டிடுச்சு. டேய் ரத்தினம், அவ எனக்கு வேணும்டான்னாரு. குண்டுக் கட்டாத் தூக்கிக்கிட்டுப் போனேன். மொதலாளியோட ஏர்கண்டிஷன் ரூம்ல கொண்டு போய்ப் போட்டேன்... அங்க வெச்சி மொதலாளி என் கண்ணெதிரிலேயே அவளை...

தங்கராஜ் ஆவேசத்துடன் வெறிக்க, ரத்தினம் தொடர்ந்தான்:

''மொதலாளியோட முரட்டுத்தனத்தைத் தாங்க முடியாம பரிமளா பொசுக்னு போயிட்டா. அவ திமிறினப்ப அறுந்து விழுந்த கால் கொலுசு கூட என்கிட்டத்தான் இருக்கு, தங்கராஜ். பாக்டரி கெணத்தில கொண்டு போய் எறக்கினதே நான்தான். ஊர்லயே இல்லன்னு சொல்லிடுன்னு ராத்திரியோட ராத்திரியா பக்கத்து ஊருக்குக் கெளம்பிப் போயிட்டு மொதலாளி மறுநாள்தான் வந்தாரு.''

''அடப்பாவி! போலீஸ் கைல பாடி கெடைக்காம, தந்திரமா என்னையும் ஏமாத்தினது இப்பத்தான் வெளங்குது...'' தங்கராஜ் உதறிக் கொண்டிருந்தான். ''டேய் ரத்தினம், இப்ப எங்கேடா உன் மொதலாளி?''

''அவசரப்படாதே தங்கராஜ். அவரைச் சுத்தி ஆள்படை நிக்குது. உன்னால இப்ப நெருங்க முடியாது. நான் நந்தகுமாரை அழைச்சுக்கிட்டுப் போலீஸுக்குப் போயி நடந்ததையெல்லாம் சொல்லப் போறேன்...''

''போலீஸைத்தான் பாக்கெட்லேயே வச்சிருக்காரே உன் மொதலாளி?''

இந்திரா சுவரிலிருந்து நிமிர்ந்தாள்.

''தங்கராஜ், போலீஸ் வேணாம்,'' என்றாள் மெலிந்துபோன குரலில். ''நந்துவைக் கலெக்டர்கிட்ட அழைச்சுக்கிட்டுப் போங்க...''

(தொடரும்)

"பத்திரிகையாளராக அல்ல; சமூகப் பார்வையோடு வருகிறீர்கள்!"



சேலம் கலெக்டர் எம். தங்கதுரை.

— சேலம் கலெக்டர் எம். தங்கதுரை பேட்டி

கல்கி: சேலம் என்றவுடனேயே பளிச்சென்று தெரியும் பிரச்னை பஸ் ஸ்டாண்ட் பிரச்னைதான். கடந்த 84 லேயே அச்சுவானேரி என்னும் இடத்தில் முதல்வரால் அடிக்கல் நாட்டப்பட்ட புது பஸ் ஸ்டாண்ட் ஏன் இன்னும் கட்டப்படவில்லை?

சேலம் மாவட்டக் கலெக்டர் எம். தங்கதுரை: புது பஸ் ஸ்டாண்டைப் பராமரிப்பது நகராட்சியா அல்லது அண்ணா போக்குவரத்துக்கழகமா என்ற பிரச்னையால்தான் அது தாமதமாகிறது. முதல் கட்டமாக பஸ் ஸ்டாண்ட்டைக் கட்டி விடுவோம்; இரண்டாவது கட்டமாகப் பராமரிப்பைப் பற்றி யோசிப்போம் என்ற ரீதியில் இப்போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கல்கி: எல்லா நகரங்களிலும் நகராட்சி தானே பஸ் ஸ்டாண்டுகளைப் பராமரிக்கிறது. இங்கு மட்டும் அண்ணா போக்குவரத்துக் கழகம் தலையிடுவானேன்?

கலெக்டர்: ஒரு பரீட்சார்த்தமாக அண்ணா போக்குவரத்துக் கழகம் பராமரிக்க நினைக்கிறது.

கல்கி: இப்போதுள்ள அண்ணா போக்குவரத்துக் கழக டெப்போவையே அது சரியாகப் பராமரிப்பதில்லையே? டெப்போ சுற்றுப்புறச் சூழல் தூய்மையைக் கெடுக்கிறதே! அங்கு கழிவாகும் ஆயில் போன்றவற்றைச் சாக்கடையிலேயே கலக்கச் செய்வதால், அந்தப் பகுதியிலுள்ள கிணற்று நீரில் ஆயில் மிதப்பதைக் கண்டோம். அதோடு டயர்—ரீடிரேடிங் செய்யும் புகையும் காற்றை அசுத்தப்படுத்துவதால் சுற்றிலும் உள்ள மக்கள் சிரமப்படுகிறார்கள். இது தொடர்பாக சுப்ரீம் கோர்ட் கூடக் கவனிக்க உத்தரவிட்டும் பயனில்லை என்கிறார்கள். எனவே டெப்போவை வேறு இடத்திற்கு மாற்றினால் என்ன?

கலெக்டர்: இப்போது அங்கு பஸ்களைக் கழுவுவதில்லை. அதனால் ஆயில் வர வாய்ப்பில்லை. டயர் ரீ—டிரேடிங் பகுதியும் இப்போது இயங்குவதில்லை.

கல்கி: சாக்கடையில் ஆயில் கலந்து ஓடுவதை நாங்களே பார்த்தோம்.

கலெக்டர்: கவனிக்கிறேன்.

கல்கி: இப்போதுள்ள பஸ் ஸ்டாண்ட் அருகிலிருக்கும் போஸ் மைதானம் முழுமையும், பொருட்காட்சி சமயத்தில் ஆண்டுக்கு மூன்று மாதம் பொருட்காட்சியால் எடுத்துக் கொள்ளப்படுவதால், ஒவ்வோர் ஊர் பஸ்களும் நகரின் ஒவ்வோர் மூலையில் நிறுத்தப்படுவதால், பயணிகள் படும் அவதி சொல்லி மாளாது. பொருட்காட்சியை வேறு இடத்தில் நடக்கச் செய்தால் என்ன?

கலெக்டர்: உண்மைதான். பொருட்காட்சியைக் காந்தி மைதானத்தில் நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கல்கி: பஸ்களில் அடிக்கப்படும் ஏர்—ஹாரன் சப்தம் காதைத் துளைக்கிறது. இதைக் கூடவா தடை செய்ய முடியாது?

கலெக்டர்: தடை செய்து விட்டோம். ஆனால் வெளி ஊர்களிலிருந்தும் மாநிலங்களிலிருந்தும் வருபவர்கள் தெரியாமல் அடிக்கிறார்கள், என்ன செய்வது?

கல்கி: சேலம் நகரிலுள்ள ஆட்டோ டிரைவர்கள் மீட்டரைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதேயில்லை. கேட்டால் நாங்கள் ஆர்.டி.ஓ. ஆபீஸுக்கு லஞ்சம் கொடுக்கிறோமே! முதலில் அதை நிறுத்துங்கள் என்

கிறார்கள்!

கலெக்டர்: நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறோம்.

கல்கி: சேலம் நகர சினிமாத் தியேட்டர்களில் சுகாதாரமே இல்லை!

கலெக்டர்: அவ்வப்போது விசிட் செய்து சுகாதாரமில்லாத தியேட்டர்களைக் கண்டு பிடித்துசார்ஜ் செய்துகொண்டுதான் இருக்கிறோம். ஏ. சி. இயங்காத போது அதற்கான கட்டணத்தையும் திருப்பித் தரும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டுதான் வருகிறோம்.

கல்கி: சேலம் நகரில் திறந்தவெளிச் சாக்கடைகளாக இருப்பதால், அதோடு கழிவறைகளின் இணைப்பையும் சிலர் சட்ட விரோதமாக இணைத்து அசிங்கப்படுத்துகிறார்கள்.

கலெக்டர்: அப்படி யாராவது இணைந்திருப்பதாக மக்கள் எங்களுக்குத் தகவல் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம்.

கல்கி: பாதாளச் சாக்கடைத் திட்டம் என்னவானது?

கலெக்டர்: ஏற்பாடுகள் நடந்து கொண்டு தான் இருக்கின்றன.

கல்கி: சேலம் ஜங்ஷனுக்கும் ஜவஹர் மில்லுக்கும் இடையிலுள்ள கந்தப்பட்டி கிராமத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் நில ஆர்ஜிதம் செய்யப் போவதாக அறிவித்து, உடைமையாளர்களின் ஆட்சேபனைகளைக் கோரிய போது, எல்லோருடைய ஆட்சேபனைகளையும் புறக்கணித்த வாரியம்,அ. இ. அ. தி. மு. க. வைச் சேர்ந்த ஆறு பேரின் ஆட்சேபனைகளை மட்டும் ஏற்றுக் கொண்டு சுமார் நான்கு ஏக்கர் நிலத்திற்கு விலக்கு அளித்துள்ளதாமே?

கலெக்டர்: கவனிக்கிறேன்.

கல்கி: மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திலுள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் உள்ளவர்களுக்கு இப்போதுள்ள புதூர் செல்லும் பாதை பாதுகாப்பானதாக இல்லை; இருட்டிவிட்டால் . அதில் பெண்கள் பாதுகாப்பாக வர முடிவதில்லை. எனவே, ஆட்சித் தலைவர் பங்களா உள்ள நிலத்திற்குள்ளேயே சாலை வசதி செய்து கொடுத்தால் மிகவும் உபயோகமாக இருக்கும் என்கிறார்கள்.

கலெக்டர்: இப்போதுள்ள அக்குடியிருப்புக்கே ஆட்சித் தலைவர் வளாகத்திலிருந்துதான் எட்டு ஏக்கர் நிலம் கொடுக்கப் பட்டது. அரசுதான் அதுபற்றி முடிவு எடுக்க வேண்டும்.

கல்கி: தாதம்பட்டி பஞ்சாயத்திற்கும் வடக்கு அம்மாப்பேட்டை பஞ்சாயத்திற்கும் இடையிலுள்ள தகராறு காரணமாக அங்குள்ள ஆழ்குழாய்க் கிணறொன்றில் தண்ணீர் வசதி இருந்தும் பயன்படுத்த முடியாமல் இருக்கிறது.

கலெக்டர்: உண்மைதான். அவர்கள் இருவரும் சமாதானமாகப் போய் விட்டால் பிரச்னையே இல்லை. மறுபடியும் அவர்களுக்கிடையில் சமாதானம் நிலவ முயற்சி செய்கிறேன்.

கல்கி: பஞ்சாயத்துக்களில் வேலை பார்க்கும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு அரசு கொடுத்த பொங்கல் இனாமான முந்நூறு ரூபாயில் சில பஞ்சாயத்துத் தலைவர்கள் நூறு ரூபாயை எடுத்துக் கொண்டுதான் கொடுத்தார்களென்று ஒரு பரவலான புகார் சொல்லப்படுகிறது. எனவே, அத்தொகை இனி பஞ்சாயத்துத் தலைவர்கள் இப்படி எடுத்துக் கொள்ள முடியாதபடி கொடுக்க இயலுமா?

கலெக்டர்: ஆவன செய்கிறேன்.

கல்கி: சேலம் அருகிலுள்ள காட்டூரில் வசிக்கும் உடல் ஊனமுற்ற அருள்மொழி என்ற பெண், தனது சிறு மளிகைக் கடையை விரிவுபடுத்த வேண்டி, ஊனமுற்றோருக்கான சலுகையில் மான்யத்துடன் கூடிய கடனுக்காக, சமூக நலத்துறைக்கும் வட்டார வளர்ச்சி அலுவலருக்கும் விண்ணப்பித்து விண்ணப்பித்து அலுத்துப் போய் விட்டார். கடனே கிடைக்கவில்லை!

கலெக்டர்: உடனடியாக அப் பெண்ணுக்கு கடன் கிடைக்க ஆவன செய்கிறேன்.

கல்கி: சேலம் அரசு மருத்துவமனைக்கு அருகில் ஒரு ரயில்வே மேம்பாலம் இல்லாத தன் சிரமம் அனைவருக்கும் தெரியும்.

கலெக்டர்: உண்மைதான். அரசின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது.

கல்கி: சேலத்தில் விபசாரம் அதிகமாக இருக்கிறதென்று அனைவரும் சொல்கிறார்கள்.

கலெக்டர்: முன்பு இருந்ததைவிட இப்போது மிகவும் கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்குக் காவல் துறையினர் மட்டுமல்ல; எய்ட்ஸ் நோய் பயமும் ஒரு காரணம். அந்த வகையில் எய்ட்ஸுக்கு நாம் நன்றி சொல்லத்தான் வேண்டும்.

கல்கி: சேலம் நாராயண நகர்ப் பகுதியை அடுத்துள்ள வெள்ளைக்குட்டை ஏரி என்னுமிடத்தில் சுமார் முப்பது வருடங்களுக்கும் மேலாக வசித்து வரும் மக்களிடம் அவர்களுக்கு வீடு கட்டித் தருவதாக வாக்குறுதியளித்து அவர்களைக் காலி செய்ய வைத்து, வீடுகளைக் கட்டி முடித்த வீட்டு வசதி வாரியம் இப்போது அதை வெளியாருக்கு விற்க, அறிவிப்புச் செய்துள்ளதே! இது அவர்களை ஏமாற்றுவதாக ஆகாதா?

கலெக்டர்: அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதாகச் சொன்ன இடம் இன்னும் அப்படியேதான் இருக்கிறது. அவர்களை ஏமாற்றவில்லை. அவர்களுக்குக் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் நிச்சயமாக வீடு

* பேட்டியின் போது உடனிருந்த அதிகாரிகளில் ஒரு பகுதியினர்.



கள் கட்டித் தரப்படும்.

கல்கி: சேலம் ஐந்து ரோடிலுள்ள விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கான நினைவுச் சின்ன காம்பவுண்டுக்குள்ளேயே ஆளுங்கட்சிக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது நியாயமா? எந்தக் கட்சிக் கொடியையும் அங்கு பறக்க விடக்கூடாது என்று சொல்லலாமே?

கலெக்டர்: கவனிக்கிறேன்.

கல்கி: தாரமங்கலத்திலுள்ள நெசவாளர் காலனிக்குச் சென்றபோது, அங்குள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில், தாங்கள் நெய்வதற்கான பாவு தரப்படுவதில்லையென்றும் அதனால் மிகக் குறைந்த கூலிக்குத் தனியார்களிடம் பாவு வாங்கி நெய்வதால் வீடுகளுக்கான தவணைத் தொகையைக் கட்ட முடியவில்லையென்றும் சொன்னார்கள். சங்கத்தின் செயலாளரைச் சந்தித்த போது, 'நெசவாளர்களுக்கான வீடுகள் கட்டித் தரும் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த உத்தரவு வந்தது. ஆனால் அதற்கான நிதி ஹட்கோவிலிருந்து வரத் தாமதமானது. எனவே, வங்கியில் கடன் வாங்கிக் கட்டினோம். அதற்கு 1,36,000 ரூபாய் வட்டியாகிவிட்டது. அதற்கு ஈடு செய்ய சங்கத்தில் நிதி வசதியில்லை. எனவேதான் அவர்களுக்குப் பாவு தர முடியவில்லை' என்றார். நீங்கள் ஆவன செய்ய வேண்டும்.

கலெக்டர்: இதுவரை இப்பிரச்னை எனது கவனத்திற்கு வரவில்லை. உடனடியாக ஆவன செய்கிறேன்.

கல்கி: சமூகநலக் காடுகள் வளர்ப்புக்காக மேச்சேரி யூனியனிலுள்ள புக்கம்பட்டி, மல்லிகுந்தம், வெள்ளாறு ஆகிய இடங்களில் மரக்கன்றுகள் நட, மூன்றரை லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுக் காண்ட்ராக்டும் விடப்பட்டது. பணமும் செலவழிக்கப்பட்டது. ஆனால், அந்த ஊர்களில் கன்றுகளே நடப்படவில்லை. ஏன், குழியே வெட்டப்படவில்லை! அரசு பணம் இப்படியா வீணாக வேண்டும்?

கலெக்டர்: கவனிக்கிறேன். (நமது பேட்டி முடிந்த மறுநாளே மேச்சேரி யூனியன் வட்டார வளர்ச்சி அலுவலர், யூனியன் எஞ்ஜினியர், ஒன்றிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட மேற்பார்வையாளர் ஆகிய மூவரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டு விட்டனர்!)

கல்கி: இப்போது வரவர ஏற்காட்டில் பெய்யும் மழையளவு குறைந்து கொண்டே வருகிறது. காரணம், மரங்கள் கள்ளத்தனமாக வெட்டப்படுவதுதான் என்கிறார்கள். சன்னியாசிமலை என்ற இடத்தில் பல மரங்கள் வெட்டப்பட்டிருந்ததை நாங்களே நேரில் கண்டோம்.

கலெக்டர்: கள்ளத்தனமாக மரங்கள் வெட்டப்படுவதைத் தடுக்கத் தீவிர நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டுதான் உள்ளோம். இன்னும் தீவிரப்படுத்துகிறோம்.

கல்கி: சுற்றுலாத் தலங்களில் ஒன்றான ஏற்காட்டில் சரியான பஸ் ஸ்டாண்டு வசதி கூட இல்லை. சாலைப் பராமரிப்பும் இல்லை.

கலெக்டர்: சுற்றுலாத்துறை, வளர்ச்சிக்காக ஏற்காட்டிற்கு அரசு இருபத்தைந்து லட்ச ரூபாய் அனுமதித்துள்ளது. அருமையான பஸ் ஸ்டாண்டுக்கான வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

கல்கி: ஏற்காட்டிலுள்ள சில வீடுகளுக்குக் குடிநீர் வருவதேயில்லை.

கலெக்டர்: குடிநீர் வழங்கும் தொட்டியை இன்னும் உயரமான இடத்தில் கட்ட முடியுமா என்று பார்த்து ஆவன செய்கிறேன்.

கல்கி: ஏற்காடு ஏரிக்கு அருகிலேயே கள்ளச் சாராயம் விற்கப்படுவதைக் கண்டோம்!

கலெக்டர்: போலீஸார் அடிக்கடி ரெய்டு நடத்திப் பிடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

கல்கி: சில சமயங்களில் போலீஸார் நடத்தும் ரெய்டே தங்களுக்குத் தெரியாமல் யார் யார் கள்ளச்சாராயம் விற்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் என்றும் பரவலானதொரு கருத்து இருக்கிறது.

கலெக்டர் (சிரிக்கிறார்): தவறு செய்பவர்கள் இல்லாமல் இல்லை. இதுபோன்ற விஷயங்களில் பொது மக்களின் ஒத்துழைப்புத்தான் வெற்றி பெற உதவும்.

கல்கி: மேட்டூரிலிருந்து சேலத்திற்கு வரும் குடிநீர் நங்கவள்ளி என்னுமிடத்தில்தான் சுத்திகரிக்கப்படுகிறது. ஆயினும் அங்கு குடிநீர்த் தட்டுப்பாடு. இப்போது தரப்படும் காவிரி நீரின் அளவு அதிகப்படுத்தப்பட வேண்டும் என்கிறார்கள்.

கலெக்டர்: இப்போதே சேலத்திற்கு வரும் குடி நீரில் நான்கு லட்சம் காலன் வழியோரக் கிராமங்களுக்குக் கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. சேலத்திற்கே பற்றாக் குறையாக இருக்கும்போது அவர்களுக்கு எப்படிக் கொடுக்க இயலும்?

கல்கி: இரண்டாவது குடிநீர்த் திட்டம்

முடிவடையும் போது கொடுக்கலாமே?

கலெக்டர்: அது 91 இல்தான் முடிவடையும். அப்போது சேலம் நகராட்சிதான் அது பற்றி முடிவெடுக்க வேண்டும்.

கல்கி: ஜலகண்டபுரத்திலுள்ள அரசு மருத்துவமனைக்குக் காம்பவுண்டுச் சுவர் கூட இல்லை. குடிநீர் வசதியும் இல்லை. மருத்துவமனை ஓரத்திலேயே இருக்கும் பொதுக் கழிப்பிடத் தொல்லை! டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட ஆபரேஷன் தியேட்டரும் இயங்குவதில்லை. இத்தனைக்கும் மேலாக அங்கு பணிபுரியும் டாக்டர்களும் குறிப்பிட்ட நேரங்களில் இருப்பதில்லை.

கலெக்டர்: ஆவன செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: சுமார் பத்தாயிரம் மக்கள் தொகையுள்ள வனவாசியின் குடிநீர்த் தேவைக்காகப் பக்கத்திலுள்ள ஊற்றுப் பள்ளம் என்னுமிடத்தில் ஒரு ராட்சசக் கிணறு தோண்டி, பைப் லைன் போடத் திட்டமிடப்பட்டுக் காண்ட்ராக்டும் விடப்பட்டது. ஆனால் அத்திட்டத்திற்கான முழுப் பணமும் கிணறு தோண்டுவதற்கே சரியாகப் போய் விட்டதாகச் சொல்லி மூன்றாண்டு காலமாக அப்படியே விட்டு விட்டார்கள். இத்தனைக்கும் அக்கிணற்றில் வற்றாத ஊற்று இருப்பதாகச் சொல்கிறார்கள்.

கலெக்டர்: குடிநீர்ப் பஞ்சத்தை எதிர்நோக்கியுள்ள காலத்தில் இப்படியொரு நிலையா? உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன்.

கல்கி: பஞ்சாயத்து ஊழியர்களைக் குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு போன்ற திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசு பயன்படுத்திக் கொண்டிருப்பதால், பஞ்சாயத்து வேலைகள் பாதிக்கப்படுகின்றன என்கிறார் மல்லசமுத்திரம் டவுன் பஞ்சாயத்துத் தலைவர் என். முருகேசன்.

கலெக்டர்: குடும்பக்கட்டுப்பாடு, சிறு சேமிப்பு போன்றவை மிகவும் அத்தியாவசியமானவை. அதை அவர்கள் செய்துதான் ஆகவேண்டும். ஆனால் சில அலுவலர்கள் இதைக் காரணம் காட்டி எப்போதும் வெளியிலேயே சுற்றிக் கொண்டு ஏமாற்றிக் கொண்டிருப்பார்களானால் — அவர்கள் பற்றித் தகவல் கொடுத்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கல்கி: இராசிபுரத்திலுள்ள திருவள்ளுவர் அரசு கலைக் கல்லூரியில் இப்போது இரண்டாமாண்டு பட்டப்படிப்புப் படிக்கும் எட்டு பிற்பட்ட மாணவர்களுக்கான சென்ற ஆண்டு உதவித் தொகையே இன்னும் கிடைக்கவில்லை என்கிறார்கள். முதல்வரிடம் விசாரித்த போது, மாணவர்கள் அதற்கான விண்ணப்பத்தைக் காலதாமதமாகக் கொடுத்ததாகச் சொல்கிறார். மாணவர்களோ குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள்ளேயே கொடுத்துவிட்டதாகச் சொல்கிறார்கள். இதில் எது உண்மை என்பதை விட அந்த மாணவர்களுக்கான உதவித் தொகை கிடைக்கச் செய்வதுதான் முக்கியம்.

கலெக்டர்: விண்ணப்பங்களின் காலதாமதம் ஒரு பிரச்னையே அல்ல. முதல்வரே அவர்களுக்கு உதவித் தொகை வழங்கச் செய்து, பிறகு அரசிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்க முடியும். நிச்சயம் அவர்களுக்குக் கிடைக்கும். ஆவன செய்கிறேன்.

கல்கி: நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரிக்காக நில ஆர்ஜிதம் (சுமார் 1,200 ஏக்கர்) செய்ய உத்தேசித்துள்ள இடத்தில் மட்டும் சுமார் முப்பது கோழிப் பண்ணைகள் (சுமார் ஒரு லட்சம் கோழிகள்) உள்ளன. நான்காயிரம் தென்னை மரங்கள், நூறு கிணறுகள், வீடுகள் என்று பலவும் இருக்கின்றன. ஆனால் அந்த இடத்திலிருந்து சுமார் அரை கி. மீ. தள்ளிச் சென்றால் வெறும் மானாவாரிப் பயிர் மட்டுமே விளையும் இடம் நிறைய இருக்கிறது. அந்த இடத்தை ஆர்ஜிதம் செய்தால் அரசு கொடுக்கும் ஈட்டுத் தொகையும் மூன்றில் ஒரு பகுதியாகக் குறையும் என்பதோடு இப்போதுள்ள இடத்தில் உள்ளவற்றை அழிக்க வேண்டிய அவசியமும் இருக்காதல்லவா?

கலெக்டர்: உங்கள் ஆலோசனையைத் தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்திற்கு எழுதுகிறேன்.

கல்கி: திருச்செங்கோடு அருகிலுள்ள கூட்டப்பள்ளி வீட்டு வசதி வாரிய வீடுகள் விற்கப்பட்டபோது, இருபத்து நான்கு மணி நேரமும் காவிரி நீர் கிடைக்கும் என்று விளம்பரப்படுத்தப்பட்டது. ஆனால் இப்போது குழாய்க் கிணற்று நீர்கூடக் கிடைக்கவில்லை. ஏழாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட அவ்வீடுகளில் பல விரிசலடைந்து இடிந்து விழும் அபாய நிலையில் உள்ளன. மயான வசதியும் இல்லை. இப்போது அவர்கள் வைத்துள்ள பிள்ளையார் கோயில், மாரியம்மன் கோயில் நிலங்களுக்குப் பட்டாக் கொடுக்க வேண்டும் என்கிறார்கள்.

கலெக்டர்: ஆவன செய்கிறேன்.

கல்கி: அங்கு சுமார் ஆயிரத்து இருநூறு வீடுகள் இருந்தாலும் ஒரு போஸ்ட் ஆபீஸ் இல்லை. பக்கத்தில் சுமார் நான்கு கி. மீ. தள்ளியுள்ள ஆண்டிப்பாளையம் போஸ்ட் ஆபீஸிலோ, ராஜம்மாள் என்பவருக்கு மணியார்டர் வந்த ஐந்நூறு ரூபாயில் இருநூற்றைம்பது மட்டும் முதல் நாள் தந்து மீதியை மறுநாள் தந்தார்களாம்; அப்படியொரு நிலை!

கலெக்டர்: சம்பந்தப்பட்ட போஸ்ட் மாஸ்டருக்கு எழுதுகிறேன்.

கல்கி: அங்கேயே சிறுசேமிப்பு ஏஜெண்டாகப் பணியாற்றும் எஸ். ராணி என்பவரைச் சந்தித்த போது, பல மாதங்களாகத் தமக்குக் கமிஷன் தொகையே கொடுக்கப்



படவில்லையென்று குறைபட்டுக் கொண்டார். அதோடு சிறுசேமிப்புக்காகக் கொடுக்கப்படும் ASLAAS—6 என்ற விண்ணப்பமும் கொடுக்கப்படுவதில்லை என்றார்.

கலெக்டர்: கவனிக்கிறேன்.

கல்கி: திருச்செங்கோட்டின் கொசு உற்பத்தி ஸ்தானமான அம்மன் குளத்தை மூட வேண்டும் என்கிறார்கள்.

கலெக்டர்: பரிசீலனையில் இருக்கிறது.

கல்கி: திருச்செங்கோட்டிற்கு வரும் காவிரி நீர்க் குடிநீர்த் திட்டத்தின் இரண்டாவது திட்டம் என்னவானது?

கலெக்டர்: அதற்கான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

கல்கி: சேலம் மாவட்டத்திலுள்ள சேகோ பேக்டரி கழிவு நீரெல்லாம் சாலையோரங்களிலேயே தேங்கிச் சுற்றுப்புறத் தூய்மையைக் கெடுக்கிறது.

கலெக்டர்: சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கட்டுப்பாட்டுத்துறையிடம் அனுமதிவாங்கித்தான் சேகோ பேக்டரிகள் கட்டப்பட வேண்டும். செக் அப் செய்கிறேன்.

கல்கி: மேட்டூர் தாலுகாவிலுள்ள மங்காணூர் கிராமத்தைச் சேர்ந்த செ. இராசு என்பவர் தமது விவசாயக் கிணறு பம்ப் செட்டுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பித்துப் பத்தாண்டுகள் கழித்து அதற்கான உத்தரவும் வந்தது. ஆனால், அவர் தமது தயார் நிலையைத் தெரியப்படுத்த வேண்டிய கடைசித் தேதி சமயத்தில் அவரது அண்ணியார் இறந்துவிட்டதால் மூன்று நாட்கள் காலதாமதமாகி விட்டது. அதனால் மீண்டும் புதிதாக விண்ணப்பித்துத்தான் இணைப்புப் பெற வேண்டும் என்கிறார்களாமே? மின்வாரியம் மனிதாபிமான அடிப்படையில் நடந்து கொள்ளக் கூடாதா?

கலெக்டர்: நடந்து கொண்டிருக்கலாம்தான். ஆனால் இங்குள்ளவர்கள் விதி அப்படி என்பார்கள். எனவே, இதுபற்றி நானே போர்டுக்கு எழுதிக் கேட்கிறேன்.

கல்கி: ஆத்தூருக்கு அருகிலுள்ள பெரிய கிருஷ்ணாபுரத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளி இயங்கி வந்த தற்காலிகக் கூரைக் கட்டடமும் கடந்த 2.3.86 அன்று தீவிபத்துக்கு இரையாகி விட்டதால், இப்போது மரத்தடிகளே வகுப்பறைகளாகிவிட்ட அவலம்.

கலெக்டர்: ஆவன செய்கிறேன்.

கல்கி: சேலம் மருத்துவக் கல்லூரி, விமான நிலையம் என்னவானது?

கலெக்டர்: மருத்துவக் கல்லூரிக்கு நில ஆர்ஜிதம் செய்ய உள்ளோம். விமான நிலையத்திற்கு நாங்கள் தயார். மத்திய அரசுதான் ஆவன செய்ய வேண்டும்.

கல்கி: கடைசியாக ஒன்று. ஒருவர் எங்களுக்கு மிகவும் விரக்தியான நிலையில் ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அரசுப் பணியில் இருப்பவர்கள் இறக்கும் போது அரசு வழங்கும்இருபதாயிரம்ரூபாய்பெறுவதற்குக் கூட லஞ்சம் தரவேண்டியுள்ளதாம். 'எங்கும் லஞ்சம் பெருகிவிட்டது. அதற்காக லஞ்சம் வாங்குபவர்களை விக்டோரியா மைதானத்தில் நிறுத்தி, பகிரங்கமாகக் கழுத்தில் கயிறு மாட்டித்தூக்கிலிட வேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால், இன்னின்ன காரியங்களுக்கு இவ்வளவுதான் லஞ்சம் என்று அரசாங்கமே நிர்ணயம் செய்துவிட்டால் மிகவும் உதவிகரமாய் இருக்கும்!' என்று மிகவும் பாதிக்கப்பட்டு எழுதியுள்ளார்.

கலெக்டர்: அவரின் ஆழமான வடுவை உணர முடிகிறது. அவர் புகார் கொடுத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருக்கிறேன். லஞ்சத்தை ஒழிக்கப் பொது மக்களின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம். அது இல்லாமல் சட்டத்தால் மட்டும் எதுவும் செய்துவிட முடியாது.

கல்கி: எங்கள் பேட்டியின் போது எடுத்துச் சொல்லப்படும் பிரச்னைகளுக்குத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, உங்களோடு நாற்பதுக்கும் மேற்பட்ட அதிகாரிகளை உடனிருக்கச் செய்தமைக்கு மிகவும் நன்றி.

கலெக்டர்: இதுவரை நீங்கள் ஒரு பத்திரிகையாளராக வந்து பிரச்னைகளை எடுத்துச் சொல்லவில்லை. சமூகப் பார்வையோடு வந்திருக்கிறீர்கள். அதற்கு நான் மிகுந்த நன்றி கூறுகிறேன். நீங்கள் சுட்டிக்காட்டிய பிரச்னைகளுக்கெல்லாம் உடனிருக்கும் அதிகாரிகள் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி எனக்கு ஒரு மாதத்திற்குள் தெரிவிக்கச் சொல்லியிருக்கிறேன். அதன் பிறகு அவற்றை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். நன்றி, வணக்கம்.

(இடமின்மையால் இங்கு பிரசுரமாகாத வேறு பல பிரச்னைகளும் கலெக்டரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டன.

— ஆசிரியர்)

பரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிட்டவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.

நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை—600 032. போன்: 431543 434157.

ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரி வட்டம், நுங்கம்பாக்கம், சென்னை—600 034. போன்: 473389.

ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ 78/—; வெளி நாடு கப்பல் தபால் ரூ 250/—; விமானத் தபால் ரூ 650/—. (ஆறு மாதச் சந்தா ஏற்கப்படும்.)


இன்றே பாருங்கள்!
குடும்பமே மகிழும்
சுற்றுலாப் பொருட்காட்சி
வளரும் தமிழகம்
INDUSTRIES
DIPR 530/MS/87 ELEGANT

REGISTERED No. M. 4792
Registered as a Newspaper in Sri Lanka

18 வயதினிலே, உங்களுக்கு காதல் நினைவுகள், முகப்பரு, மர்ம நாவல்கள், மெல்லிசை போன்றவற்றில் சிந்தனை லயித்துவிடும். 'பொக்கிஷம் போன்ற 32 பற்களை'ப் பற்றி உங்களுக்கு கவலை ஏது?



அச்சமயங்களில் போர்ஹென்ஸ் பல்பராமரிப்பு உங்களைக் கவனிப்பதில் மிகவும் அக்கறை காட்டுகிறது.

அதிகாலையில் நீங்கள் குளியல் அறைக்குச் செல்லும்போது ஈறுகள் கருக்கத்தையும் பற்காறையைப் பற்றியுமா சிந்திக்கப்போகிறீர்கள். துடிப்பான உங்கள் பருவ வயது சிந்தனைகளில் அல்லவா நீங்கள் மூழ்கி விடுகிறீர்கள். வேண்டுமானால் நுரையும் ருசியுமுள்ள டூத் பேஸ்ட்டினால் நீங்கள் அன்றாடம் இருமுறை பல் துலக்கலாம்.

இருந்தும், உடனடியாக இல்லாவிட்டாலும் தாமதமாக பற்சிதைவு ஏற்படும் அபாயம் இருக்கத்தான் செய்கிறது. 'பொக்கிஷம் போன்ற 32 பற்களையும்' என்றும் பத்திரமாக வைத்துக்கொள்ளவேண்டாமா?

வினா: உங்கள் டூத்பேஸ்ட் பற்களை மட்டும் சுத்தப் படுத்துகிறதா அல்லது ஈறுகளையும் கெட்டிப்படுத்துகிறதா? மூச்சிலே புத்துணர்ச்சியை மட்டும் அளிக்கிறதா அல்லது ஈறுகளையும் உறுதிப்படுத்துகிறதா?

போர்ஹென்ஸ் தன் பல்வகைப் பல் பராமரிப்புகளால் இத்தகைய விஷயங்களைக் கவனிப்பதில் அக்கறை காட்டுகிறது.

உதாரணமாக, போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் மற்றும் டூத் பவுடர் ஒப்பற்ற அஸ்ட்ரிஞ்ஜெண்ட் கொண்டவையாகும். இது பற்களுக்கு உறுதியான அஸ்திவாரம் அளிப்பதற்கு ஈறுகளை வலுப்படுத்துகிறது. ஆகவே அவை நீடித்த ஆயுளைப் பெறுகின்றன. ஈறுகள், பற்களுக்கு பாதுகாப்பும் பிடிமானம் அளித்து, துர்நாற்றம் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் உருவாக இடமளிப்பதில்லை. அதாவது சுவாசத்தில் துர்நாற்றத்தை தடுக்கிறது.

இதுமட்டுமா, கேவிட்டி ஃபைட்டர் போர்ஹென்ஸ் ஃப்ளோரைட், அமிலத் தாக்குதலைத் தடுத்திட பல் எனாமலை ஆற்றலுடன் கெட்டிப்படுத்துகிறது.

போர்ஹென்ஸின் டூத்பிரஷ் கூட இரட்டைச செயல் கொண்டதாகும். பற்களுக்கு பளிச்சிடும், வெண்மையூட்டி ஈறுகளையும் தேய்த்துக் கொடுக்கிறது.

நாங்கள் சொல்வதை நீங்கள் அப்படியே ஏற்க வேண்டுமென்பதில்லை. போர்ஹென்ஸை உபயோகித்துப் பார்த்த பின்பே அதன் உண்மை மதிப்பை அறிய முடியும் என்பது உங்களுக்குத் தெரியும்.

போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட்
போர்ஹென்ஸ் ஃப்ளோரைட் டூத்பேஸ்ட்,

போர்ஹென்ஸ்
பராமரிப்பு
32 என்றும் பத்திரம்

போர்ஹென்ஸ் டூத்பவுடர்,
போர்ஹென்ஸ் டூத்பிரஷ்.